Koviloor Digital Library

உ

ஸ்ரீ ராம ஜெயம்

திருப்புல்லாணி யமக அந்தாதி



ACC NO. 35881 A/2

ராமநாதபுரம் மன்னர் அவைக்களப் புலவர்

மூதறிஞர் ரா. ராகவயங்கார்

விளக்கவுரை மு.நா. நாராயணன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4 - 2

உ

ராமஜெயம்

திருவேங்கடவன் பன்மணி மாலை
&
திருப்புல்லாணி யமக அந்தாதி



KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 35881

ராமநாதபுரம் மன்னர்
அவைக்களப் புலவர்
மூதறிஞர்
ரா. ராகவய்யங்கார்

விளக்கவுரை
மு.நா. நாராயணன்

கல்யாண நவமணி பதிப்பகம்
2775A, சுப்பிரமணியபுரம் 10வது வீதி தெற்கு,
காரைக்குடி-630 001.

Koviloor Digital Library

BIBLIOGRAPHICAL DATA

Title	:	**THIRUPPULLANI YAMAGA ANTHATHI**
Author	:	**M.N. Narayanan**
Publisher	:	**Kalyana Navamani Pathippakam** 2775A, Subramaniapuram 10th Street, South Extn., Karaikudi - 630 003.
Publication	:	First
Language	:	Tamil
Size of the Book	:	1/8 Demmy
Paper	:	13.7 Kg White Color Wove
No. of Pages	:	144
Price	:	115/-
Subject	:	Religious Poetry
Copy Right	:	©Author
No. of Copies	:	1000
Designed & Printed at	:	Poocharam Prints Karaikudi

First Print : 2019

The author of the book is alone liable for any legal action at his own risk and responsibility in case of disputes and criticism.

Koviloor Digital Library

This book is published with
the financial assistance of

Tirumala Tirupathi Devastanam's

under their scheme
'Aid to publish religious books'



திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
திருந்தவே நோக்கெனவே கருளுகண்டாய்

Koviloor Digital Library

நலந்தரும் நாராயணன் சொல்மாலை!

தமிழ்க் கடல் ராய சொ., சொ.முருகப்பா ஆகியோருடன் பயின்ற வித்துவான் முத்து நாராயணராகிய தம் தந்தையாரிடம் முறைப்படி முந்து தமிழ் கற்றுத் தேர்ந்து, பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலந்தரும் சொல்லாம் நாராயண நாமத்தினை தானும் கொண்ட இந்நூலாசிரியர், தன் நாமத்திற்கு ஏற்புடைத்தாயதாய் இந்நூலை எழுதியருளியுள்ளார். துயர் வரில் நினைமின், துயர் இலீர் சொல்லினும் நன்றாம் என்று திருமங்கை ஆழ்வார் உகந்து பாசுரம் பாடியருளிய திருப்புல்லாணிப் பெருமான் மீது ரா.ரா என்றே தமிழ் இலக்கிய உலகம் கொண்டாடி மகிழும் மூதறிஞர் ராகவ ஐயங்கார் அவர்கள் இயற்றியருளிய திருப்புல்லாணி யமக அந்தாதிக்கு தம் மதிநலத்தால் விளக்கவுரையும், தம் நாநலத்தால் திருவேங்கடவற்கு முத்து, பவழம், , முழுவைரம், மரகதம் எனப் பெருகும் அரும் பெறல் மரபு திகழ்ந்தொளி வீசும் பன்மணி மாலையும் படைத்துப் பக்தர்கள் மட்டுமன்றி, பணியும் பல்லோரும் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணன் மண்டு புகழினை, நாமும் பாடி உருகிப் பருகிட நம்மீது கொண்ட பொங்கும் பரிவாலே தந்துள்ளார்.

"A rose is a rose by whatever name you call GT COTEO LTUGUNG' புல்லணை எம்பெருமான் எனில் என்ன, வேங்கடவன் எனில் என்ன,---, உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும்--- எல்லாம் கண்ணன் எம்பெருமான் எனும் குருகூர் நம்மாழ்வார் போலே மு நா நாராயணனாரும் தாரகம், போஷணம், போக்கியம் எல்லாம் எமக்கும் அவனே என்று, அடியாரும் வானவரும் படியாய்க் கிடந்து இயங்கி திருவேங்கடவன் திருப்பவளச் செவ்வாய் கண்டு தித்திருக்கக் குலசேகர ஆழ்வார் பெருவிருப்பம் கொண்டமை போலே, கட்டளைக் கலித்துறை, அறுசீர் ஆசிரிய விருத்தம், பதினான்கு சீர் வண்ண விருத்தம், தாழிசை மடக்கு,

Koviloor Digital Library

நிந்தாஸ்துதி எனப் பல சொல்லணியாம் நறுமண அலங்கலாய்க் கோர்த்து பன்மணி மாலை பாடியருளியுள்ளார். அவரே சொல்வார் இதோ:

"ஆழங்காற்பட்ட தமிழ் ஆர்வத்தால் வேங்கடத்து ஐயன் தாளில்
வீழுங்கால் பலவாறாய்க் கவியூற்று என்னெஞ்சில் விளைய அன்பால்
வேழங்கால் பற்றுகரா விரைந்தழித்த அவன் கீர்த்தி விளங்கும் பாடல்
நாளும் நான் உரைத்திடுவேன் நாராயணா வென்னும் நாமம் சொல்லி"

எத்தனை பேராசை பாருங்கள் நாராயணனுக்கு திருமலைவாழ் நாரணன் மேல்! இதற்கு அவர் பிரதிப் பிரயோசனமாய் வேண்டுவதெல்லாம் பொன்னும், பொருளும்,போகமும் அன்று; விலை-மதியாத் தமிழாலே பன்மணிகொள் தார் சூட்டினேன் எனக்குன் அமிழ்தாம் அருளை அளி தமிழமுதம் சூட்டியதற்கு அருளமுதம் வேண்டுகின்றார்! அவ்வளவே! அன்போடுருகி அகம் குழைவார்க்கு கிள்ளித் தராது அள்ளித் தரும் அருளாளன், நம் நாராயணனாருக்கு என்னவெல்லாம் அருளிச் செய்துளான் தெரியுமா?

நாரணனாரை நால்வகைக் கவி வல்லார் இவர் எனலாமோ என்றே ஆக்கியுள்ளான் அதென்ன நால்வகை என்பீர்களாயின், உடனுக்குடன் பாடும் ஆசுகவி, இசை நயத்துடன் பாடும் மதுரகவி, பாடலும் பாடலின் பொருளும் சித்திர அலங்காரமாய் அமையப் பாடும் சித்திரக்கவி, விஸ்தாரமாக- விரிவாகப் பாடும் விஸ்த்தாரக் கவியெனும் - நால்வகையிலும் கவி பாட வல்ல வித்தகர்; அமலன் ஆதிபிரான் அடியிணை தோத்திரம் செய் தொழுகையரும், அழுகையரும் ஆவார் இவர்.

சுத்தானந்த பாரதியார் முதல் தொடங்கி, மு.வ., கொத்தமங்கலம் சுப்பு, பாரதி தாசனார், கி.வா.ஜ., அ.சீ.ரா., கவியரசர் கண்ண தாசன் எனப் பல்பெருங்கவிஞர் தலைமையில் கவியரங்கேற்றியருளிய கவினார் கலைக் கவிஞராம் இவர், திருவாலி நகர் கலியன் திருமங்கை மன்னன் போல், நாலுகவிப் பெருமான் ஆவதில் ஒன்றும் வியப்பேதுமில்லையே! அது மட்டுமோ? மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராத நோய்

Koviloor Digital Library

தீர்த்தருள வல்ல வைத்தியநாதர் முதல், பிள்ளாயார்பட்டியார், குன்றக்குடியார், மணக்குளத்தார், கண்ணுடையாள், வேந்தன் பட்டி நந்தியெம்பெருமான், அரியக்குடியார், திருமலைத் திரு வேங்கடம் உடையார் எனப் பெருகும் பல்வேறு தெய்வங்கள் மேல் பதிகங்களும், திருமுருகாற்றுப் படை, திருப்புகழ், வேல்விருத்தம், மயில் விருத்தம், கந்தர் கலி வெண்பா எனப் பல பைந்தமிழ் நூல்களுக்கு விளக்கவுரையும் விரிவுரையாய் விதந்தோதிய விற்பன்னரும் ஆவார்!

இந்நூலின் பெரும்பாகமாகிய திருப்புல்லாணி யமக அந்தாதி விளக்கவுரை கொஞ்சம் சிக்கலான காரியம். யமகப் பாடல்கள் யாப்பு சற்றே வித்தியாசமானவை; அடி முதலில் வந்த சொல்லே மடங்கிப் பின்னடிகளிலும் வரும். அவற்றப் பிரித்து பொருள் காண்பது என்பது எல்லோருக்கும் கைவராத கவிதைக் கள்ளி! ஆனாலும் மு.நா.நா. அவர்களுக்கு கட்டுப்படும் கவிக் கன்னியாவாள்! இராமநாதபுரம் மன்னரின் அவைக் களப் புலவராய இரா.இராகவய்யங்கார் ரகுகுல ராமன் பேர் கொண்டதாலும், அவன் பேருடை இராமநாதபுரத்திற்கு அணித்தே உள்ள தர்ப்ப சயனப் பெருமானாம் இராமபிரான் மீது கொண்ட தீராக் காதலாலும் ஆராத இன்பமருளும் அந்தாதி அணிவித்தருளினார்கள்.

கம்பன் மிக அழகாகச் சூசகமாக வருணனை வழி வேண்டு படலத்தே கோடிட்டுக் காட்டிடுவான்:

“ ‘தருண மங்கையை மீட்பது ஓர் நெறி தருக!’ என்னும்
பொருள் நயந்து நல் நூல் நெறி அடுக்கிய புல்லில்,
கருணைஅம் கடல் கிடந்தனன், கருங் கடல் நோக்கி;
வருண மந்திரம் எண்ணினன், விதி முறை வணங்கி. [6593]

இராமன் வருண மந்திரம் செபிக்க அடுக்கிய புல்லில் கிடந்தனன் என்று கிடந்த கோலத்தை, இன்றும் திருப்புல்லணையில் இராமன் சேவை சாதிக்கும் கிடந்த கோலத்தை, கம்பன் கண்டு களித்திருக்க வேண்டும்; அதனால் தான் தன் காப்பியத்தையும் அக்கோல இராமனைக்

Koviloor Digital Library

காட்டிடுவான். அத்தகு பழமையும் பெருமையும் நிறைந்த திருப்புல்லணையில் கிடந்தருள் பாலிக்கும் இராமன் மீது இராகவய்யாங்கார் கொண்ட காதலுக்கு சற்றும் மாற்றுக் குறையாத மனக் காதலால் நாராயணனாரும் வேங்கட மேய அரங்கன் பாலும், புன்னை பூஞ்சொரியும் புல்லணை மீதுயர் இராமன் பாலும் அருள் சொரியும் இந்நூல் மாலையை அணிவித்தருளி இருக்கின்றார்கள்.அவர் தம் இத்தகு இராம பணியும், இன்னருங் கவிப் பணியும் இனிதே இன்னும் பல்லாண்டு தொடர வாழ்த்தி, சொல்மாலை சூட்டி, நலம்பல தரும் நாராயணப் பேருடையார் மகிழ்வித்திட்டு மகிழப் பல்லாண்டு பல்லாண்டு பாடிடுவோமாக!; கூடியிருந்து குளிர்ந்து, குளிர்வித்திடுவோமாக !

கம்பன் அடிசூடி பழ பழனியப்பன்

கம்பன் கழகம்,
காரைக்குடி 28-4-2019

Koviloor Digital Library

என்னுரை

கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமாதாய்! குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
மனம்உருகும் வகையே கற்றாய்!
மேல்லணைமேல் முன்துயின்றாய்! இன்றுஇனிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ?
காகுத்தா! கரியகோவே!

என்று குலசேகர ஆழ்வார் ''இராமபிரானே! கானகம் சென்று கல்லால் ஆன பாலில் மேல் உறங்க நேர்ந்திடுமே அதனை நீ கற்றாயோ'' என மனம் உருகிப் பாடுகிறார். இந்தப் பாடலில் இராமபிரான் கல்லணையில் துயில நேரிடுமே என மட்டும் ஆழ்வார் வருந்திப் பாடுகிறார். ஆனால் இராமபிரான் கல்லணையில் மட்டுமல்ல புல்லணையிலும் படுத்து உறங்கக் கற்றவன் என்பதைப் பேரறிஞர், தமிழ்வித்தகர், ரசிகமணி, டி.கே.சி. அவர்களின் சீடர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையுடன் உறவாடி மகிழ்ந்தவர். கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் என் சகோதரியின் கணவர். இலக்கியப் பதிப்பகம் வே. சோமையா அவர்கள் ஆகியோரின் நெருங்கிய நண்பர் திரு. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் திருப்புல்லாணி என்னும் தலத்தில் பெருமான் புல்லணையில் துயின்ற காட்சியைக் கண்டு இன்புற்று அவர் எழுதிய வேங்கடம் முதல் குமரி வரை என்ற நூலில் விளக்கி உள்ளார். அவ்விளக்கமே எனக்கு இந்த திருப்புல்லாணி யமக அந்தாதிக்கு உரை எழுதத் தூண்டுகோலாய் அமைந்தது. மூல நூலில் இராமநாதபுரம் அவைக்களப் புலவர் மூதறிஞர் திரு. ரா. ராகவ அய்யங்கார் திருப்புல்லாணியில் துயிலும் எம்பெருமானின் புகழை அறிஞர்கள் வியந்து போற்றும் வண்ணம் யமக அந்தாதியாய் அமைத்து வழங்கினார். எனக்கு 'யமக அந்தாதி'

Koviloor Digital Library

பாடும் அளவுக்கு ஞானம் இல்லையென்பதால் மூலத்தின் பதம் பிரித்து மிகுந்த தமிழறிவு கொண்டவர்கள் மட்டுமே படித்துப் புரிந்து கொள்ளும்படி இருந்ததை மூலத்தின் சுவை கெடாமல் எளிமைப்படுத்தி சொற்ப தமிழறிவு உள்ளவர்களும் படித்துப் பலன் பெறும்படி இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல முயற்சி செய்துள்ளேன். என் முயற்சியில் நிறை, குறைகளைக் கருதாமல் நூலைப் படித்து எளிதில் பொருள் உணர்ந்து எம்பெருமான் 'தெய்வச்சிலையான்' எனப்படும் புல்லணையில் துயின்ற பெருமானின் பேரருள் கிடைத்து மகிழ்வீர்களாக.

இந்த நூலுக்கு நான் கேட்டவுடன் தமது பல்வேறு பணிச்சுமைக்கு இடையில் மறுப்பு ஏதும் கூறாமல் புலவர்கள் பாராட்டும் வண்ணம் அணிந்துரை வழங்கி என் கண்ணில் நீர்வரச் செய்து, என்னைப் பெருமைப்படுத்தி உள்ளார்கள் கம்பன் அடிசூடி திரு. பழ. பழனியப்பன் அவர்கள். அந்த அணிந்துரையே அவர்களது ஆன்ற தமிழறிவுக்கும் பன்னூல் புலமைக்கும் சான்றாய் அமைந்துள்ளது. அன்னாருக்கு என் ஆயிரமாயிரம் நன்றி.

நூலை அழகுற மிகுந்த பொறுமையுடன் அச்சிட்டு உதவிய 'பூச்சரம்' திரு. பழ. மணிகண்டன் அவர்களின் பேருதவி என்னால் மறக்க இயலாது. அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இனி நூல் உங்கள் கையில். தேர்வை எழுதிவிட்டு முடிவை எதிர்நோக்கும் மாணவன் போல்,

மு.நா. நாராயணன்

Koviloor Digital Library

என்னுரை

கொல்லனைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
குலமாதாய்! குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
மனம்உருகும் வகையே கற்றாய்!
மெல்லணைமேல் முன்துயின்றாய்! இன்றுஇனிப்போய்
வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ?
காகுத்தா! கரியகோவே!

என்று குலசேகர ஆழ்வார் ''இராமபிரானே! கானகம் சென்று கல்லால் ஆன பாலில் மேல் உறங்க நேர்ந்திடுமே அதனை நீ கற்றாயோ'' என மனம் உருகிப் பாடுகிறார். இந்தப் பாடலில் இராமபிரான் கல்லணையில் துயில நேரிடுமே என மட்டும் ஆழ்வார் வருந்திப் பாடுகிறார். ஆனால் இராமபிரான் கல்லணையில் மட்டுமல்ல புல்லணையிலும் படுத்து உறங்கக் கற்றவன் என்பதைப் பேரறிஞர், தமிழ்வித்தகர், ரசிகமணி, டி.கே.சி. அவர்களின் சீடர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையுடன் உறவாடி மகிழ்ந்தவர். கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன் அவர்கள் என் சகோதரியின் கணவர். இலக்கியப் பதிப்பகம் வே. சோமையா அவர்கள் ஆகியோரின் நெருங்கிய நண்பர் திரு. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் திருப்புல்லாணி என்னும் தலத்தில் பெருமான் புல்லணையில் துயின்ற காட்சியைக் கண்டு இன்புற்று அவர் எழுதிய வேங்கடம் முதல் குமரி வரை என்ற நூலில் விளக்கி உள்ளார். அவ்விளக்கமே எனக்கு இந்த திருப்புல்லாணி யமக அந்தாதிக்கு உரை எழுதத் தூண்டுகோலாய் அமைந்தது. மூல நூலில் இராமநாதபுரம் அவைக்களப் புலவர் மூதறிஞர் திரு. ரா. ராகவ அய்யங்கார் திருப்புல்லாணியில் துயிலும் எம்பெருமானின் புகழை அறிஞர்கள் வியந்து போற்றும் வண்ணம் யமக அந்தாதியாய் அமைத்து வழங்கினார். எனக்கு 'யமக அந்தாதி'

Koviloor Digital Library

பாடும் அளவுக்கு ஞானம் இல்லையென்பதால் மூலத்தின் பதம் பிரித்து மிகுந்த தமிழறிவு கொண்டவர்கள் மட்டுமே படித்துப் புரிந்து கொள்ளும்படி இருந்ததை மூலத்தின் சுவை கெடாமல் எளிமைப்படுத்தி சொற்ப தமிழறிவு உள்ளவர்களும் படித்துப் பலன் பெறும்படி இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல முயற்சி செய்துள்ளேன். என் முயற்சியில் நிறை, குறைகளைக் கருதாமல் நூலைப் படித்து எளிதில் பொருள் உணர்ந்து எம்பெருமான் 'தெய்வச்சிலையான்' எனப்படும் புல்லணையில் துயின்ற பெருமானின் பேரருள் கிடைத்து மகிழ்வீர்களாக.

இந்த நூலுக்கு நான் கேட்டவுடன் தமது பல்வேறு பணிச்சுமைக்கு இடையில் மறுப்பு ஏதும் கூறாமல் புலவர்கள் பாராட்டும் வண்ணம் அணிந்துரை வழங்கி என் கண்ணில் நீர்வரச் செய்து, என்னைப் பெருமைப்படுத்தி உள்ளார்கள் கம்பன் அடிசூடி திரு. பழ. பழனியப்பன் அவர்கள். அந்த அணிந்துரையே அவர்களது ஆன்ற தமிழறிவுக்கும் பன்னூல் புலமைக்கும் சான்றாய் அமைந்துள்ளது. அன்னாருக்கு என் ஆயிரமாயிரம் நன்றி.

நூலை அழகுற மிகுந்த பொறுமையுடன் அச்சிட்டு உதவிய 'பூச்சரம்' திரு. பழ. மணிகண்டன் அவர்களின் பேருதவி என்னால் மறக்க இயலாது. அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இனி நூல் உங்கள் கையில். தேர்வை எழுதிவிட்டு முடிவை எதிர்நோக்கும் மாணவன் போல்,

மு.நா. நாராயணன்

Koviloor Digital Library

முன்னுரை

அந்தாதி இலக்கணம்

(அந்தம் + ஆதி = முடிவே முதலானது)

ஓர் செய்யுளில் இறுதியில் வரும் சீா அடுத்த செய்யுளில் முதல் சீராக அதே பொருளிலோ அல்லது மாறுபட்ட பொருளிலோ வரும்படி அமைவதே அந்தாதி எனப்படும்.

"ஈறு முதலாத் தொடுப்பது அந்தாதி"

சொல்லால் பொருளால் தொடரும் தொடர்
எல்லாம் அவற்றுள் எழுத்து அசை சீர் நிலைகள் - மல்கு
மடிசொற் றொடர் நிலைகள் அந்தம் முதலாப்
படிவைத்தனர் முன் பகர்ந்து"

அந்தாதியானது வெண்பாக்களாலும் கட்டளைக் கலித் துறையாகவும் பாடப்படுவன. "வெண்பா கலித்துறை வேண்டிய பொருளில், பண்பாய் உரைப்பது அந்தாதித் தொகையே!" பெரும்பாலும் அந்தாதிகள் கட்டளைக் கலித்துறையிலயே அமைவன! திருஞான சம்பந்தா் பாடிய ஏகபாதம் எனும் பதிகமே முதன் முதலில் பாடப்பட்ட அந்தாதி என்பா் புலவா்கள்.

விளக்கம்

'யமக அந்தாதியை வாசிமினே' என்று அழகிய மணவாளதாசா் என்னும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காா் பாடுவா்! அவா் பாடிய திருவரங்கத்தந்தாதியும் யமக அந்தாதியே! இவா்க்குப் பின் பல புலவா்களும் யமக அந்தாதி பாடியுள்ளானா் இராமநாதபுரம் மன்னரின் அவைக்களப் புலவரான பெரும் புலவா் ரா. ராகவய்யங்காா் பாடியது தான் 'புல்லை யந்தாதி இதுவும் யமகமே!' இதைப் பாடிய காலம்

Koviloor Digital Library

ஆங்கிர வருஷம் தை மாதம் (1929 ஜனவரி மாதம் 5ம் தேதியில்) நூல் நிறைவுற்றது.

யமகப் பாடல்களில் அடி முதலில் வந்த சொல்லே மடங்கி பின்னடிகளிலும் வருவதால் பிரித்துப் பொருள் காண்பது சற்று கடினமே. மடக்குச் சொல் முன்பின் அசைகளுடன் கூடியும் பிரிந்தும் சொல்லாக அமையும்! கூர்ந்து பார்த்து பொருள் தொடர்பிற்கு ஏற்ற வண்ணம் சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். எளியேனின் சிற்றறிவுக்கு எட்டியபடி பாடல்கள் சொல் பிரித்துக் காட்டியுள்ளேன். குறைகள் இருப்பின் பொருத்தருள்க! நிறைகள் காணின் வாழ்த்திடுக!

மு.நா. நாராயணன்

Koviloor Digital Library

திருப்புல்லாணி யமக அந்தாதி & திருவேங்கடவன் பன்மணிமாலை

புத்தகச் சுருக்கம்

'திருப்புல்லாணி யமக அந்தாதி' எனும் பிரபந்தம் ராமநாதபுரம் மன்னரின் அவைக்களத்தை அலங்கரித்த தமிழ்ப் புலவர்களில் தலைமைப் புலவரான திரு. ரா. ராகவ அய்யங்கார் அவர்களால் 1933ஆம் ஆண்டு எழுதப்பட்டது. சொற்சுவையும், பொருட்சுவையும் மிக்க இவ்வந்தாதி திருப்புல்லாணி (திருப்புல்லணை) ஸ்தலத்தில் கோவில் கொண்ட ஸ்ரீ ஆதிஜெகநாதப் பெருமாள், தெய்வச்சிலையார், தர்ப்பாசன அழகனார் எனும் சிறப்புப் பெயர்கள் கொண்ட ஸ்ரீ இராமபிரான் மீது 100 பாடல்களைக் கொண்ட அந்தாதியாகும்! இக்கோவிலில் கோதண்டராமர், புல்லணையில் பள்ளி கொண்ட பெருமாள், பதுமாசனித் தாயர் சன்னதிகளும், பெரிய திருவடி சிறிய திருவடி சேனை முதலியார் சன்னதிகளும் உள்ளன. இராமநாதபுரத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள கோவிலில் திருக்கோவலூர் மலையமான் திருமுடிக்காரி, தலையாலங்கானத்து போர் வென்ற பாண்டியன் மற்றும் சேர, சோழ மன்னர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன என்பதை ஆசிரியர் விளக்குகின்றார்.

இத்தலத்தின் மூல தெய்வமான ஸ்ரீ ஆதி ஜெகநாதப் பெருமாள் 'புல்லணை பள்ளி கொண்ட பெருமாள்' மீது எல்லையற்ற பக்தியும் அன்பும் கொண்ட திரு. ரா. ராகவ அய்யங்கார் 100 பாடல்கள் அனைத்திலும் தமது அருட்புலமை வெளிப்படும்படி இதிகாச சம்பவங்களையும், வரலாறுகளையும் வாணாசுரன், ததிகோபன் வரலாறுகளையும் ஆங்காங்கே தெளித்து உள்ளார்.

Koviloor Digital Library

இப்பெருமானது தலத்தில் யமன் கூட தனது கடுமையைக் குறைத்துக் கொண்டு (யம டம்பமில்=யமனது கடுமை இல்லாத) உள்ளான் என்பதையும், இப்பெருமானின் அருளால் தலத்தை சுற்றி வசிக்கும் மீனவர்கட்கும், தீங்கு நேராமல் காக்கின்றார் என்பதையும் குறிப்பிடுகிறார். உவமை வளம் மிக்க இவ்வந்தாதிகளில் பல அரிய உவமைகளைக் கொட்டிய புலவர் அவையடக்கமாகவும் பாடியுள்ளார். யமக அந்தாதியாகப் பாடப்பட்ட இப்பிரபந்தம் சிறந்த தமிழறிஞர்களால் மட்டுமே புரிந்துகொள்ளும்படி இருப்பதை உரையாசிரியர் எளிமைப்படுத்தி சந்தி பிரித்து மூலத்தின் சுவை சிதைவு பெறாமல் உரையும் எழுதி, ஆங்காங்கே அரும்பத உரைகளையும் குறிப்பிட்டுள்ளார். நூலின் அருமையை இளந்தலைமுறையினர் அறியும்படி கொண்டு சேர்த்துள்ளார்.

நூலின் பிற்பகுதியில் திருவேங்கடப் பெருமானின் அருட்கடாட்சத்தினால் உரையாசிரியர் இயற்றிய அப்பெருமானின் புகழைப் பாடும் பாடல்களாக 'திருவேங்கடவன் பன்மணிமாலை' என்னும் நூலையும் சேர்த்துள்ளார்.

உரையாசிரியர்
மு.நா. நாராயணன்

Koviloor Digital Library

காப்பு

புளிப்புற் றிராவுல கைக்கைத் தறுபகை போன்றவழனீ
 றுளப்பற் றுவர்த்துத் துவரப் புறப்பற்
றொழித்தொண்டமிழ்
அளித்துப் பெயரும் தித்திக்க குருகை யினாரமுதைக்
 களித்து பருகிற் றுலகுண் டுமிழருட் கார்ப்புயலே! 1

புளிப்புற்றிரா உலகை கைத்து அறுபகை போன்ற அழநீர்
உளப்பற்று உவர்த்து துவரப் புறப்பற்று ஒழித்து ஒண்தமிழ்
அளித்து பெயரும் தித்திக்க குருகையின் ஆரமுதை
களித்துப் பகுகிற்று உலகு உண்டு உமிழ் அருள்
கார்ப்புயலே!

(புளிப்புற்றிரா-புளியின் கீழ் உள்ள புற்று)

புளிப்பு இல்லாது அமுதினைக் காத்து உலகினை உண்டு அதில் சுவை காணாததால் திருக்குறுங்குடி என்னும் குருகையில் புளியின் கீழ் புற்றில் இருந்து அறுபகை நீங்க அவற்றை வெறுத்து நம்மாழ்வார் பாடிய செந்தமிழ்ப்பா பாடல்களை களிப்போடு பருகிற்று கார்வண்ணனாகிய திருமால்! அவரே இன்னூலுக்கு காப்பாக அமைவார்!

Koviloor Digital Library

அவையடக்கம்

மதியின் குறையலனா மங்கைமன் திருவாலியன்பன்
பதியிற் றலைகொள்புல் லாணிக் கமிழ்தில் பதிகமிட்டான்
விதியற்ற யானுமி வந்தாதி சாத்தினன் மென்முளரி
துதியிற் பெய்வான்முன் நெருஞ்சிக்
கொடிபூச் சொரிந்த தொத்தே.

மதியில் குறையலனாம் மங்கைமன் திருவாலியன்பன்
பதியிற் றலைகொள்புல்லாணிக் கமிழ்தில் பதிகமிட்டான்
விதியற்ற யானுமிவ் வந்தாதி சாத்தினன், மென்முளரி
துதியிற் பெய்வான்முன் நெருஞ்சிக் கொடிபூச் சொரிந்த தொத்தே.

அறிவில் குறையில்லாத திருக்குறையலூரை உடையவனாகிய திருமங்கை மன்னன் திருவாலியன்பன் பல பதிகட்கு தலைமையில் விளங்கும் திருப்புல்லாணியில் தனது அறிவின் மிகுதியால் அமுதத்துக்கு ஒப்பாகிய திருப்பதிகம் சாத்தினான். விதிக்கட்டுக்கு அடங்காத இழிந்தவனாகிய நானும் இவ் வந்தாதியினை, மெல்லிய தாமரை மலரை பக்தியோடு சமர்ப்பிக்கின்றவனின் முன் நெருஞ்சிக் கொடியின் பூக்களை சொரிந்தது போல் சாத்தினேன்.

Koviloor Digital Library

அந்தாதி

புல்லையம் பாக்கத்தன் பார்ந்தோர்க்
கிரங்கி பொறி மகளைப்
புல்லையம் பாக்கதன் றங்காந்
தெழுமைப் புவிதெரித்தோன்
புல்லையம் பாக்கத்தன் பூங்கழல்
போற்றப் புகலிலர்க்குப்
புல்லையம் பாக்கத்தன் னந்தவஞ்
செய்யப் புரிதி நெஞ்சே!

புல்லை அம் பாக்கத்து அன்பு ஆர்ந்தோர்க்கு
இரங்கி பொறிமகளை
புல்லு ஐ அம்பாக்கத்து அன்று அங்காந்து
எழுமைப்புவி தெரித்தோன்
புல்லை அம்பாக்கு அத்தன், பூங்கழல்
போற்றப் புகல் இலர்க்கு
புல் ஐயம் பாக்க தன்னந்தவம்
செய்யப் புரிதி நெஞ்சே!

விளக்கம்:

திருப்புல்லாணி ஆகிய அழகிய கடற்கரை ஊரில் தன் மீது அன்பு கொண்டவர்களுக்கு இரக்கமுற்று அருள் செய்பவனும் இலக்குமி தேவியை தழுவுபவனும் ஆகிய ஐயன், தனது தாயின் விழிகளில் தெரியும்படி தனது வாயைத் திறந்து எழு உலகினையும் காட்டியவன்! புல்லையே அம்பாக ஆக்கிய (கடல் மீது எய்த) தலைவன், அவனது பூப்போன்ற பாதங்கள் போற்றி செய்யவும் செய்யாது வேறு அடைக்கலம் இல்லாத வர்களுக்கு எளிய அன்னதானம் செய்ய என் நெஞ்சே சிறிதளவாயினும் தவம் செய்வாய்.

அரும்பொருள்: பாக்கம் - கடற்கரை அருகில் உள்ள சிற்றூர் அம்பாக்கத்து - அம்பா + அக்கத்து (அதாவது தாயாரின் விழிகளில்) தன்னம் - சிறிதளவு.

Koviloor Digital Library

புரியா வையினும் சிறந்தும்ப
ரார்பொற் புரிசையைப் பாம்
புரியா வையினும் தலையாற்
பொரும்புல்லைப் புண்ணியன் சீர்
புரியா வையினுங் கதிதரு
வான்சரண் பூண்கவலம்
புரியா வையினுதி வேல்
விழியார்களம் போன்மென்பிரே! 2

புரியாவையினும் சிறந்து உம்பர் ஆர்
பொற்புரிசையை பாம்புரி
ஆவயின் உந்து அலையால்
பொரும்புல்லை புண்ணியன்
சீர்புரியா வையினும் கதிதருவான்
சரண்பூண்க வலம்புரி
ஆயினுதிவேல் விழியார் களம்
போன்ம் என்பிரே.

விளக்கம்:

ஊர்கள் யாவற்றிலும் சிறந்து வானில் உள்ள தேவர் உலகில் உள்ள பொற்கோட்டையினை (அவ்விடத்திலே) மோதும் கடல் அலைகள் போர் செய்யும்படி அமைந்த திருப்புல்லாணி யில் உள்ள அறத்தின் வடிவான எம்பெருமான் அவனது அருமை பெருமைகளைச் சொல்லாது (அவனைத் துதியாது) வைதாலும் (உமக்கு) நற்கதி அருள்வான்! அவனைச் சரண் அடையுங்கள்! அதை விட்டு சிற்றின்ப ஆசையால் மாதர்களின் கழுத்து வலம்புரிச் சங்குபோல் உள்ளதென்றும் அவர்கள் கண்கள் கூர்மையான வேல் போலும் உள்ளன என்றும் சொல்லும் அறிவு இல்லாதவர்களே.

பாம்புரி - அகழி.

Koviloor Digital Library

என்பா பாரணங் கபிலம்
பொருவுமென் போற்குய்யுமா
றென்பா பரணங் கடிந்தாற்று
நன்மருந்தே யெண்குண
னென்பா பரணங் கனைமார்
குழும்புன மேய புல்லையா!
யென்பா பரணங் களனார்
பவன் பரவு ஈச்சுரனே! 3

என்பா பரணம் கபிலம்
பொருவும் என்போற்கு உய்யும் ஆறுஎன்?
பாபரணங் கடிந்து ஆற்றும்
நன்மருந்தே! எண்குணன் என்பா!
பரண் அங்கனைமார் குழுஉம்
புனமேய் புல்லையாய்!
என்பு ஆபரணம் களனார்
பவன் பரவு ஈச்சுரனே!

விளக்கம்:

என்னுடைய செய்யுள்கள் பரணா் கபிலா் போன்ற புலவா்களின் செய்யுள் ஒத்தன என்று சொல்லும் (மதியற்றவா் கட்கு) பிழைக்கும் வழி ஒன்று உளதா? பாவங்களால் ஏற்பட்ட கொடிய ரணங்களை அறுவை சிகிச்சை செய்து ஆற்றும் நல்ல மருந்தானவனும் எட்டு குணங்களை உடைய வனும் ஆனவன் என்று போற்றப்படுபவனே! பரண்களில் மாதா்கள் கூடி அமா்ந்துள்ள விளை நிலங்களை உடைய திருப்புல்லாணி ஊரினாய்! எலும்பை அணிகலனாக கழுத்தில் இட்ட சிவன் துதிசெய்யும் ஈஸ்வரனே! (இப்பாடலால் புலவரது தன்னடக்கம் காட்டப்படுகிறது)

Koviloor Digital Library

சுரதமிக்காய மொழியார்
வயிற்புரி தூர்த்தன்பிசா
சுரதமிக் காய வின்பென்னா
னெனவெற்றொ லைப்பை கொல்பே
சுரதமிக் காய வரும்பாப்
பதின்மர் தொடுத்தணியீச்
சுரதமிக் காயருணீத் தென்பராற்
புல்லைத் தொல்பரனே. 4

சுரதம் இக்கு ஆய மொழியார்
வயின்புரி தூர்த்தன்
பிசாசுரதம் இக்காய இன்பு
என்னான்! என்றெனை தொலைப்பை கொல்!
பேசு ரதம் மிக்கு ஆய அரும்
பாப்பதின்மர் தொடுத்தணி
ஈச்சுர! தமிக்காய் அருள்நீத்து
என்பர்! புல்லைத் தொல்பரனே!

விளக்கம்:

கலவியை கரும்பு போன்றும் பேசும் மடந்தையர் பால் பழகும் தூர்த்தன்! இவ்வுடலின் இன்பம் கானல் நீர் எனச் சொல்லவுமாட்டேன்! புல்லாணி உறையும் தொன்மையான கடவுளே! என்று என்னைத் தொலைப்பாய்? பத்து ஆழ்வார் பாசுரங்களை தொடுத்து சாத்திய ஆண்டவனே! அருளை விடுத்து தனியே இரு என்று பெரியோர் சொல்வர்! (அங்ஙனம் சொல்வதற்கு மாறாக என்னைத் தூர்த்தன் எனக் கருதி அழிப்பாயா?)

பிசாசுரதம்-பேய்த்தேர்; கானல்நீர்.

Koviloor Digital Library

பரசமயங்கரு விற்கேது வென்று
பரமனையின்
பரசமயங்கருந் தோற்குத் தரும்
புல்லைப் பண்ணவனைப்
பரசமயங்கருந் சித்தந் தெளியலர்
பாழ் மறலி
பரசமயங்கரு தாதெய்து
காலம் பரிபவரே! 5

பரசமயம் கருவிற்கு ஏது என்று
பரமனை,
இன்பரசமயம் கருந்தோல்க்கும்
தரும் புல்லைப் பண்ணவனை,
பரச மயங்கு அரும் சித்தம்
தெளியலர்! பாழ்மறலி
பரசு சமயம் கருதாது எய்து காலம்
பரிபவரே.

விளக்கம்:

வேறுபட்ட சமயங்கள் கருவில் உள்ள குழந்தைக்கு கராண மாய் விளங்கும் எனக்கருதி, பரமனை ஆனந்தமயமான ரகச்சுவையினை கரிய யானைக்கும் தந்த புல்லாணியில் உறையும் கடவுளை வணங்குவதற்கு மனத்தில் இசையாதவர் (மனம் தெளியாதவர்) எமன் கொடூர குணமுடன் தன்னு டைய ஆயுதமான கணிச்சிப் படையை எய்ய வேண்டிய வேளையைக் கருதாது எய்கின்றபோது கலங்குவர்.

கருந்தோல்-கரிய நிறமுடைய யானை; பரசல்-வணங்கல்; பரசு-எமனுடைய ஆயுதமான கணிச்சி.

Koviloor Digital Library

பரிசையு மன்ற விழிந்தாரைச்
செய்யெனைப் பாலிப்ப தெப்
பரிசைய மன்றமர்ந் தாடும்
பினாகி பதைத்திரிய
பரிசைய மன்ற படைவாணன்
பல்கரம் பாழ்செய்தவும்
பரிசைய மன்றற் பொழிலோங்கு
புல்லைப் பதிக்கரசே! 6

*பரிசயம் மன்ற இழிந்தாரைச்
செய் எனை பாலிப்பது
எப்பரிசு ஐய! மன்று அமர்ந்து ஆடும்
பினாகி பதைத்து இரிய
பரிசை அமன்ற படை வாணன்
பல்கரம்பாழ் செய்த
உம்பர் இசைய மன்றற் பொழிலோங்கு
புல்லைப் பதிக்கரசே!*

விளக்கம்:

இழிந்தவர்களை பரிசயம் செய்து கொண்டு அவரோடு உறவாடும் என்னைப் புரப்பது எப்படி? ஐயனே! அம்பலத்தில் இருந்து நடனமாடும் பினாகி என்ற வில்லினை உடைய சிவன் உயிர் பதைத்து ஓட கேடகங்கள் நெருங்கிய படைகளை உடைய பாணாசுரனின் பலகரங்களையும் அழித்தவனும் வான் அளவும் (தேவர் உலகை) சோலைகள் செறிந்த திருப்புல்லாணி என்ற ஊருக்கு அரசனும் ஆனவனே!

பலகரங்களை உடையவாணாசுரன் திருமாலோடு போர் புரிந்த காலத்து சிவனிடம் அடைக்கலம் பெற்றான். அப்படி இருந்தும் சிவனின் காப்பையும் மீறி திருமால் வாணாசுரனின் கரங்களை வெட்டி வீழ்த்தினார் என்பது புராண வரலாறு. அமன்ற-நெருங்கிய.

Koviloor Digital Library

பதியா தியங்க நெறியாதென்
றேற்கொன்று பன்னினன் பார்ப்
பதியா தியங்கனை யாரின்
மிக்கீர் செவி பாடுறுநீ
பதியா தியங்கழற் காளாவம்
யாமென் பரகத்தன்றிப்
பதியா தியங்கழுமும் புல்லை
மேய பரன் வெற்பிலே! 7

பதியாது இயங்க நெறியாது
என்றேற்கு ஒன்று பன்னின்
நன்பார்ப்பதி ஆதி அங்கனையாரின்
மிக்கீர்! செவி பாடுஉறும்
நீபதி ஆதி அம்கழற்கு ஆளாவம்
யாம் என்பர் அகத்து அன்றி
பதியாது இயம் கழுமும் புல்லை
மேய பரன் வெற்பிலே!

விளக்கம்:

நன்மை தரும் பார்வதி முதலாய மடந்தையரைக் காட்டிலும் பெருமை கொண்ட பெண்களே! நான் நற்கதி அடையும் ஊர் எது அதற்குச் செல்லும் வழி என்று என்பதைக் கூறினால் என் செவிகள் பெருமை பெறும்! திருப்புல்லாணி யின் தலைவனான நீயே இறைவன் ஆகிறாய். உன்னுடைய அழகிய திருவடி களுக்கே நாங்கள் தொண்டராவோம் என்று கூறுவோர் நெஞ்சத்தில் மட்டுமல்லாது பற்பல வாத்தியங் களின் இசை முழங்கும் புல்லாணியிலும் விளங்குகிறாய்! புல்லாணியின் கடவுளே!

Koviloor Digital Library

பரம தியாக வுவமையி
லாதிபகவ பொன்னம்
பரம தியாக முரிஞ்சும்
பொழில் புல்லை பண்பகளே
பரம தியாக வெடுத்துழல்
கின்றவிப் பாவியென்பம்
பரம தியாக பதியா நின்
றாளில் பதித்தருளே! 8

பரமதியாக! உவமையிலா
ஆதிபகவ! பொன்அம்பர!
மதி ஆகம் உரிஞ்சு பொழில்
புல்லைப் பண்ப!
களேபரம் அதியாக எடுத்துழல்கின்ற
இப்பாவி என்
பம்பர மதி, யாகபதியாம்
நின் தாளில் பதித்தருளே!

விளக்கம்:

மேன்மை பொருந்திய வள்ளலே! ஒப்புநோக்கிட யாரும் இல்லாத முழுமுதல் கடவுளே! பொன்னாலான பீதாம் பரத்தை அணிந்தவனே! வானைத் தொடும் அளவிற்கு (சந்திரனின் மேனியில் பொழியும் அமுதினை உறிஞ்சிடு) சோலைகளை உடைய புல்லாணியில் உள்ள பண்பாளனே! பாவச் செயல்கள் மிக்க இந்த உடலை எடுத்து உழல்கின்ற அடியேனுடைய புத்தி பம்பரம் போல சுழல்கின்றது. அதனை வேள்விகளுக்கெல்லாம் அதிபதியான உன் தாள்களில் பதித்து மேன்மை பெறுமாறு அருள்வாயாக!

Koviloor Digital Library

அருவருக் கத்தகும் புன்மத
நூல ரளந்தறியா
அருவருக் கத்தழ கார்பொன்
னறுவைநன் றார்த்தவுரு
அருவருக்க த்தரளக் காங்கடற்
புல்லை யாரடியார்
அருவருக் கத்தணுகப் பெறுவா
ரெமை யாள்பவரே! 9

அருவருக்கத் தகும், புன்மத நூலர்
அளந்து அறியா
அருவர், உக்கத்து அழகு ஆர்
பொன் அறுவை நன்று ஆர்த்த
உருவர்! உவருக்கு அத்தரளக்கு
ஆம் கடல் புல்லையார் அடியார்
அருவருக்கத்து அணுகப் பெருவர்
எம்மை ஆள்பவரே!

விளக்கம்:

வெறுத்திட வைக்கும் வேறு சமய நூல்களை எழுதியவர்கள் ஆராய்ந்து அறிய முடியாத அருவமாய் உள்ளவர், இடையில் அழகுபொலியும் பொன்னாடையினை நன்கு கட்டிய உருவத்தினர், உப்புக்கும் பெருமை மிக்க முத்துக்களுக்கும் இடம் ஆகிய கடலின் அருகே அமைந்த திருப்புல்லாணிப் பதியினார், அவரது அடியார்கள் அரிய வகுப்பில் நெருங்கி அடையும் பேறு பெற்றவர்கள்! அவர்களை தொண்டர் களாய்க் கொண்டவர் ஆவர்.

Koviloor Digital Library

ஆளானஞ் சாயக மாதிர
  நேர்களி றட்டவன் செய்
ஆளானஞ் சாயக னென்றெனைத்
  தேற்றிய அண்ணனிற்கே
ஆளானஞ் சாயகம் புல்லாக்கி
  யோயெனு மன்பரை வந்து
ஆளானஞ் சாயகண் ணன்புல்லை
  மேய வருண்முதலே! 10

ஆளானம் சாய் அகல் மாதிரம்
  நேர்களிறு அட்டவன்
செய்யாளான் அகன் அஞ்சாய்
  என்று எனைத் தேற்றிய அண்ணல்
நிற்கே ஆள் ஆனம்! சாயகம்
  புல்லாக்கியோய்! எனும் அன்பரை
வந்து ஆள்! ஆன் அஞ்சு ஆய
  கண்ணன் புல்லைமேய அருள்முதலே.

விளக்கம்:

கட்டுதறியினை சாய்த்து அகற்றும் மாமலை போன்ற யானையினை கொன்றவன், திருமகளாகிய இலக்குமியை உடையவன்! மனத்தில் அச்சம் கொள்ளாதே என்று என்னைத் தெளிவுபெறச் செய்த அண்ணல்! உனக்கே நாங்கள் அடிமை யாயினம் என்னும் அன்பரை வந்து ஆட்கொள்வாய்! புல்லை அம்பாக மாற்றியவனே! திருப்புல்லாணியில் அருள் செய்யும் பசுவின் கண் உள்ள ஐந்தும் அவற்றின் தூய்மையும் ஆன முழு முதற் கடவுளே! (ஆளானம்-யானை கட்டும் தறி; சாயகம்-அம்பு.)

Koviloor Digital Library

முதலைக் கடலைப் புரிபுல்லை
யார்க்கு முகுந்தனுக்கு
முதலைக்கடலை யணிவாற்
கரியர்க்கு முந்தை யின்ன
முதலைக் கடலை கடைந்தளித்
தாற்கன்பு மூள்வர் திரு
முதலைக் கடலைக் குளப்புழுக்
கீவல் முரல் கொடியே! 11

முதலைக்கு அடலைப் புரி
புல்லையார்க்கு, முகுந்தனுக்கு,
முதல் ஐக்கு அடலை அணிவார்க்கு,
அரியர்க்கு முந்தை
இன்னமுது அலைக்கடலைக் கடைந்து
அளித்தாற்கு, அன்பு மூள்வர்
கடலைக் குளப்புழுக்கு ஈவல்!
திருமுதலை முரல் கொடியே!

விளக்கம்:

முதலையோடு கஜேத்திராழ்வார்க்காகப் போர் செய்த புல்லாணியை உடையானும் முகுந்தனாகிய பெருமானுக்கு, முதற் கடவுளாகிய திருமாலுக்கு, திருநீறு அணிபவராகிய சிவனுக்கு அரியவனாகிய பெருமானுக்கு, முற்காலத்தில் அலைசார் கடலை மேரு மலையை மத்தாக்கி வாசுகி எனும் பாம்பினைக் கயிறாக்கி கடைந்து அமிர்தம் அளித்து உதவிய வனுக்கு, அன்பு கொண்டவராகிய தலைவனும் தலைவியும் திரும்பி வருமாறு காக்கையே நீ கரைவாய்! அங்ஙனம் கரைந்தால் உனக்கு வெல்லத்தையும் கடலைப் பருப்பையும் கூட்டிச் செய்த தின்பண்டத்தை உனக்குத் தருவேன். (குளப் புழுக்கு கடலையும் வெல்லமும் சேர்ந்த தின்பண்டம், கொடி காகம், முரல்தல் ஒலித்தல், அடல் திருநீறு.)

Koviloor Digital Library

ஏனைய வரனைத்தந் தாள்கிலாய்!
புல்லை யெந்தை! நிற்றீர்ந்
தேனைய வரனையன் முதலோர்ப்
பணியே னிவ்வெளி
ஏனைய வரனை வோரும்
தொழுங்கழல் லீந்தருள்வை
யேனைய வரணயப் போதலின்
றின்ப மெய்துவனே! 12

ஏன் ஐய! வரனை தந்து ஆள்கிலாய்?
புல்லை எந்தை! நிற்றீர்ந்து
ஏனைய அரன் ஐயன் முதலோர்
பணியேன்! இவ்
எளியேனை அவர் அனைவரும்
தொழும் கழல் ஈந்தருள் வையேல்,
நையவரல் நையப்போதல் இன்றி
இன்பம் எய்துவனே!

விளக்கம்:

புல்லாணிக்கண் உள்ள என தந்தையாகிய என் ஐயனே! ஏன் (எனக்கு) வரம் தந்து (என்னை) ஆட்கொள்ள மறுக்கிறாய்! உன்னையல்லாது சிவனும்பிரமனும் ஆகியோரை நான் வணங்க மாட்டேன்! இந்த எளியவனுக்கு அந்த சிவன் பிரமன் முதலாய அனைவோரும் பணிகின்ற உனது திருவடிகள் அளித்து அருள் செய்வாய் ஆகில் இவ்வுலகில் துன்பம் அடைந்து பிறத்தலும் சாதலும் (பிறப்பு இறப்பு இல்லாத) இல்லாமல் பேரின்பத்தை நான் அடைவனே!

Koviloor Digital Library

எய்யாத் தடித்தின்னல் செய்யெனச்
கள்வ ரிடிகுரன்மிக்கு
எய்யாத் தடித்தியங் காவெதும்
புஞ்சுர னேயகவலை
எய்யாத் தடித்தி னிலையாப்
பொருட்பிணிக் கேகுமெண்ணம்
எய்யாத் தடித்தி நெஞ்சே! புல்லை
மாதை யிடர்க்கு வைத்தே! 13

எய் யாத்து அடித்து இன்னல் செய்
எனக்கள்வர் இடிகுரல் மிக்கு
எய் யாது அடிதியங்கா வெதும்பும்
சுரன் ஏய் கவலை
எய்யா தடித்தின் நிலையாப்
பொருள்பிணிக்கு ஏகும் எண்ணம்
எய்யாத் தடித்தி நெஞ்சே!
புல்லை மாதை இடர்க்கு வைத்தே!

விளக்கம்:

நெஞ்சே! அம்பால் எய் எனவும் கட்டி அடித்துத் துன்பம் செய் எனவும் ஆறலைக்கள்வர் இடித்து உரப்பும் குரலே மிகுந்து, முள்ளம்பன்றியானது யாமரத்தின் அடியில் ஒதுங்கவும் நிழலைக் காணாது வருந்தும் பாலையில் பொருந்திய வழிகளில் இளைத்து, மின்னலைப் போல நிலையில்லாத பொருள் எனும் பிணிப்பினை அடைவதற்கு ஏகும் எண்ணமே இல்லாது, அதனை அறியாமல் நீ பருக்கின்றாய்! அப்படிச்செய்வதால் புல்லாணியின் கண் உள்ள தலைவியை துன்பத்துக்கு துணையாகின்றாள் என்பதை நீ அறியமாட்டாய். (எய்யாமை-அறியாமை இப்பாடல் பாலையில் தவிக்கும் தலைவியின் துன்பத்தைக் கண்டு தலைவன் தனது நெஞ்சுக்கு அறிவிப்பதாக அமைந்த அகத்துறைப்பாடல். எய்யாமை-அறியாமை.)

Koviloor Digital Library

வையம் பனைய மடவார்
விழியின் மயலுழந்து
வையம் பனைய மடலாக்கி
வீதிவரு வர்மற்றூர்
வையம் பனைய மடங்கார்
சிவன்றலை வைக்கத்தன்றாள்
வையம் பனைய மடம்ப மில்
புல்லையில் வாழ்த்தலரே! 14

வை அம்பு அனைய மடவார்
விழியின் மயல் உழந்து
வையம் பனைய மடல் ஆக்கி
வீதி வருவர்! மற்று
ஊர் அம்பல் நைய மடங்கார்!
சிவன் தலை வைக்கத் தன்தாள்
வை அம்பனை யம டம்பமில்
புல்லையில் வாழ்த்தலரே!

விளக்கம்:

கூர்மை மிகுந்த அம்பு போன்ற பெண்களின் விழிகளால் கவரப்பட்டு காமத்தால் துயருற்று பனை ஓலையினால் மடலைத் தேர்போலச் செய்து அதில் ஏறி வருவார்கள்! அது மட்டுமல்ல ஊராரின் பழிச்சொல்லுக்கு ஆளாகியும் மனம் திருந்த மாட்டார்கள்! சிவபெருமான் தன் தலையினை வைக்கும்படி (வணங்கும்படி) தன் தாள்களை வைத்த கங்கை நீரினை உடைய வனான பெருமானை, கூற்றுவன் தனது கொடுமையினை அகற்றி சாந்தமுடையவனாய் தன்பணியினைச் செய்யும் புல்லாணி இறைவனை துதிக்க மாட்டார்கள்! யமடம்பம் இல்-யமனது கடுமை குறைந்த.

திருமால் விஸ்வரூபம் எடுத்தபோது பிரமன் திருமாலது தாள்களில் தெளித்த நின்ற நீரை சிவன் கங்கையாகத் தன் தலையில் வைத்துக் கொண்டார்! புல்லாணியில் எமன் கடுமை குறைந்தவனாய் இருப்பான் என்பது வரலாறு.

Koviloor Digital Library

தலங்காத் தலைமுத லாகக்கொண்
முத் தொழிறன் கணிருத்
தலங்காத் தலைச்செய் தசோதை
காட்டினன் றாணிழலெய்
தலங்காத் தலைஇய வானுறை
புல்லையைச் சார்ந்து பகைத்
தலங்காத் தலைநகர் சுட்டவற்
காளாந் தரமிலமே! 15

தலம் காத்தலை முதலாகக் கொள்
முத்தொழில் தன்கண் இருத்தல்
அங்காத்தல் செய்து யசோதைக்கு
காட்டினன்! தாள் நிழல்
எய்தலம்! காத்தலைஇய வானுறை
புல்லையைச் சார்ந்து, பகைத்த
லங்காத் தலைநகர் சுட்டவற்கு
ஆளாம் தர மிலமே!

விளக்கம்:

உலகம் அளித்தலை முதல் தொழிலாகக் கொண்டு அளித்தல் காத்தல் அழித்தல் ஆகிய மூன்று தொழில்களையும் தன்னுடனே நிலையாக இருக்கும்படி செய்ததை யசோதைக்கு தன் வாயைத் திறந்து காண்பித்தான்! அவனது திருவடி நிழலை (யாம்) சேர்ந்து இருக்கிலம்! சோலைகள் தழைத்து வளரும்படி மேகங்கள் தவழ்கின்ற புல்லாணியை அடைந்து, (தன்னுடன்) பகை கொண்ட இராவணனது இலங்கை யெனும் தலைநகரை சுட்டு அழித்தவனாகிய புல்லாணி ஐயனுக்கு அடிமை ஆகும் பெருமையை (யாம்) எவ்வாறு அடைவோம்? அத்தகைய தரத்தினை நாங்கள் அடையவில்லையே!

Koviloor Digital Library

தரமோ தகமிக்க சான்றோர்
பெருநெறி சார்ந்திலனா
தரமோ தகமுலை யார்க்குள - நின்
மலர்த் தாளை நிரந்
தரமோ தகமில னேனு நின்
னெய்தினன் றண்டரளந்
தரமோ தகன்கடற் புல்லைத்
தலத்தமர் தற்பரனே! 16

தரமோ தகமிக்க சான்றோர்
பெருநெறி சார்ந்திலன்!
ஆதரம் மோதக முலையார்க்கு உளன்,
நின் மலர்த்தாளை நிரந்தரம்
ஓது அகம் இலன், ஏனும்
நின் எய்தினன், தன்
தரள மோது அகன் கடல் புல்லை
தலத்தமர் தற்பரனே!

விளக்கம்:

குளிர்ச்சி பொருந்திய முத்துக்களை வாரி அளிதது அகன்று பெருகிய கடலைச் சார்ந்த புல்லாணி எனும் தலத்தில் தக்கன வாகிய தரம் மிகுந்த பெரியோர்களை அண்டி இருந்து அவர்களது நெறிமிக்க வழியை நான் அடையவில்லை. (ஆனால்) மோதகம் போல் பருத்த தனங்களை உடைய மாதர்கள்பால் என் உள்ளத்தை அளித்தேன், உன்னுடைய மலர் போன்ற திருவடிகளை என்றும் எப்போதும் துதித்து வணங்கும் மனமும் இல்லாதவன் ஆயினும் உன்னை வந்து அடைந்தேன் (எனக்கு அருள் செய்வாயாக).

Koviloor Digital Library

பரவையி னாகலவா வின்ப
மால்வினை பண்ணலின்றிப்
பரவையி னாகணை மீத்துயில்
வோனைவர் பன்னிநிரு
பரவை யினாகம் பெறவளித்
தோன்புல்லை பாற்கனகாம்
பரவையி னாகமிளிர்வோன்
சரண்மன் பதையினுக்கே! 17

பர ஐ இனா கலவா
இன்பமால் வினை பண்ணல் இன்றி
பரவையின் நாகணை மீத்துயில்வோன்
ஐவர் பன்னி நிருபர்
அவையில் நாகம் பெற அளித்தோன்
புல்லைப்பாற் கனகாம்பரவயின்
ஆகம் மிளிர்வோன்
சரண் மன்பதைக்கே.

விளக்கம்:

கடலில் பாம்பணையில் (நாக அணை) மீது துயில் செய்பவனாகிய திருமால் துன்பங்கள் அளிக்காமல் இன்ப மயமே தரும் கடவுள், துன்பவினை ஏதும் (உயிர்கட்கு) செய்யாதவன், அரசர்கள் கூடியுள்ள அவையில் பாண்டவர் களின் தேவியாகிய திரௌபதிக்கு ஆடைகளை அளித்த கருணையாளன், திருப்புல்லாணியில் பொன்மயமான ஆடை அணிந்த திருமேனி உடையவன் (ஆனால்) வேறு தெய்வங்கள் அப்படியில்லை. ஆதலால் அவனைச் சரண் அடைந்துதான் உலக உயிர்கள் காக்கப்படுகின்றன. பரதெய்வங்கள் துன்பங்கள் தரும் இயல்புடையவை! எப்போதும் துன்பம் செய்ய நினைப்பவை. தக்க சமயத்தில் (திரௌபதிக்கு உதவியதுபோல்) உதவி செய்யாதவை ஆதலால் புல்லாணி ஐயனைச் சரண்புகுந்தாலன்றி உயிர்கட்கு வேறு பாதுகாப்பு இல்லை.

Koviloor Digital Library

பாதையா வருந்து நிரைக்கா
 மலைக்குடை பண்ணினன்மன்
பதையா வருந்தொழும் புல்லைய
 னல்லரைப் பார்க்க வென்று
பதையா வருஞ்செய னான்கும்
 புகனிரு பன்னருளென்
பதையா வருந்துவை யோநெஞ்சமே!
 மெய்ப் பவப்பிணிக்கே! 18

பதையா வருந்து நிரைக்கா
மலைக்குடை பண்ணினன்
மன்பதை யாவரும் தொழும் புல்லையன்
நல்லரை பார்க்கவென்று
உபாதைய அருஞ் செயல் நான்கும்
புகல் நிருபன் அருள் என்பது
ஐயா அருந்துவையோ நெஞ்சமே?
மெய்ப் பவப்பிணிக்கே!

விளக்கம்:

நெஞ்சமே! பதைத்து வருந்திய கால்நடைகட்கு (பசுக் கூட்டத்திற்கு) மலையினால் ஆன குடையைப் பிடித்து காத்த வனும், உலகில் உள்ள அனைவரும் தொழுது வணங்குப வனும் ஆன புல்லாணிப் பெருமான் அரிய சோதனைச் செயல்கள் நான்கினையும் உரைத்த பெருமாள்! அவனை வணங்கி அதனால் பெறப்படும் அவனது அருள் எனப்படும் உயர் மருந்தை உன்னுடைய பாவப் பிணிகள் நீக்க வல்லது எனக்கருதி உண்பாயா?

Koviloor Digital Library

பிணிக்கா வலைக்குங் கொடுங்கூற்று
வென்று பெரும்பவ மெய்ப்
பிணிக்கா வலைக்கடப் பனருள்
புல்லைப் பிரான் முனங்கர்ப்
பிணிக்கா வலைவிட் டடவிதந்
தாய் வசை பேரவுருப்
பிணிக்கா வலைபோல் வருமன்னர்
போர்வெல் பெருந்தகையே. 19

பிணிக்கா அலைக்கும் கொடும் கூற்று
வென்று பெரும் பவ மெய்ப்
பிணிக்காவலை கடப்பான் அருள்
புல்லைப் பிரான்! முனம்
கர்ப்பிணிக்கா ஆவலைவிட்டு அடவி
தந்தாய்! வசைபேர
உருப்பிணிக்கா அலைபோல் வருமன்னர்
போர்வெல் பெருந்தகையே!

விளக்கம்:

புல்லாணிப் பெருமானே! முன்னாள் கருவுற்றிருந்த உன் மனைவி சீதையினை உனது மனத்தே எழுந்த ஆவலை கட்டுப் படுத்திக் கொண்டு காட்டுக்கு அனுப்பினாய்! ருக்மிணியை அடைய அலைபோல் திரண்டு வந்த மன்னர்களோடு போர் செய்து வென்றாய்! அத்தகைய பெருமையினை உடைய நீ உயிர்களைக் கட்டி அடித்து துன்புறுத்தும் கொடிய யமனை வென்று அவ்வுயிர்கட்கு பெரிய பிறவியுடைய உடம்பாகிய நோய்ச் சிறையைக் கடப்பதற்கு அருள்வாயாக!

உருப்பிணி-உருக்மணி என்பதன் சிதைவு. ஒரு பெண் ணுக்கு காடு தந்து மற்றொரு பெண்ணுக்காக போர் செய்து வென்றாய்.

Koviloor Digital Library

தகையாம லகன் செலவிட்
டனம்புல்லை சாரலம்வைத்
தகையாமலக மெனவுண்மை
தேறலந் தையலர்நற்
றகையா மலக நுதலார்க்
கழிவங்கட் டண்ணருண்ம
தகையா மலகற் றுணத்திறப்
பாய்கொல் கதாதரனே! 20

தகையாமல் அகன் செலவிட்டனம்,
புல்லை சாரலம்,
வைத்த கை ஆமலகம் என
உண்மை தேறலம்
தையலர் நல்தகையாம் அலக
நுதலார்க்கு அழிவம் கண்
தண் அருள் மதகை யாம் அலகு அற்று
உண்ண திறப்பாய் சொல் கதாதரனே!

விளக்கம்:

கையில் ஆயுதம் தரித்த புல்லைப் பெருமானே! மனத்தை தடுத்து அடக்காமல் அதன் போக்கிலே போக விட்டோம்! உனது புல்லாணி நகரினையும் அடைய மாட்டோம்! எங்களது கையில் வைத்த நெல்லிக்கனிபோல் வாய்மையை தெளிந்து அறியோம். பெண்டிரில் உச்சியில் முடி செறிந்த நல்ல தகைமை உடைய மகளிர்க்காக எமது உடல் பொருள் மனம் மூன்றும் அழிவோம்! இங்ஙனம் ஈனமான எனக்கு உனது கண்ணாகிய குளிர்ச்சி தரும் அருள் படையினை நாங்கள் அளவில்லாமல் அருந்தும்படி திறந்து விடுவாயா? அலகம்-அளகம்.

Koviloor Digital Library

தாதனிச் சம்பவ நோய்தீர
நின்னைச் சரண் புகுந்தேன்
தாதனிச் சம்பெறுக் காச்சீ
றடியர்க்கு தாழ்ந்துள்கரு
தாதனிச் சம்புவி வாழ்வா
மெனத்தெளி தற்குனருள்
தாதனிச் சம்பத் ததுவே
தண்புல்லைத் தயாபரனே! 21

தாதன் இச்சம்ப நோய் தீர
நின்னைச் சரண்புகுந்தேன்!
தாது அனிச்சம் பொறுக்காச்
சீறடியார்க்கு தாழ்ந்து உள்கருதாது
அனிச்சம் புவி வாழ்வாமென
தெளிதற்கு, உன் அருள்
தா! தனிச்சம்பத்து அதுவே!
தண்புல்லைத் தயாபரனே!

விளக்கம்:

குளிர்ச்சி பொருந்திய புல்லாணி நகரில் உறையும் கருணையே வடிவான பெருமானே! உனது அடியவனாகிய நான் இப்பிறவி நோய் தீர்ப்பதற்காக உனது அடிகளில் அடைக்கலம் புகுந்தேன்! மகரந்தம் பொருந்திய அனிச்ச மலர்களின் உறுத்தலைக் கூட பொறுத்துக் கொள்ள இயலாத பெண்களுக்காக (ஏங்கி) இழிந்தவனாய் உள்ளம் நினைக் காமல் இந்த உலக வாழ்வே நிலையற்றது தெளிவு பெறுவ தற்கு உனது அருளைத் தருவாயாக! அப்படிப் பெறும் உனது அருளே ஒப்பற்ற செல்வமாகும்!

Koviloor Digital Library

கரவந்த நன்கனி போல் வண்ண
மாயவ! காண்மறைச்சே
கரவந் தனன்புனல் புல்லை யம்மானின்
சேவையென் கண்ணுணச்சா
கரவந்தன நினக் கேதகு மென்று
கணித்தனன் யான்
கரவந் தனின் மையிலானேனும்
நின்பொற் கழல்படிந்தே. **22**

கரவந்த நன்கனி போல்வண்ண
மாயவ! காண் மறைச்சேகர
வந்தனன் புல்லை யம்மான் நின்
சேவை என்கண் உண
சாகர வந்தனம் நினக்கே தகும்
என்று கணித்தனன், யான்
கரவு அந்தன் நன்மையி லனேனும்
நின் பொற் கழல் படிந்தே!

விளக்கம்:

புல்லாணிக் கரசே! நல்ல களாப்பழம் போன்ற நிறத்தை உடைய மாயையில் வல்லவனே! எல்லா பொருள்களையும் காண்பதற்கும் கருவியாய் அமைந்தவனும் வேதங்களின் தலைமையானவனும் ஆனவனே! உனது புல்லாணித் தலத்திற்கு வந்து உனது பொன்னடிகளில் வீழ்ந்து பணிந்ததால் நான் நன்மையில்லாத குருடனாய் உள்ள போதும், கடல் வந்து வணங்கத் தக்கவன் நீயே, அவ்வணக்கம் உனக்கே தகும் என்று கணித்துக் கொண்டேன்.

Koviloor Digital Library

படிக்கா மனைத்தும் படைத்துச்
சுரர்க்கூண் பகுத்தனைக
படிக்கா மனைப்பெரும் போராட்டங்
கண்டனை! பல்லுயிரிப்
படிக்கா மனைச்சுகத் தாழ்த்திவிட்
டாய் நற்பரம நின்பேர்
படிக்கா மனையுமென் றெண்ணாயென்
புல்லைத்தர்ப் பாதனனே! 23

படிக்கு ஆம் அனைத்தும் படைத்து
சுரர்க்கு ஊண் பகுத்தனை!
கபடிக் காமனை பெரும் போராட்டம்
கண்டனை! பல்லுயிர்
இப்படிக்கா மனைச்சுகத்து ஆழ்த்தி
விட்டாய்! நற்பரம! நின்பேர்
படிக்காமல் நையும் என்று எண்ணாய்
என் புல்லைத் தர்ப்பாதனனே!

விளக்கம்:

திருப்புல்லாணியில் தர்ப்பைப் புல்லாகிய ஆசனத்தில் வீற்றிருப்பவனே! பெருமைமிக்க இம்மண்ணுலகிற்கான அனைத்தையும் படைத்து தேவர்கட்கும் உணவினைப் பகுத்தளித்தாய்! கபடமுடையவனான மன்மதனை பெரும் போராட்டத்தில் ஈடுபடக் கண்டனை (உன் அடியவர்கட்கு காமனால் காமத்துயர் ஏற்படுத்துதற்கு அவன் பெரும் போராட்டம் செய்ய வேண்டியிருந்தது) அப்படிச் செய்தும் பல உயிர்களையும் இல்லற வாழ்க்கையின் இன்பத்திலே அமிழ்த்திவிட்டாய்! அப்படி அநித்தியமான இல்லற இன்பத்தில் அமிழ்ந்ததால் உன் திருநாமத்தை பாராயணம் செய்யாமல் துன்பமடைவர் என்று ஏன் நீ எண்ணவில்லை.

Koviloor Digital Library

தருப்பாத நனைத்திடு நீர்கிளை
 யெங்கும் சாருமென்று
தருப்பாத நனை வழிபடு
 மூதிலர் தண்புல்லைமா
தருப்பாத நனைத் தனவிலைக்
 கித்தரை சாலுங்கொல்பந்
தருப்பாத நனைக்கொள் கற்பூர
 மொக்குந் தராதிபரே. 24

தருப்பாதம் நனைந்திடு நீர்
 கிளையெங்கும் சாரும் என்று
தருப்ப ஆதனனை வழிபடும்
 மூதிலர் தண்புல்லை
மாதர் உப்பாத நனை தனவிலை
 இத்தரை சாலுங் கொல்
பந்தல் உப்பாதநனைக் கொள்
 கற்பூரம் ஒக்கும் தராதிபரே.

விளக்கம்:

மரத்தின் வேர்ப்பாகத்தே பாய்ச்சும் நீர் அம்மரத்தின் கிளைகளையெல்லாம் சென்று அடையும் என்று சொல்லி திருப்புல்லாணியில் வசிக்கும் மூத்த குடியினரின் (மறக் குலத்தார்) தர்ப்பை ஆதனத்தில் உள்ள பெருமாளைப் பூசனை செய்து வழிபட்டால் சில தெய்வங்களையும் பூசித்தது போல் என்பர். ஆனால் அக்குலத்து மாதர்களின் பருக்காத தனங் கட்கு உலகே விலையாகாது. எனவே கடல் பட்டினமான பண்டக சாலையில் விளையும் உப்பா, கற்பூரத்தை ஒத்திருக்கும் எனக் கூறுவர்! எளிய தெய்வங்களை உப்புக்கும் திருப்புல்லாணி இறைவனை கற்பூரத்திற்கு பொருத்தி கற்பூரத் துக்கு கடலில் விளையும் உப்பா இணையாகும் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

தரவிரும்பாத விரும்புபொன்
னாதறக செயுஞ்சித்
தராவிரும் பாதரச மாரணஞ்
செய்த கையிரும்பத்
தராவிரும் பாத்தென்னோ புல்லைமாயன்
பொற்றாள் பெறின்விண்
தராவிரும் பாதகத் தீர்வீர் பொன்
னாடுந் தலைக் கொள்வீரே! 25

தரா இரும்பு ஆதல் இரும்பு பொன்
ஆதல் செய்யும்
சித்தராவிரும்பாதரச மாரணஞ்
செய்த கையிரும்
பத்தரா விரும்பாத தென்னோ
புல்லைமாயன் பொற்றாள் பெறின்
விண்தரா இரும்பாதகம் தீர்வீர்
பொன்நாடும் தலைக் கொள்வீரே!

விளக்கம்:

தரா (ஒருவகை உலோகம்) இரும்பாகவும் இரும்பைப் பொன் ஆகவும் தரும் சித்தர்களும் பாதரசத்தை மாரணம் செய்பவர்களும் (பாதரசத்தின் மீண்டும் காண முடியாமல் செய்ய வல்லவர்களும்) எங்கள் புல்லாணிப் பெருமாளிடம் பக்தி செலுத்த விரும்பாமல் இருப்பது என்ன காரணமோ? புல்லாணிப் பெருமானின் திருவடி அருள் கிடைத்தால் வீடு பேற்றை அடையத் தடையாக உள்ள பாதகம் அனைத்தும் தீர்த்துக் கொள்வீகளே! பொன்மயமான சுவர்க்கத்தையும் அடைவீகள்!

மாரணம் திரும்பவும் வராதபடி செய்தல், உலோக மாறுதல்களைச் செய்ய வல்லவர்கள் என்றாலும் திருமால் திருவடி நிழல் அடைந்தால் தான் பாவ வினைகள் தீரும், சுவர்க்கமும் கிடைக்கும்!

Koviloor Digital Library

தலையாலங் கானஞ் செருவென்ற
பாண்டியன் றாள்வணங்கித்
தலையாலங் கான பணிசெய்த
புல்லைமன் தன் கதைம
தலையாலங் கானஞ் செயக்கேட்
டுகந்த வன்தான் கண்படு
தலையாலங் கானல்ல ராமீக்கொள்
தெய்வஞ் சரணமக்கே! 26

தலையாலங்கானம் செருவென்ற
பாண்டியன் தாள் வணங்கி
தலையால் அங்கு ஆனபணிசெய்த
புல்லைமன்! தன்கதை
மதலையால் அம் கானம் செயக்
கேட்டு உகந்தவன்! தான் கண்படுதலை
ஆலம்கால் நல்அலா மீக்கொள்
தெய்வம் சரண் நமக்கே!

விளக்கம்:

தலையான திருப்பணிகள் செய்தவனாகும் என்று பாண்டிய மன்னனை தெய்விக அம்சம் உள்ளவன் எனக் கூறப்பட்டது. தனது திருக்கதையினை லவன் குகன் என்னும் புதல்வர்களால் இசையோடு கூடிய அழகிய பாட்டாகக் கேட்டு மகிழ்ந்தவன்! புல்லாணித் தலத்தில் உள்ள பட்டாபி ராமமூர்த்தி 'அவன்தான் அறிதுயில் கொள்ள, விடம் கக்கும் நல்ல பாம்பின் மீது கொண்டான் அந்தத் தெய்வம் தான் நமக்கு எல்லாம் அடைக்கலம் தருபவன்! (தலையானங்கானம் என்ற இடத்தில் போர் செய்து வெற்றி பெற்று பாண்டிய மன்னன் திருப்புல்லாணித் தலத்தில் பல திருப்பணிகளைச் செய்தவன்.)

Koviloor Digital Library

நமற்கார வுய்த்த உணவா
முயிர்மெய்கொள் நாளிலெல்லா
நமற்கார மும்புகத் தெய்வத
மென்று நம்பித் தொழீர்!
நமற்கா ராரருந்துணை யாயொளிர்
வார்புல்லைநாரணன் முன்
னமற்கார மோட்டுவா னந்தகோபன்
றனயன ன்றியே! **27**

நமற்கு ஆரஉய்த்த உணவாம்
உயிர் மெய் கொள் நாளில் எல்லா
நமற்காரமும் புகும் தெய்வதம்
என்று உளம் நம்பித் தொழீர்!
நம் அற்கு ஆர் அருந்துணையாய்
ஒளிர்வார்? புல்லைநாரணன்
முன்னம் மல்காரரோடு அடுவான்
நந்தகோபன் தனயன் அன்றியே!

விளக்கம்:

எமன் தனது ஆசை தீரும் அளவுக்கு உணவாய் அமைந்த உயிா் உடம்பு எடுத்த நீங்கள் எல்லாம் (வாழ்நாள் எல்லாம்) எல்லா வணக்கங்களும் வந்து அடையும் தெய்வம் திருப் புல்லாணி யக்ஞ நாராயணமூா்த்தியே என்று உளமார நம்பி அவனை வணங்குவீா! முன்னா் துரியோதனன் அவையில் மல்லா்களை மிகுசினத்துடன் அழித்தவனும் நமக்கு இருளில் அரிய ஒளியாக ஒளிா்ந்து காட்டுபவனும் ஆகிய நந்தகோபனது மகனாகிய புல்லாணிப் பெருமானை விட்டால் வேறு யாா் உள்ளனா? 'விளக்கொளி ஒப்பான்' என்பா் திருமாலை! எல்லாத் தேவ நமஸ்காரமும் ஸ்ரீ கேசவனையே சென்றடையும் என்கிறது மொழி ஸ்லோகம்.

Koviloor Digital Library

தனையனு மானத் தளக்கரி
யானற் றயரதரற்கு
தனையனு மானத்தள் சீதை
மணாளனும் தானென்றுள்ள
தனையனு மானத் தகவோர
வோதினன் றண்புல்லை நித்
தனையனு மாநத்தர னையந்
தீர்த்த தயாகரனே! 28

தனை அனுமானத்து அளக்க
அரியான்! நல் தயரதற்குத்
தனையனும் மானத்தள் சீதை
மணாளனும் தான் என்று
உள்ளதனை அனுமான் அத்தகவு
ஓர ஓதினன்! தண்புல்லை
நித்தன், ஐயன், உமா நத்து அரன்
ஐயம் தீர்த்த தயாகரனே!

விளக்கம்:

தான் எத்தகையவன் என்று ஓர் அனுமானத்தினால் அளவு செய்வதற்கு அரியவன், தசரதனின் மகன், கற்புக்கரசியான சீதையின் கணவன் என்பது எல்லாம் தான் ஒருவனே என்று உள்ள தகவலை அனுமான் திருவடியின் மேம்பாடு தெரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தான்! அவன்தான் குளிர்ந்த திருப்புல்லாணி நகரில் உள்ள அழிவில்லாத நித்தியமூர்த்தி, ஐயன், உமாதேவியார் விரும்பும் சிவனாரின் இரந்து உண்ணும் தொழிலை அகற்றிய சுகுணா மூர்த்தி!

Koviloor Digital Library

கருணா கரவான் பெயராற்
சிறந்த கவிப் பெரும்பா
கருணா கரவார்க் கருள்பது
மாசனி காதலர்நா
கருணா கரவா வறுவார் தொழும்
பெருங்காமர், தண்பொங்
கருணா கரவா சகங்கிளிதேர்
புல்லைக் கண்ணவரே! 29

கருணாகர! வான் பெயரால்
சிறந்த கவிப் பெரும்பாகர்,
உணா கரவார்க்கு அருள்
பதுமாசனி காதலர்
நாகருள் நாகர், அவா அறுவார்
தொழும் பெரும் காமர்!
தண் பொங்கருள் நாகர வாசகம்
கிளிதேர் புல்லைக் கண் அவரே!

விளக்கம்:

கருணாகரர் எனப்படும் உயர்ந்த திருநாமத்தால் சிறப்பு மிக்க அனுமானை ஊர்தியாகக் கொண்டவர், உணவினைப் பசித்தவர்கட்கு தவறாது அளிக்கும் திருமகளின் காதல் கணவர்! தெய்வங்களின் தெய்வம்! ஆசைகளை வெறுத்த வர்கள் வணங்குகின்ற மன்மதனுக்கு மேலான அழகினை உடையவர், அவர்தான் குளிர்ந்த சோலைகளில் வாழும் கிளிகள், நாகர எழுத்துக்களால் எழுதப்பட்ட வாசகங்களைப் பயில்கின்ற திருப்புல்லாணியில் அருள் செய்யும் பெருமான்!

Koviloor Digital Library

கண்ணனை யாதவனைத் தொழுவார்
கலர்கிற் பர்கஞ்சக்
கண்ணனை யாதவனைக் கண்டெனப்
புல்லங் காடன் அருட்
கண்ணனை யாதவனைக்
காலதூதர் கறுத்தின்வன்
கண்ணனை யாதவனைத்துக்
கொல்வாயென்பர் காலனுக்கே! 30

கண்ணனை யாதவனைத் தொழுவார்க்கு
அலர்கிற்பர்! கஞ்சக்கள்
நனை ஆதவனைக் கண்டு என
புல்லங் காடன் அருட்கண்
நனையாதவனை, காலதூதர்
கறுத்து இவன் வன்கண்ணன்
ஐயா நைத்துக் கொல்வாய்
என்பர் காலனுக்கே!

விளக்கம்:

காலதூதர்கள், தாமரையின்கண் கள்ளை உடைய மொட்டு சூரியனைக் கண்டால் மலர்வதைப் போல், யாதவ குலத்தில் தோன்றிய கண்ணனாகிய புல்லாணிப் பெருமானை வணங்குபவர்களைக் கண்டால் மலர்ந்து மகிழ்ச்சி கொள்வர்! ஆனால் அப்பெருமானுடைய அருள் வெள்ளத்தில் துளியும் நனையாதவனைக் கண்டால் சினம் மிகுந்து காலதேவனாகிய யமனிடம் ஐயா இவன்வன்கண்மை உடையவன் இவனை வதைத்துக் கொல்வீ! (ஏனெனில் எமன் திருப்புல்லாணியில் சாந்தமுடையவனாய் இருப்பவன். அதனால் பெருமானின் அருள் பெறாதவனை சித்ரவதை செய்து கொல்வீ என்று காலதூதர் கூறுவார்களாம்.

Koviloor Digital Library

கேத நத்தஞ் செய்தலில்லா
வறிவொளி கேடிலசா
கேதனத் தம்புக லில்லாச்
செழுமதி சிந்தித்தவர்
கேதநத் தந்துடைத் தாக்கந்
தருமுது கேசவனின்
கேதனத் தப்புள் உயர்தா
னிடஞ்சா கிளர் புல்லையே! 31

கேது அனத்தம் செய்தல்
இல்லா அறிவொளி, கேடு இல
சாகேதன், அத்தம் புகல் இல்லாச்
செழுமதி, சிந்தித்தவர்
கேதம் நத்தம் துடைத்து ஆக்கம் தரும்
முதுகேசவன் நீள்
கேதனத்து அப்புள் உயர்த்தான்
இடம் சீர்கிளர் புல்லையே!

விளக்கம்:

கேது எனும் கோளால் எவ்விதமான கேடும் செய்யப் படாத ஞானச்சுடர், போரினால் கேடுறாத அயோத்தியை உடையவன், அத்தமனம் (அஸ்தமனம்) அடையாத செழுமை மிக்க சந்திரன்! தன்னை விடாது நினைத்து துதிப்பவர்தம் துன்பத்தையும் கேடுகளையும் நீக்கி மென்மேலும் பெருமை தந்து அருள்பவன்! நீண்ட கொடியாக அழகிய பறவையான கருடனை உயர்த்திய கேசவன்! வாழும் இடம் எல்லாச் சிறப்புக்களையும் உடைய திருப்புல்லாணியே! (சாகேதம்= அயோத்திக்கு மற்றொரு பெயர்).

Koviloor Digital Library

புல்லாரணியன் மிலைந்தவன்
மாறன் பொறையன் றொழும்
புல்லா ரணியன் புநிதாதி
சேதுப் புனற்றுறைவன்
புல்லா ரணியன்றிய வூரழித்
தவற் போற்றினவன்
புல்லா ரணியன் புடனீவ
ளெல்லாப் பொருளையுமே! 32

புல்ஆர் அணியல் மிலைந்தவன்
மாறன் பொறையன் தொழும்
புல்லாரணியன் புனித ஆதி
சேது புனல் துறைவன்
புல்லார் அணி அன்றிய ஊர்
அழித்தவன் போற்றின் அவன்
புல்லுஆரணி அன்புடன்
ஈவள் எல்லாப் பொருளையுமே!

விளக்கம்:

புல்லிய ஆத்திமாலை அணிந்தவனாகிய சோழனும் பாண்டிய மன்னனும் சேரனும் ஆன மூவேந்தர்களும் வணங்கும் புல்லாரணியப் பெருமான் தூய்மையும் தொன் மையும் உடைய சேது தீர்த்தத்துக்கு அதிபதி! பகைவர்களின் வண்ணமிக்க ஊர்களை அழித்தவன், ஆகிய பெருமானை வணங்கித் துதித்தால் அப்பெருமான் தழுவி மகிழும் வேதவல்லி ஆகிய திருமகள் சகல செல்வங்களையும் மிகுந்த விருப்பத்துடன் தருவாள்.

Koviloor Digital Library

ஐயாலங் கானகத் தேகண்
டமர்ந்த வருண்முதலாம்
ஐயாலங் கானகல்செய் மணிப்பாம்
பணையாய் புல்லையாய்!
ஐயாலங் காநகர் தீர்த்தநல்
வென்றிவில் லாயருளாப்
ஐயாலங் கான் கலைதடு
மாறிய வந்திமத்தே! 33

ஐஆல்அம் கானகத்தே கண்டு
அமர்ந்த அருள் முதலாம் ஐ
ஆலம்கால் நகல்செய் மணிப்பாம்பு
அணையாய்! புல்லையாய்!
ஐயா! லங்காநகர் தீத்தநல்
வென்றி வில்லாய்! அருளாய்!
ஐயால் அங்கு ஆன கலை
தடுமாறிய அந்தி மத்தே.

விளக்கம்:

அழகிய காட்டில் ஐந்து வகை மரங்களையும் கண்டு அங்கு தங்கிய கருணை முதல்வனாகிய கடவுளே! விடத்தை வெளியிட்டுக் கொண்டு ஒளிமிக்க நாகமணியினை உடைய தாய் விளங்கும் பாம்பினை அணையாகக் கொண்டவனே! புல்லாணிப் பெருமானே! ஐயா! இலங்கை நகரைச் சுட் டெரித்த வென்றிதரும், வில்லை உடையவனே! கோழைகள் சிந்தி சூரியகலை சந்திகலை என்ற மூச்சுக்கள் இறுதிக் காலத்தே தடுமாறுகின்றபோது எனக்கு அருள்வாயாக!

Koviloor Digital Library

மத்தாக மந்தரம் வைத்தாய்
புல்லாணி நிவாச நிக
மத்தா கமந்தரல் செய்தா
யடியேன் மருண்டபுன்கா
மத்தாக மந்தரங்கத்தே
வருத்த வளர் தருகன்
மத்தாக மந்தரமாம் போது நீ
யென்முன் வாதரற்கே! 34

மத்தாக மந்தரம் வைத்தாய்
புல்லாணி நிவாச!
நிகமத்து ஆகமந்தரல் செய்தாய்!
அடியேன் மருண்ட புன்காமத்
தாகம் அந்தரங்கத்தே வருத்த
வளர்தரு கன்மத்து
ஆகம் அந்தரம் ஆம் போது
நீ என்முன் வா தரற்கே!

விளக்கம்:

மந்தரமலையினை மத்தாக வைத்துக் கடல் கடைந்த திருப்புல்லாணியில் வசிக்கும் பெருமானே! வேதத்துக்கு நிக ராக பாஞ்சராத்திராகமத்தை ஒதுதல் செய்தாய்! அடியேனது இழிவு பொருந்திய காமவேட்கையானது என் உன்மனத்தே துயர் தந்து நிற்க அதனால் வளர்கின்ற எனது உடலின்று உயிரகன்று அந்தரநிலை அடையும்பொழுது நீ என் முன்னே அருள்வதற்கும் உதவுவதற்கும் வருவாயாக.

Koviloor Digital Library

வாத மருந்திய பாம்பணை
யாய்புல்லை மாதவமூ
வாத மருந்திய வுட்கண
முண்ண வகுத்தவமே
வாத மருந்திய வாசுர
வீணரை மாய்வித்தவ
வாத மருந்தியக்கங்கொள்ள
மெய்வீழ மரணத்திற்கே! 35

வாதம் அருந்திய பாம்பணையாய்
புல்லை மாதவ!
மூவாத மருந்து இயவு உட்கணம்
உண்ண வகுத்தவ!
மேவாது அமர் வுந்திய
ஆசுர வீணரை மாய்வித்தவ!
வா! தமரும் தியக்கம் கொள
மெய்வீழ் மரணத்து எற்கே!

விளக்கம்:

காற்றினை உணவாகக் கொள்ளும் பாம்பு பாயலாய்! புல்லாணி மாதவ! (கிழந்தன்மை) மூப்பு அடையாமைக்கு காரணமான அமிர்தத் தினைதேவர்கள் உண்ணப் பகிர்ந்து அளித்தவனே! உன்னை விரும்பாது பகைமை கொண்டு உன்னுடன் போர்கள் செய்த வீணர்களாகிய அசுரர்களைக் கொல்வித்தவனே! எனது சுற்றத்தார்களெல்லாம் மனக் கலக்கம் கொள்ளும்படி என் உடல் கீழே விழுந்து மரணத்தை எய்தும் சமயத்தில் எனக்காக நீ வந்து சேர்க!

Koviloor Digital Library

மரஞ்சத்த மாமலை போல்பவைக்
கோர்கணை வைத்தவர்கா
மரஞ்சத்த மாக வளிசெய்
துழாயினர் மன்மதகா
மரஞ்சத்த மாமுக வற்குயர்
மாதுலர்! வாணன் செய்ச
மரஞ்சத்த மாற்ற றெரித்தார்
தண்புல்லை மாயவரே! 36

மரம் சத்தமாமலை போல்பவைக்கு
ஓர்கணை வைத்தவர்
காமரம் சத்தமாக அளி செய்
துழாயினர்! மன்மத காமர்,
அஞ்சு அத்த மாமுகவர்க்கு
உயர் மாதுலர், வாணன்
செய் சமர் அஞ்சத் தம் ஆற்றல்
தெரித்தார்! தண்புல்லையின் மாயவரே!

விளக்கம்:

ஏழு பெரிய மலைகளைப் போன்ற மரங்களை ஒரே அம்பால் துழைத்தவர், வண்டுகள் காமர இசைக் கானம் செய்யும் துளவ மாலைகளை அணிந்தவர்! மன்மதனுக்கு விஞ்சிய அழகுடையவர், ஐந்து கரமுடைய யானை முகக் கடவுளாகிய விநாயகரின் தாய் மாமன், வாணாசுரனுடன் ஏற்பட்ட போரில் அவன் அஞ்சும் வண்ணம் தமது வலிமை யையும் திறமையையும் வெளிப்படுத்தியவர் (யார் எனில்) அவர்தான் குளுமைமிக்க திருப்புல்லாணியில் உள்ள மாயவர்.

Koviloor Digital Library

மாய மநந்தம் புரிகிற்பர்
புல்லையை வாழ்த்தலர்கும்
மாய மனந்தம ருண்ணாம
லுண்டு மருந்தருந்தி
மாய மனந்தமி லெண்ணாது
வாழ்வீர்! வவ்வித்திரு
மாய மனந்த வமயம்
வரினென் வலமுளரே! 37

மாயம் அனந்தம் புரிகிற்பர்,
புல்லையை வாழ்த்தலர்,
கும்மாயம் அனம் [தம்] தமர்
உண்ணாமல் உண்டு மருந்து அருந்தி
மாய மனம்தமில் எண்ணாது
வாழ்வர் வவ்வித்திரு
மாயமன் அந்த அமயம் வரின்
என் வலம் உளரே!

விளக்கம்:

அளவற்ற வஞ்சனைகள் புரிவர், திருப்புல்லாணிப் பெருமானைத் துதிக்க மாட்டார், கும்மாயம் குழைந்த பருப்பும் சமைத்த கீரையும் சுற்றத்தார் உண்ணாமல் தாமே உண்டு நோய்க்கு மருந்தும் உண்டு சாவதற்கே தமது மனத்தில் எண்ண மின்றி வாழ்வர்! அத்தகையவர்களின் உயிரைக் கவர்ந்து (திருப்பித்தராமல்) செல்ல எமன் வந்தால் அந்த யமனைத் தடுத்து நிறுத்த அவர்கட்கு என்ன வலிமை உள்ளது? (வலிமை இல்லை என்பது குறிப்பு) கும்மாயம்-பருப்பும் சர்க்கரையும் கலந்த உணவு.

Koviloor Digital Library

வலத்தவராக வடிவாய்
படிகொண்ட மன்னதிரு
வலத்தவ ராகவ வண்புல்லை
மாயவ வாழ்த்திலர
வலத்தவராக வடுவாய்
மலையன் வழிபடு கோ
வலத்தவ ராக வலர்த்தா
ளிணையென்னுள் வைத்தருளே. 38

வலத்த வராக வடிவாய்ப்
படி கொண்ட மன்ன!
திருவலத்தவ! ராகவ! வண் புல்லை
மாயவ! வாழ்த்திலர்
அவலத்தவராக அடுவாய்
மலையன் வழிபடு
கோவல் அத்தவ! ராக அலர்த்
தாளிணை என்னுள் வைத்து அருளே!

விளக்கம்:

வலிய பூவராக மூர்த்தியாய் உருவம் கொண்டு பூமியைக் கொம்பில் ஏந்திய கோமகனே! திருமகளாகிய லெட்சுமி தேவியை வலப்பக்கமாக வைத்தவனே! ராகவனே! வளம் பொருந்திய திருப்புல்லாணி மாயவனே! உன்னை வணங்கித் துதியாதவர்களை மிகவும் வருத்தம் அடையச் செய்து அழிப்பவனே! திருக்கோவலூர் மன்னான மலையமான் வணங்கிப் போற்றும் திருக்கோவலூரில் உள்ள எந்தையே! உன்னுடைய சிவந்த மலர் போன்ற இரண்டு திருவடிகளை யும் எனக்குள் வைத்து அருள்வாயாக! குறிப்பு இப் புல்லாணியில் கோவில் கொண்டுள்ள தெய்வச் சிலையைப் பெருமாளுக்கு வலப்பக்கத்தில் பதுமாசனித் தாயார் சன்னதி உள்ளது. அதனால் 'திருவலத்தவ' என்றார். ராகஅலர் - சிவிந்த தாமரை மலர்.

Koviloor Digital Library

வையா கரணர் தொழுதென்
வடமொழி வாண நன்சி
வையா கரணங் கிரவொழித்
தாய்புல்லை மன்னவருள்
வையா கரணம டங்கவு
மென்றீ மலவினைகள்
வையா கரண மெரிப்பட்
டெனக்கெட்டு மாயவுமே. 39

வையாகரணர்தொழு தென்வடமொழி
வாண, நன் சிவை
ஆகர் அணங்கு இரவு ஒழித்தாய்,
புல்ல மன்ன, அருள் வையா
கரணம் அடங்கவும் என் தீ
மலவினைகள்
வை ஆகு அரணம் எரிப்பட்டெனக்
கெட்டு மாயவுமே.

விளக்கம்:

வியாகரணம் கற்ற வல்லவர்கள் தொழுது வணங்கும், தென்மொழியாகிய தமிழிலும் வடமொழியாகிய சமஸ்கிருதத்திலும், புலமை மிக்கவனே! சர்வமங்களமும் பொருந்திய பார்வதி தேவியை தனது உடலில் பாதியாகக் கொண்ட சிவபெருமானின் இரந்துண்ணும் வருத்தத்தை ஒழித்தவனே! புல்லாணிக்கு அதிபதியே! சாபத்தால் ஏற்பட்ட துன்பத்தை நீக்கியவனான நீ என்னுடைய பழமையான தீவினைகளை நீக்கவும் அருள் செய்ய மாட்டாயா?

வியாகரணர் தொழும் என்பதால், பிரமனுக்கும் சரஸ்வதி தேவிக்கும் வேதங்களில் ஐயம் ஏற்பட்டு விவாதத்தின்போது திருப்புல்லாணியில் பெருமானின் முன்னர் தொழுது தெளிவு பெற்றனர்.

Koviloor Digital Library

மாகந்த மாதனமா விருப்பார்
புல்லை வாணரதாம்
மாகந்த மாதன மாதிரப்
பாவைக்கு மார்பினசும்
மாகந்த மாதன மாமலையா மதிக்கிலம்
மாகந்த மாதன மால்கிளைத்
தற்குண்மை மாநண்பனே! **40**

மாகம் தம் ஆதனமா இருப்பார்
புல்லை வாணரதாம்
மாகந்த மாதன மாதிரப்
பாவைக்கு மார்பின
சும்மா கந்தமா, தனமா, மலையா,
மதிக்கிலம்! அம்மா!
கந்தம் ஆதல் நம்மால்
கிளைத்தற்கு உண்மை மாநண்பனே!

விளக்கம்:

பெரிய ஆகாயமே தன்னுடைய ஆசனமாய்க் கொண்டு வாழும் புல்லாணிக் கடவுளுக்கு உரிய, பெரிய கந்தமாதன மலையில் உள்ள பாவைக்கு மார்புகள் வெறும் சந்தன உருண்டைகளா பெரும் மலைகளா இல்லது தனங்களா என நாங்கள் விடை காண அறியோம்! ஆனால் நம் ஆசை மேன்மேலும் வளரும் கிழங்காதல் என்பதும் உண்மைதான்! எங்கள் பால் பெரு நட்புக் கொண்டவனே! புல்லாணிப் பெருமானே! கந்தம்-கிழங்கு.

Koviloor Digital Library

பனவ னுமாபதி சேர்வலப்
பாகன் பரம்பரன்விற்
பனவனு மானுக் கருள்செய்த
புல்லைப் பதியினனொப்
பனவனு மானத் துரைக்கரி
யான்றன் படிததிகோ
பனவனு மாட்செய் துணர்ந்தெய்
னான்றிரும் பாப்பதமே! 41

பனவன், உமாபதிசேர் வலப்பாகன்
பரம்பரன்
விற்பன அனுமானுக்கு அருள்செய்த
புல்லைப் பதியினான்
ஒப்பான அனுமானத்து உரைக்க
அரியான் தன்படி
ததிகோபன் அவனும் ஆட்செய்து
எய்தினன் திரும்பாப் பதமே!

விளக்கம்:

அந்தணன் எனப்படும் பிரமனையும் உமாதேவியின் கணவனான சிவனையும் தனது வலப்பாகத்தால் கொண்டவன், (சிவனும் பிரமனும் திருமாலுக்கும் அடக்கம்) புல்லாணித் திருப்பதியை உடையவன், நல்லறிவும் திறனும் கொண்ட அனுமானுக்கு அருள் செய்தவன், தனக்கு ஒப்பாக எதையும் அனுமானம் செய்து உரைக்க முடியாதபடி ஒப்பு இல்லாதவனாக விளங்குபவன்! இத்தகைய பெருமானின் திருவடிகளைத் தயிர் வாணிபம் செய்த ததிபாண்டன் என்பவன் பணிந்து வணங்கி அவனை நன்கு உணர்ந்த தொண்டனாகி திரும்பாப் பதமாகிய வீடுபெற்றை அடைந்தான்! திரும்பாப்பதம் - பிறப்பு இறப்புக்கு திரும்பா பரமபதம்.

Koviloor Digital Library

பதக்கா வலரை பெருவீ
டிரந்து பயன் கொள்கிலீர்
பதக்கா வலரைக் குறுணிக்கு
ளார்நிரப் பார்பிறர்ச
பதக்கா வலைரப் பெருவாணன்
பேரிடைப் பார்மினறு
பதக்கா வலரைப் பொழிபுல்லை
மாலருள் பாடுமினே! 42

பதம் காவலரைப் பெரு வீடு
இரந்து பயன் கொள்கிலீர்!
பதக்கு ஆவலரைக் குறுணிக்கு
உளார் நிரப்பார்! பிறர்
சபதக்குஆ அலரைப் பெருவாணன்
போரிடைப் பார்மின்!
அறுபதம் காஅலரை
பொழிபுல்லை மால்அருள் பாடுமினே!

விளக்கம்:

சுவர்க்கம் முதலிய இடங்கட்கு காவல் அதிகாரிகளை கெஞ்சி இரந்தாலும் உங்கட்கு பயன் கிட்டாது. பதக்கு அளவு உள்ள தான்யத்தை அடைய விரும்புவோர்களை குறுணி அளவே உள்ள தான்யம் உடையவர்களால் திருப்தி செய்ய முடியாது. (பதக்கு என்பது இரண்டு குறுணிகள். அதாவது பனிரெண்டு படிகள் கொண்டது.) பிறர் சபதத்தினால் ஏற்பட்ட பழிச் சொற்களை வானாசுரனுடன் ஏற்பட்ட போரில் இருந்து தெரிந்து கொள்ளுங்கள். எனவே ஆறு கால்களை உடைய வண்டுகள் மலர்களைத் தூவும் புல்லாணி பெருமானின் புகழையே பாடுங்கள். திருப்புல்லாணியின் பெருமானது புகழைப்பாடி நற்கதி அடையுங்கள்! வாணா சுரன் போரின் போது அவன் திருமாலை செதுக்கி சிவனின் பாதுகாப்பைத் தேடினான். அவனைக் காப்பதாகச் சபதம் செய்திருந்த சிவனால் அதை நிறைவேற்ற முடியவில்லை!

Koviloor Digital Library

பாடிய மானவை தேர்மறை
  யோர் புல்லை பண்பனிறை
பாடிய மானவன் கைதொடு
  வார்களிப் பானுருகிப்
பாடிய மானச யோகர்க்க்
  கல்லாமற் பசையறு கூப்
பாடிய மானகங் கொட்டிற்
  றெனவிளைப் பார்க்கிலனே! 43

பாடியம் ஆனவை தேர்
  மறையோர் புல்லைப் பண்பன்
இறைபாடி அமானவன் கை
  தொடுவார்க்கு அளிப்பான்
உருகிப் பாடிய மானசயோகர்க்
  அல்லாமல் பசையறுகூப்பாடு
இயம் ஆனகம் கொட்டிற்று என
  விளைப்பார்க்கு இலனே!

விளக்கம்:

பாஷ்யமான பேருரைகளை தேர்ந்த வேதியர்கள் நிறைந்த புல்லாணிப் பதியின் சகல நற்குணங்களையும் விளங்கும் ஆண்டவன் தன்னுடைய தலைநகரை அமானவன் எனப்படும் நித்திய சூரியின் திருக்கரத்தால் தீண்டப்படுபவர் கட்கு அளிப்பான்! மனத்தை அவன்பால் யோகம்போல் செலுத்தி உருகிப்பாடிய யோகியர்க்கு இன்றி, அன்பற்ற கூக்குரலை வாத்தியங்களின் பெரும் ஒலி போலப் பாடுப வர்க்கு அளிக்க மாட்டான்.

Koviloor Digital Library

கிலமா வருந்திக் கெடுகாய
　　வாழ்விதென் கேசவகோ
கிலமா வருந்திக் களிக்கும்
　　புல்லாணிக் கெழீ இயமர்ந்த
கிலமா வருந்திக் கெலா நிறைந்
　　தாய்க்குந் கிளர்ந்தவன்பா
கிலமா வருந்திக் கெனவசைக்
　　காளாய் கெழு மெமக்கே! 44

கிலமா வருந்திக் கெடுகாய
　　வாழ்வ இது என் கேசவ!
கோகில மா அருந்திக் களிக்கும்
　　புல்லாணி கெழிஇய மர்ந்து
அகிலமா அருந்திக்கு எலாம்
　　நிறைந்தாய்க்கு கிளர்ந்த அன்பு
ஆகிலம் ஆவரும் திக் என
　　வசைக்கு ஆளாக் கெழும் எமக்கே!

விளக்கம்:

சிதிலம் அடைந்து துன்புறும் இந்த உடல்வாழ்க்கை என்ன பயனை உடையதாகும்? கேசவனே! கிளிகள் மாந்தளிரை உண்டு மகிழும் புல்லாணியில் வீற்றிருந்து விஸ்வரூபியாக உலகின்கண் உள்ள திசைகள் எல்லாமாகி நிறைந்த உனக்கு உண்மையான பக்தியை செலுத்த மாட்டோம் என்றால் என்றும் நாங்கள் அனைவரும் திடுக்கிட்டு பழிச்சொல்லுக்கும் ஆளாகும் வழிதான் உண்டாகும்!

Koviloor Digital Library

மக்களருந் தாதிய ரில்லஞ்
செல்வம் பல் வாழ்வுற்றுக்கா
மக்களருந்தாக் களிக்குந்
தருணத்து வஞ்சனைய
மக்களருந்தா வதைத்தற்கு
இரங்குவீர்! மாலன் பிற்சென்
மக்களருந் தாவரும்பய
னாம்புல்லை வாழ்த்துமினே! 45

மக்கள் அருந்தாதியர் இல்லம்
செல்வம் பல் வாழ்வுற்று
காமக்கள் அருந்தாக் களிக்கும்
தருணத்து வஞ்சனை
யமக்கள்ளர் உந்தா வதைத்தற்கு
இரங்குவீர்! மால்அன்பின்
கென்மக்கள்அரும் தாஅரும்பயனாம்
புல்லை வாழ்த்துமினே!

விளக்கம்:

மக்களில் பலரும் ஏவல் சிலதியரும் வீடும் பொருட் செல்வம் பல வாழ்வும் உற்று காமமாகிய கள்ளைக் குடித்து மயங்கி மகிழும் சமயத்தில் நெஞ்சில் கபடம் மிக்க காலனால் உய்யக்கப்பட்ட திருடர்கள் காலால் உதைத்துத் தள்ளி வருத்துவதற்கு வருந்துவீர்கள்! திருமால் பக்தி உள்ள தென்றால் பிறவியாகிய களறும் கேடற்ற பயன் விளைவைத் தரும்! ஆதலால் புல்லை நாதனை வாழ்த்துங்கள்!

Koviloor Digital Library

வாதா சனகி மணாளா கண்ணா
வென்றவர் களித்தொவ்
வாதா சனம்பொய்யிட்டான்
குலமாய்வித்து வண்புல்லையில்
வாதா சனமிசை கண்டுயில்
வோய்! நினை வாழ்த்து மென்கண்
வாதா சனம் துடைத்தாட்
கொண்டு உள்தாள் வழங்குதியே! 46

வாதா ஜானகி மணாளா கண்ணா
என்றவர்க்கு அளித்து
ஒவ்வாது ஆசனம் பொய் இட்டான்
குலம் மாய்வித்து, வண்புல்லையில்
வாதாசனம் மிசைக் கண்துயில்வோய்
நினை வாழ்த்தும் என் கண்
வாதா சனனம் துடைத்து
ஆட்கொண்டு உன்தாள் வழங்குவையே!

விளக்கம்:

ஜனகன் மகளாகிய ஜானகியின் கணவனே! கண்ணனே வருக! தருக! என்றவர்க்கு வேண்டுவன தந்து, அரச நீதிக்கு முரணாக பொய்யாக ஆசனம் அமைத்தவனாகிய துரியோதனனின் குலத்தையே அழித்து திருப்புல்லாணியில் காற்றை உண்ணும் பாம்பின் மேல் கண்துயிலும் உன்னை அனுதினமும் போற்றி செய்து வாழ்த்தும் என் மீது உனக்கு ஏதும் வழக்கு உள்ளதோ? இல்லையே! ஆதலால் என்னுடைய பிறவிப் பிணியை நீக்கி என்னை உனது தொண்டனாக உனது திருவடிகளை நல்குவாயாக!

Koviloor Digital Library

குதிய வருங்கால தூதரென்
மேஷ்பெருங் கோபமன்மி
குதியாவருங்காரமும் செய்வர்க்
கென்செய்வல்? கூரருட்ட
குதியாவருங்காண் டலைவிரும்
பாய்கொலி முகுந்த! நல்லா
குதியா வருங்காரி தா வெனச்
சூழ் புல்லை கோவலனே! 47

குதியா வரும்கால தூதர்
என்மேல் பெரும் கோபமன்
மிகுதியாவர்! உங்காரமும் செய்வர்க்கு
என்செய்வல்? கூர் அருள்
தகுதி யாவவும் காண்டலை
விரும்பா பாய்கொல்! முகுந்த!
நல் ஆகுதியா அரும் கார் இதா
எனச் சூழ் புல்லைக் கோவலனே!

விளக்கம்:

குதித்துக்கொண்டு வரும் யமதூதர்கள் என் மேல் கடும் சினம் கொள்வர்; பல கூட்டங்களாய் வந்து (ஆத்திரம் வெளிப்படுமாறு) உங்காரம் செய்து வருவார்கள்! அவர்கட்கு எதிராக நான் என்ன செய்ய முடியும்! உன்னுடைய அருட் கடலின் பெருமையினை உலகுளோர் யாவரும் காண்பதை நீ விரும்பமாட்டாயா! முகுந்தப் பெருமானே! வேள்வி யினால் வரும் ஓமபுகையா அல்லது மேகக் கூட்டமா எனச் (சொல்ல முடியாத அளவு) மேகங்கள் சூழ்ந்த புல்லாணியில் உள்ள கோபாலனே.

Koviloor Digital Library

கோவலங் காரமெலா நிறைந்தும்
பகைகொண்டு நின்வெங்
கோவலங் காநகர் மாய்ந்தது
நீகற் குடையளிக்க
கோவலங் காரினருங்கா துயர்ந்தங்
கூர்ந்து அறிந்தேம்
கோவலங் கார்ந்து தென்புல்லை
தலை வந்த கொற்றவனே! 48

கோ அலங்காரம் எலாம் நிறைந்தும்
பகை கொண்டு நின்
வெங்கோவ லங்காநகர் மாய்ந்தது
நீகல் குடை அளிக்க
கோவலம் காரின் நடுங்காது
உயர்ந்ததும் கூர்ந்து அறிந்தோம்!
கோவல் அங்கு ஆர்ந்த தென்
புல்லைத் தலைவந்த கொற்றவனே.

விளக்கம்:

மலையமான் திருமுடிக்காரியின் தலைநகர் ஆன திருக் கோவிலூரிலும் அமர்ந்து தென்பகுதியான திருப்புல்லாணி யில் வந்து அருள் ஆட்சி செய்யும் மன்னவனே! அரசர்க்குரிய சகல அலங்கார அழகுகள் அனைத்தும் நிறைவாய்ப் பெற்றிருந் தும் இலங்கை மா நகரம் உனது கடுமை மிக்க சினத்தினால் அழிந்து போன வரலாறும் நீ கோவர்த்தன மலையினைக் குடையைப் போல தாங்கிப் பிடித்ததால் பசுக்கூட்டம் மழையில் நடுக்கம் உறாதபடி உயர்ந்த வரலாறும் நாங்கள் நன்கு ஆய்ந்து அறிந்தோம்.

Koviloor Digital Library

வனமா தவர்தவப் பேறாக
நின்கவின் மாந்துறயவ்
வனமா தவருடன் மேயினை
புல்லை மாயவ நின்
வனமா தவரொரு கோடிக்கொப்
பாமென்பர் மற்றது செவ்
வனமா தவவுப மானங் கொலோ
வெவ் வகையுநிற்கே! 49

வன மாதவர் தவப்பேறாக
நின்கவின் மாந்துற
யவ்வனமாது அவருடன் மேயினை
புல்லை மாயவ! நின்
வண்ணம் ஆதவர் ஒரு கோடிக்கு
ஒப்பாம் என்பார், மற்று அது
செவ்வனம் மாதவ உபமானங்கொலோ
எவ் வகையும் நிற்கே!

விளக்கம்:

வனத்தில் வசித்த முனிவர் குழாம் செய்த தவத்தின் பேறு ஆக உன்னுடைய அழகை அவர்கள் கண்டுகளிப்புறுமாறு இளமங்கையான சீதையுடனும் உனது தம்பியாகிய இலக்குவ னுடனும் காட்டிற்குச் சென்ற திருப்புல்லாணி மாயவ! உன் அழகு ஒரு கோடி சூரியர்களுக்கு இணையாகுமெனக் கூறுவர்! ஆனால் அந்த உவமானம் நேர்மையான உவமானமாக எந்த விதத்திலும் உனக்கு பொருந்துமோ! தவத்தின் பயனால் முனிவர் களித்ததை கம்பர் அழகாக "பன்னி நோக்கும் பா அமிழ்தைப் பசுங்கண்ணின் நோக்கினர் உள்ளம் களிக் கின்றார்" என்றார்.

Koviloor Digital Library

கையா தவனை மறைத்தாழி
யானிருள் கண்டடித
கையா தவனை சுடுகரி
வேந்தெனக் காத்ததித்த
கையா தவனை நினைவார்க்
கெதுகுறை காமருசீர்
கையா தவனைப் பணிவீர்
தென்புல்லைக் கடித்தலத்தே. 50

கை ஆதவனை மறைத்து
ஆழியான் இருள்கண்டு
அடிதகையாத அனை சுடு
கரிவேந்து எனக் காத்தது
இத்தகைய யாதவனை நினைவார்க்கு
எது குறை? காமருசீர்
கையாது அவனைப் பணிவீர்
தென்புல்லைக் கடித்தலத்தே!

விளக்கம்:

தனது திருக்கரத்தினால் சூரியனை மறைத்து இருள் உண்டாகும்படி செய்த சக்கரத்தை உடையவன்! அவனது விரும்பத்தக்கவனான புகழை வெறுக்காமல் (வெறுத்தவர்கள் கம்பன் சிசுபாலன்) தென்பகுதியான புல்லாணித் தலத்தில் வந்து பணியுங்கள்! அப்பெருமான் தான் தனது திருவடிகள் தடுக்காததால் நெருப்பால் சுட்ட கரிக்கட்டையை அரசன் என ஆக்கினவன். (சான்று பரீக்ஷித்து-அஸ்வத்தாமாவின் கைக்கணையால் அழிந்தவர்!) இத்தகைய பெருமைகள் கொண்ட பெருமானைச் சிந்தித்து வணங்குவார்க்கு குறையொன்றுமில்லை! அனை-நெருப்புதகையாத தடுக்கப்படாத நெருப்பு.

Koviloor Digital Library

தேவகி லேசமும் பெற்றில
ளின்ப நிற்றேடுவசு
தேவகி லேகிமு மற்றாய
ரின்பஞ் சிறந்தனர் நற்
தேவகி லேச விளையாயட
னின்னது தேர்கிலம்பல்
தேவகி லேச மணம் வீசு
புல்லைத் திருவரனே! 51

தேவகி லேசமும் பெற்றிலள்
இன்பம் நிற் தேடு
வசுதேவ கிலேசமும் அற்று
ஆயர் இன்பம் சிறந்தனர்
நல் தேவு அகிலேச! விளையாடல்
நின்னது தேர்கிலம்!
பல் தே அகில் ஏச மணம் வீசு
புல்லைத் திருவரனே.

விளக்கம்:

நின்னைப் பெற்றெடுத்த தாயான தேவகி உன்னை சீராட்டும் இன்பத்தை சிறிதும் பெறவில்லை! நின்னைத் தேடிப் பெற்ற தந்தையாகிய வாசுதேவரும் அங்ஙனமே! ஆனால் யாதவ குலத்தினர் (நின்னைப் பெற்றெடுக்காத போதிலும்) உன்னைச் சீராட்டி வளர்க்கும் பேறு பெற்று உயர்வு பெற்றனர்! சிறந்த தெய்வமும் அகிலத்தின் தலை வனும் ஆன உனது இத்தகைய திருவிளையாடலை நாங்கள் தெளிந்து அறியமாட்டோம்! பல தேசத்து அகில்களும் மணத்தில் தாங்கள் குறைவாகினோம்) என ஏச தெய்வ மணம் கமழும் புல்லாணியில் வாழும் திருமகளுக்கு கணவனே! கிலேசம் (வடசொல்) சிறிது. தே-தேசம்; திருவரன்-திருவினுக்கு வரனாய் அமைந்தவன். 'நந்தன் பெற்றனன் நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலன்' என்பது ஆழ்வார் திருமொழி.

Koviloor Digital Library

திருவரங் காமுற தந்தா
யகலஞ் சினந்து னையெ
திருவரங் காவி யறப்பொரு
தாய்புகழ்த்தேன் பெய்துகந்
திருவரங் காந்திசை செய்யத்
துயில்வாய் திசை யொளிர்ந்த
திருவரங் கம்புல்லையா
யெழுவாயருள் செய்வதற்கே! 52

திரு வரம் காமுறத் தந்தாய்
அகலம்! சினந்து உனை
எதிருவர் அங்கு ஆவி அறப்
பொருதாய், புகழ்த்தேன் பெய்து
கந்திருவர் காந்திசை செய்யத்
துயில்வாய்! திசை ஒளிர்ந்து
அதிருவ! ரங்கா! புல்லையா!
எழுவாய் அருள் செய்வதற்கே!

விளக்கம்:

திருமகள் உன்னுடன் என்றும் இருக்க வேண்டும் என்று வரம் கேட்டதால் உன் மார்பை (அவளுக்கு வாழ்விடமாய்) அளித்தாய்! கோபம் கொண்டு உன்னை எதிர்ப்பவராகிய அசுரர்களின் உயிர் நீங்குமாறு போர் செய்தாய்! உன் புகழாகிய தேனை சொரிந்து கந்தர்வர்கள் இன்னிசை பாட அதைக் கேட்டு அறிதுயில் கொள் வாய்! அதனால் திக்குகள் அனைத்தும் ஒளிவீசி அதிர்வடைந்தன! திருவரங்க நாயக! திருப்புல்லாணி ஐயா எங்கட்கு அருள் செய்வதற்கு நீ துயில் நீத்து எழுவாயாக! திருவரங்கத்திலும் திருப்புல்லாணியிலும் பெருமான் கிடந்த நிலையில் அருள் செய்கிறார்.

Koviloor Digital Library

வதமாவி நையப் புரிந்தெச்சம்
வேட்பர் மறையிதென்று
வதமாரினை யோகயர்வர் மெய்
வாட்டுவர் வானயிரா
வதமாவினை யுகைப்பர் மீள்வர்
மீள வராவணந்தெய்
வதமாவினை யமுடனேந்தப்
புல்லை வராதவரே! 53

வதம் ஆவி நையப் புரிந்து
எச்சம் வேட்பர், மறை இது என்று
வதமா வினையோடு அயர்வர்
மெய் வாட்டுவர், வான்
அயிராவத மாவினை யுகைப்பர்,
மீள்வர், மீள வராவணம்
தெய்வதம் மாவினையமுடன் ஏத்த
புல்லை வராதவரே.

விளக்கம்:

திருப்புல்லாணித் தலத்துக்கு வந்து பெருமானை வணங்காதவர்கள் உயிர்க் கொலை செய்வர். யாகங்கள் செய்வதை விரும்புவர், வேதங்கள் கூறும் வழி இதுதான் என்று கர்ம யோகம் புரிவர். தம் உடம்பினை வருத்தும்படி விரதம் இருப்பர். வான் உலகில் உள்ள அயிரா வதத்தின் மேல் வலம் வருவர். திரும்ப மண்ணிடை வருவர். (புல்லாணிப் பெரு மானை வணங்குபவர் வான்பதம் பெற்றால் திரும்ப மண்ணில் பிறவார்.) எச்சம்-யாகம்.

Koviloor Digital Library

தவறா விதையத் தருள்விழை
வார்புல்லைத் தாமமிகுந்
தவறா விதையன்ன தீவினை
யாற்பிறந் தைக்கடலெய்
தவறா விதையாய் புன்படவா
மென்மெய் சாமிடத்து
தவறா விதையகப் பொழுதைக்
கிப்போதுரை தந்தனனே! 54

தவறா இதயத்து அருள் விழைவார்
புல்லைத் தாம!
மிகுத்தவறாவிதை அன்ன தீவினையால்
பிறந்தைக் கடல் எய்த அறா
இதை அகம் புன்படவு
ஆம் மெய் சாம்இடத்து
உதவல்தா! இதை அப்பொழுதைக்கு
இப்பொழுது உரை தந்தனனே!

பிறந்தை-பிறவிக்கடல்; தாமம்-ஒளி.

விளக்கம்:

நெறி தவறாத இதயசுத்தி உள்ளவர்கள் விரும்பும் திருப் புல்லாணியில் உறையும் ஒளிவடிவானவ! அதிகமாய் செய்நேர்த்தி செய்யப்படாத விதையினை போல் தீய கர்மவினையால் பிறவிக்கடலை கடப்பதற்கு, அறுபடாத பாய்மரம் உடைய தெப்பமாகிய உடல் சாகும்போது நீ வந்து உதவி செய்! அப்போது செய்ய வேண்டிய இந்த வேண்டு கோள் இப்போதே வேண்டு கின்றேன்.

Koviloor Digital Library

தந்தன மென்மருங் குற்பாவை
யார்க்குளம் தாழ்ந்து வைத்
தந்தன மென்ப தெல்லாமுந்
தொலைத்துத் தளர்ந்து முதிர்
தந்தன மென்றுண மாட்டார்க்கும்,
புல்லைமன் றாள்கவி
தந்தன மென்று முயிரளிப்
பானெனத் தாமெண்ணியே! 55

தந்து அன்ன மெல் மருங்குல்
பாவையர்க்கு உளம் தாழ்ந்து
வைத்தம், தனம் என்பது எல்லாமும்
தொலைத்து, தளர்ந்து
முதிர் தந்து, அன்னம் மென்று
உண்ண மாட்டார்க்கும் புல்லைமன்
தன் தாள் புக விதந்தனம் என்றும்
உயிர் அளிப்பான் என தாம் எண்ணியே!

விளக்கம்:

நூல்போன்ற இடையினை உடைய மாதர்களின்பால் ஆசை வைத்து மனம் உடைந்து தாங்கள் சேமித்து வைத்த தமது செல்வம் எல்லாவற்றையும் அழித்து, தளர்ச்சியுற்று முதுமை அடைந்து, சாதத்தையும் மென்று உண்ண முடியாத நிலை அடைந்தவர்க்கும், புல்லாணி இறைவனது திருவடியினை அடையும் வழியை சிறப்பாய் விளக்கி உரைத்தோம்! ஏனெனில் புல்லை நாதன் என்றைக்கும் உயிர்களைக் காத்து ரட்சிப்பான் என்று நாங்கள் எண்ணியதால் தான்! தந்து-நூல்; விதந்தனம்-சிறப்பாய் விளக்கி உரைத்தோம்.

Koviloor Digital Library

எண்கூற்றின் வாய்வைத் துரிஞ்சவு
மூறா விருட்படுவிற்
றெண்கூற்றி னாறலைப் பார்மே
விருஞ்சுர மென்றவென்ன
தெண்கூற்றி னில்லா தெழுந்தார்
பொருட்பிணிக் கெச்சன்முதல்
எண்கூற்றி நின்றவன் புல்லை
பிரான் வெற்பிறையவரே! 56

எண்கு ஊற்றின் வாய் வைத்து
உரிஞ்சவும் ஊறா இருள் படுவிற்று
எண்கூற்றின் ஆற லைப்பார் மேவு
இருஞ்சுரம் என்ற என்றழை
எண்கூற்றின் நில்லா தெழிந்தார்
பொருள் பிணிக்கு கெச்சன்
எண் கூற்றின் நின்றன் புல்லை
பிரான் பிறையவரே!

விளக்கம்:

நீர் ஊற்றில் காடி வாய் வைத்து (ஒரு தரம்) உறிஞ்சி விட்டால் (அந்த ஊற்றில்) மறுபடி ஊறாத இருள் பொருந்திய கிணறு போன்றது பெரும்பாலை என்ற எனது எளிய உரையினை ஏற்காதவர்களின் வறுமைக்கு யாகபுருஷனாக எட்டு திறத்தில் அருள் செய்பவன் மலைகட்கு தலைவனாகிய புல்லைப்பதி இறைவனே!

Koviloor Digital Library

இறையா வரும்தரங் கக்கடற்
  செல்வத்தி னேற்றணைமி
திறையா வருந்தத் திறைஞ்சத்
  தனிக்கோ லியற்றனரும்
இறையா வருந்த விடிரோ
  வெனச்சென் றிரந்துவினாய்
இறையா வருந்த விடிகொள்வர்
  மால்புல்லை யேத்துமினே! 57

இறையா அரும்தரங்கக் கடல்
  செல்வத்தின் ஏற்று அணைமீது
இறை யாவரும் தந்து இறைஞ்ச
  தனிக்கோல் இயற்றினரும்
இறையா அருந்த இடிரோ
  எனச் சென்று இரந்து வினாய்
இறையா வருந்த இடிகொள்வர்!
  மால் புல்லை ஏத்துமினே!

விளக்கம்:

இறைக்க முடியாத அரிய அலைகள் மிக்க கடல் போன்ற செல்வம் பெற்று சிங்காதனத்தில் இருந்து யாவரும் கப்பம் செலுத்தி வணங்கும்படி தனியாட்சி செய்தவர்களும் நான் உண்பதற்கு சிறிதளவேனும் அன்னம் கொடுக்க மாட்டீர்களா என்று தமது அரண்மனையை விட்டுச் சென்று இரந்து வினவினால் அதற்கு மறுமொழியாக வருத்தம் கொள்ளும் படி இடித்தலைப் பெறுவர்! ஆதலால் புல்லைப் பிரானை வணங்கிப் போற்றுங்கள்.

குறிப்பு:

அளவற்ற செல்வமும் நிலையற்றது இம்மையிலேயே விட்டுப் பிரிந்து விடும். ஆகவே இம்மைக்கும் மறுமைக்கும் செல்வம் ஆன புல்லைப் பிரானைப் பணிதல் வேண்டும்.

Koviloor Digital Library

துமிதந் தமர மெறிகடற்
புல்லைத் துறைவனீர்மீ
துமிதந்த மரவெ ராலிலைத்
தொட்டில் கொள் தூயவன்துந்
துமிதந் தமரர் முழங்க
வுலாவருஞ் சோதி யெப்பொ
துமிதந் தமரடைதற் கெண்ணுந்
தெய்வஞ்சு கோததியே! 58

துமிதம் தாமரம் எறிகடல் புல்லைத்
துறைவன், நீர் மீது
மிதந்து அமர ஒரு ஆல் இலைத்
தொட்டில் கொள் தூயவன்,
துந்துமி தந்து அமரர் முழங்க
உலாவரும் ஜோதி, எப்போதும்,
இதம் தமர் அடைதற்கு எண்ணும்
தெய்வம் சுகோததியே!

விளக்கம்:

நீர்த்திவலைகளை பேரொலி எழுப்பி வீசும் கடலை உடைய புல்லாணித் தலைவன், தான் நீர் மீது மிதந்து தங்குவதற்காக ஒரு ஆலிலைத் தொட்டிலைக் கொண்ட புனிதன் துந்துமி எனும் இசைக்கருவியை தேவர்கள் முழக்க திருவீதி உலாவரும் ஒளி வடிவானவன் எப்போதும் தன்னை அண்டியவர்கள் நன்மையை அடைய எண்ணும் தெய்வம், அவன் ஓர் இன்பக்கடல். துமிதம்-நீர்த்திவலை; சுகஉததி- இன்பமயமான கடல்; துந்துகி அமரர் உலக இசைக்கருவி.

Koviloor Digital Library

கோதண்ட ராமன் டலமுற்று
மாகிச்செங் கோல்புரிவாய்!
கோதண்ட ராமலர்த் தாண்மிதித்
தாடுவை கூற்றுவனுக்
கோதண்ட ராமவன் தூதருக்
கோவுள் குலைவலெற்கா
கோதண்ட ராம புல்லாணித்
தெய்வச்சிலை கோதில் பொன்னே! 59

கோதண் தரா மண்டலம் முற்றும்
ஆகி செங்கோல் புரிவாய்!
கோது அண்டு அரா மலர்த்தாள்
மிதித்து ஆடுவை, கூற்றுவனுக்கோ
தண்டர் ஆம் அவன் தூதருக்கோ
உள்குலைவல் எற்கா
கோதண்ட ராம புல்லாணித்
தெய்வச்சிலை கோதில் பொன்னே!

விளக்கம்:

பூ மண்டலம் முழுமைக்கும் அரசன் ஆகிச் செங்கோல் புரிவாய், புல்லாணியில் தெய்வச் சிலையார் என்ற திரு நாமத்துடன் விளங்க மாசுமறுவற்ற பொன்னே! நீ கொடுமைகள் செய்த காளிங்கன் என்ற பாம்பின் மீது உனது திருவடிகளை வைத்து நடனம் செய்வாய்! நான் யமனுக்கும் அவனது அடியார்களான கால தூதர்கட்கும் (அஞ்சி) உள்ளம் கலங்குகின்றேன்! என்னைக் காத்தருள் செய்வாய், கோதண்டம் எனும் வலிய வில்லை உடைய ராமனே!

Koviloor Digital Library

கோத மனம்பன்னி சாபங்
கழீஇயருள் கொண்டல் பெருங்
கோத மனம்பல நந்தன
நாறிசை கூர் புல்லை மால்
கோத மனம்பவந்தீர்த்தாள்
பவனடி கூடலரெங்
கோத மனம்பயில் வாரவ
ரேவினைக் கொள்கலமே! 60

கோதமன் அம் பன்னி சாபம்
கழீஇய அருள் கொண்டல்!
பெருங்கோ! தமனம் பல நந்தனம்
நாறு இசை கூர் புல்லை மால்!
கோது அமல் நம் பவம் தீர்த்து
ஆள்பவன், அடி கூடலர்
எங்கோ மனம் பயில்வார் அவரே
வினைக் கொள்கலமே!

விளக்கம்:

கௌதம முனிவனுடைய அழகிய மனைவியான அகலிகையின் சாப அழுக்கை அகற்றிய மழையைப் போன்றவன்! மாகம் முழுமையும் ஆளும் சக்கரவர்த்தி! மருக்கொழுந்து பல நந்தவனங் களில் மணம் பரப்பும் புகழ் கொண்ட புல்லாணி இறைவனாகிய திருமால், குற்றங்கள் (நெருங்கிய) பொருந் திய நமது பிறவிக் கடலை நீக்கி ஆள்பவன், அவனுடைய திருவடிகளைப் பணியாதவர்களே சென்மவினை இப்பிறவி யில் வரும்வினை ஆகிய இருவனைகளைச் சேமிக்கும் பாத்திரங்கள் ஆவார்கள்! அமலல்- நெருங்கல்; தமனம்-மருக் கொழுந்து (தவனம்); கொள்கலம்- கொள்ளும் பாத்திரம்.

Koviloor Digital Library

கல்விய வாவன் முலையாரின்
வைத்தவர் கண்ணிடர
கல்விய வாவன் புரைப்பார்
தண்புல்லைக் கடவுள் முன்ப
கல்விய வாவன் மருவிருள்
கண்டான் கழலுளம்பு
கல்விய வாவன் மதியின்
வினவலர் கண்டகரே! 61

கலவி அவா வல்முலையாரின்
வைத்து அவர் கண் இடர்
அகல வியாவஅன்பு உரைப்பார்
தண்புல்லை கடவுள் முன்
பகல் அவிய வாவல் மருவு இருள்
கண்டான் கழல் உளம்
புகல இயவு ஆவல் மதியின்
வினவலர் கண்டகரே.

விளக்கம்:

உடல்போகத்தின் ஆசையினை, சூதாட்டக் காய்போன்ற தனங்களை உடைய மாதர்களின் மீது வைத்து அவரிடம் துயர் நீங்கும் வண்ணம் வியந்து அன்பு பாராட்டுவார்! முன்பு குரு ஷேத்திரப் போரின் போது பகலை மறைத்து வௌவால்கள் திரியும் இருள் பொழுதாக ஆக்கிய திருப்புல்லாணி இறைவனின் திருவடிகள் தமது மனத்துள் கொண்டு வழிபட விரும்பாதவர்கள் இந்த உலகின் முட்புதர்களைப் போன்றவர்களே.

Koviloor Digital Library

கண்டக ராகவம் வாரணப்
போரினை காண்கலர்வன்
கண்டக ராக வெந்நாளுமி
ரார்பிறர் காதலிமார்க்
கண்டக ராகங் கெழுமார்
புல்லாணிக் கடல் குளித்துக்
கண்டக ராகவ னையன்!
பொடுதொழக் கற்றவரே! **62**

கண் தகர் ஆகவம் வாரணப் போரினை
காண்கலர் வன்
கண்டகர் ஆக எந்நாளும் இரார்
பிறர் காதலிமார்
கண்டு அக ராகம் கெழுமார்
புல்லாணிக் கடல் குளித்து
கண் தக ராகவனை அன்பொடு
தொழக் கற்றவரே!

விளக்கம்:

திருப்புல்லாணிக் கடலிலே (ரத்னாகரம்) தீர்த்தமாடி, பிறவியில் தங்கட்கு படைக்கப்பட்ட விழிகட்கு தகுதிபெற்ற வராக திருப்புல்லாணி ராகவனை அன்போடு வழிபட அறிந்தவர்கள் வென்று விளையாட்டாக ஆட்டுக்கிடாய் போரினையும் சேவல் போரினையும் காண விரும்பார்கள்! எந்த நாளிலும் முட்புதர் களைப் போல இருக்க மாட்டார்கள்! பிறரது மனைவிமார்களைக் கண்டு மனத்தில் ஆசை கொள்ள மாட்டார்கள்! தகர்-ஆட்டுக் கிடாய்; வாரணம்-சேவல்.

Koviloor Digital Library

கற்றவ ராக வளைத்துப்
புரங்கொல் கபாலி தொழக்
கற்றவ ராகவ துன்பக்
கடனின்று காசினிய
கற்றவ ராக வடிவாய
புல்லைய கன்னியர்க்கேக்
கற்றவராக வலைப்படுவேற்
தென்கதி சொல்வையே! 63

கல் தவர் ஆக வளைத்துப்
புரம்கொல் கபாலி
தொழக்கற்றவ! ராகவ! துன்பக்
கடல் நின்று காசினி அகற்ற
வராக வடிவாய புல்லைய!
கன்னியர்க்கு
ஏக்கற்று அவராக வலைப் படுவோர்க்கு
என்கதி சொல்வையே.

விளக்கம்:

கல்மலையாகிய மேருவை வில்லாக வளைத்து திரிபுரங் களை அழித்த காபலியாகிய சிவனால் தொழப்பட்ட, கற்றறிவு மிக்க ராகவனே! துயரக் கடலில் இருந்து இவ்வுலகினை அகற்றுவதற்காகவராக வடிவெடுத்த திருப்புல்லாணி ஐயனே! இளம் பெண்டிற்கு மனம் களைத்து ஏங்கி வீணாசை வலையில் விழுபவனாகிய எனக்கு என்ன கதி ஏற்படும் சொல்வாயாக! அவராகம்-வீணாசை; தவர்-வில்; ஏக்கறுதல்-மனம் களைத்து ஏங்குதல்.

Koviloor Digital Library

கதிக்கல மந்தர்க் கரணத்து
உனையெண்ணிக் காணவெஞ்ச
கதிக்கல மந்த களிற்றிற்
புலத்தில் கவிழ்வ நன்ம
கதிக்கல மந்த முனியிசைக்கும்
புல்லைக் காகுத்த நின்
கதிக்கல மந்தம் விளையமற்
காளாய் கழிவ மென்னே **64**

கதிக்கலம் அந்தக்கரணத்து
உனை எண்ணிக் காண
வெம் சகதிக்கு அலமந்த களிற்றிற்
புலத்தில் கவிழ்வம்
நல் மகதிக்கலம் அந்த முனி இசைக்கும்
புல்லைக் காகுத்த!
நின் கதிக்கு அலம் அந்தம் விளை
யமற்கு ஆளாய் கழிவம் என்னே!

விளக்கம்:

மனம் முதலிய அந்தகரணத்தில் உன்னை நினைந்து காண்பதற்கு விரைய மாட்டோம், கடுமையாக உழக்கும் சக்தியில் ஆழ்ந்து வருந்தும் யானையைப் போல் வெறும் சுவை முதலிய புலன்களில் வீழ்ந்து கிடப்போம்! நல்ல மகதியாழ் எனும் இசைக்கருவியினை நாரதமுனிவன் மீட்ட அவ்விசை யில் அமிழ்ந்து இருக்கும் புல்லாணி காகுத்தனே! உன்னுடைய பரகதிக்கு ஆளாகாமல் வாழ்வின் இறுதியினைக் கொடுக் கின்ற யமனுக்கு அடிமையாவோம் நாங்கள்! இது என்ன விந்தை?

Koviloor Digital Library

என்றலைக் காவிரிஞ்சன் பொறித்தான்
புல்லையாய் நினெண்ணா
தென்றலைக் காவிரிபோல்
யாரொழுகற்கு மின்மதிமீன்
என்றலைக் காவிரி வானியங்
கற்கு நீ யேவைக்குமே
தென்றலைக் காவிரி யாப்புள்
விலங்கு மெண்ணிற்றிலேயே 65

என் தலைக்கா விரிஞ்சன் பொறித்தான்
புல்லையாய் நின் எண்ணாது
என் தலைக்காவிரி போல்
ஆறு ஒழுகற்கும் இன் மதிமீன்
என்று அலைக்கா விரி வான்
இலங்கற்கும் நீ ஏவைக்கும்
ஏதுஎன்றலை கா இரியாப் புள்
விலங்கும் எண்ணிற்று இல்லையே!

விளக்கம்:

திருப்புல்லாணி ஈசனே ஆறுகட்கு தலைமையான காவிரி போல் ஏனைய ஆறுகளும் நீர் ஒழுகுதற்கும், இனிமைதரும் சந்திரனும், சூரியனும் விண்மீன்களும் அலைக்கப்படாது வானில் இலங்குதற்கும், மற்ற எல்லா செயல்கட்கும் நீதான் காரணம் என்பதை சோலைகளில் திரியும் பறவைகளும் விலங்குகளும் எண்ணினது இல்லை! அதுபோல எனது தலையிலா உன்னை எண்ணாமல் இருக்கும்படி பிரமன் எழுதிவிட்டான்? அது ஏன்?

Koviloor Digital Library

இலைக்கா வலர்க்காக் கனிக்காத்
 தரும்பயனீர் தென்னநற்க
யிலைக்கா வலர்க்கது நல்கும்
 விண்வேண்டி னஃதீயுந்தன்கோ
யிலைக்கா வலர்க்கியர் வீடுந்
 தரும்யா ரிறைஞ்சிடினும்
யிலைக்கா வலதுவே றில்லாத
 புல்லை யிருந் தெய்வமே. 66

இலைக்கா, அலர்க்கா, கனிக்கா
 தரும் பயன் ஈந்தென்ன
கயிலைக்கு ஆவலர்க்கு அது நல்கும்
 விண் வேண்டின் அஃது ஈயும்
தன்கோயிலை காவலர்க்கு உயர்
 வீடும் தரும்! யார் இறைஞ்சிடினும்
மயிலைக்கா அலது வேறு இலாத
 புல்லை இரும்தெய்வமே.

ஒரு மரம் தன்னிடம் உண்டாகும் இலைக்கும் பூவுக்கும் கனிகட்கும் சற்றும் வேறுபாடு இல்லாது பயன் தருவது போல் இருவாட்சி மலர்கள் செறிந்த சோலைகளை அன்றி வேறு வெற்றிடமே இல்லாத புல்லாணியில் உள்ள பெரிய தெய்வ மான திருமால் கயிலை மலையை அடைய விரும்புவார்க்கும் அவரது வருப்பத்தை (மத வேறுபாடின்றி) நிறைவேற்றுவார்! துறக்கம் அடைய வேண்டினாலும் அதைக் கொடுப்பார்! (எந்த பிரதி பலனும் இல்லாது) தன்னுடைய கோவில் காத்து வருபவர்கட்கும் வீடுபேற்றினைக் கொடுப்பார்! யார் வந்து தம்மைப் பணிந்து வேண்டினாலும் அவர் யாராக இருப் பினும் மோட்சம் கொடுப்பார். மயிலை-இருவாட்சி மலர்.

Koviloor Digital Library

இருந்தைய மாவாசை யின்மரந்
தீப்ப ரினிது பொருள்
இருந்தைய மாவா சொரிய
வெணாரன் பிலிரிவர்தாம்
இருந்தைய மாவாசை யிற்கட
றோய்வர் நின்னருளுக்
கிருந்தைய மாவாச வண்புல்லை
யாய்சேய்த் திருப்பவரே! 67

இருந்தை அம்மா ஆசையின்
மரந்தீப்பர் இனிது பொருள்
இருந்து ஐயம் ஐயோ சொரிய
எணார், அன்பு இலர் இவர் தாம்
இரும் தை அமாவாசையில் கடல்
தோய்வர்! நின் அருளர்க்கு
இருந்தைய! மா வாச வண்புல்லை
சேய்த்து இருப்பவரே!

விளக்கம்:

அடுப்புக்கரி பெறும் ஆசை காரணமாய் மரங்களைச் சுட்டு எரிப்பர்! இனிய செல்வம் பலவாய் இருந்தும் பிச்சை பொழிய நினைக்கமாட்டார்! ஐயோ! யாரிடத்தும் அன்பு காட்ட மாட்டார்கள் இப்படிப்பட்டவர்கள் தாம் சிறப்புமிக்க தை மாதத்து அமாவாசையில் கடல் நீராடுவர்! (புண்ணியம் செய்ததாக நினைத்து) இவர்கள் இருந்தையூர் எனும் தலத்திலும் திருமகள் வசிக்கும் இடமாகிய வண்மை மிக்க புல்லாணியிலும் உள்ள தெய்வமே உன் அருளுக்கு வெகு தூரத்தில் இருப்பர். (உன் அருளைப் பெற மாட்டார்கள்). இருந்தை-அடுப்புக்கரி. இருந்தை யூரிலும் திருப்புல்லாணி யிலும் உள்ள தெய்வங்கள் கிடந்த கோலத்தில் அருள்புரிவன- பாண்டியர்களால் எழுப்பப்பெற்ற கோவில்களை உடையன.

Koviloor Digital Library

பவனா சனமிசை கண்படை
கொண்டுநற் பாற்கடல் வாழ்
பவனா சனந்தங் கழூஉம் புல்லையான்
புல்லன் பண்ணியதர்ப்
பவனா சனமழ காவமர்ந்
தோனிப் பரமனல்லான்
பவனா சனம்செயும் தெய்வமற்
றில்லெனப் பாடுமினே. 68

பவன அசனம் மிசை கண்படை
கொண்டு நற்பால்கடல்
வாழ்பவன்! ஆக அனந்தம் கழுவம்
புல்லையான்! புல்லன் பண்ணிய
தர்ப்ப வன ஆசனம் அழகாய்
அமர்ந்தோன்! இப் பரமன் அல்லால்
பவன் நாசனம் செயும் தெய்வம்
மற்று இல்லெனப் பாடுமினே!

விளக்கம்:

காற்றையே உணவாக உண்டு வாழும் பாம்பின் மீது அறிதுயில் கொண்டு நல்ல திருப்பாற்கடலிலே வாழ்பவன், (அடியாரது) குற்றங்கள் அளரில்லாத அளவு கழுவி நீக்கும் திருப்புல்லாணியில் உள்ளவன், புல்லன் எனும் முனிவனால் சமைக்கப்பட்ட தர்ப்பையால் ஆகிய காட்டு ஆசனத்தில் வனப்பாய் வீற்றிருப் பவன் ஆகிய இந்தக் கடவுள் அல்லது பிறவிப் பெரும்பிணியை அழிக்க வல்ல தெய்வம் வேறு இல்லை என பாடுங்களே.

Koviloor Digital Library

பாடகத் தாயின தொல்வியினை
பற்றறுப்பா யெங்கள்கூப்
பாடகத் தாயி னருளாதி
ராய்நிற்கி பார்மகளென்
பாடகத் தாயின சேவடி
யாய் தொண்டைப் பானதிபாய்
பாடகத் தாயின றீர்புல்லை!
யாய் பெரும் பண்ணவனே! 69

பாடகத்து ஆயின தொல்வினைப்
பற்று அறுப்பாய்! எங்கள்
கூப்பாடு அகத்து ஆயின் அருளாது
இராய்! நிற்கு இப்பார்மகள்
என்பாள் தக! தாயின சேவடியாய்
தொண்டைப் பால்நதியாய்
பாடகத்தாய்! இனல் தீர்
புல்லையாய்! பெரும் பண்ணவனே!

விளக்கம்:

மகளிரது கால்களில் விடாது பற்றிக் கொண்டு இருக்கும் பாடகம் என்ற அணிக இலனைப் போல் எமை விடாது பற்றிக்கொண்டுள்ள எங்களது முன் வினைகளின் பற்றை அறுப்பாயாக! எங்களது விண்ணப்பக் கூப்பாடுகள் உன் மனத்தே ஆராய்ந்தால் நீ எங்களுக்கு அருளாமல் இருக்க மாட்டாய்! உனக்கு இப்பூமி தேவி எனப் பெயர் பெற்றவள் தகுந்தவனாக உள்ளாள்! தாவி உலகையும் வானையும் அளந்த திருவடிகளை உடையவனே! தொண்டை நாட்டில் பாலாறு பாயும் திருப்பாடகம் எனும் தலம் உடையாய்! எங்களது துன்பங்கள் தீர்க்கும் புல்லாணி பெருமானே!

Koviloor Digital Library

பண்ணாரி யன்பி னிசைகெதிர்
மாங்குயில் பண் மிழற்றப்
பண்ணாரி யன்மறை தேர்வார்க்
கெதிர்கிளி பாடவகம்
பண்ணாரியன்று வலஞ்செய்
புல்லாணிப் பதிதளி நாப்
பண்ணாரியன் வழி பாடுகந்
தானெம் பராபரனே! **70**

பள் நாரி அன்பின் இசைக்கு
எதிர் மாங்குயில் பண் மிழற்ற,
பண் ஆர் இயல் மறை தேர்வார்க்கு
எதிர்கிளி பாட, அகம்
பண்ணார் இயன்று வலம் செய்
புல்லாணி பதித்தளி
நாப்பண் ஆரியன் வழிபாடு
உகந்தான் எம் பராபரனே!

விளக்கம்:

பள்ளர் குலத்தின் தோன்றிய பெண் பாடும் இன்பியல் பாட்டுக்கு எதிராக மாமரத்தில் குயில்கள் பண்களை ஒலிக்கவும் இசை நிறைந்த இயலுடன் கூடி வேதத்தை ஓதுவார்களின் பாடல்களுக்கு எதிராக கிளிகள் பாடவும் பாவம் செய்யாதவர்கள் திருவலம் செய்வதும் ஆக உள்ள புல்லாணித் திருக்கோவிலின் நடுவே வைகானசப் பிராமணன் (வைணவன்) செய்யும் பூசையை உகந்தவன் தான் எங்களது பராபரன் ஆவான்.

Koviloor Digital Library

பராவருந் தாம வைகுண்டத்
திருப்பிரிப் பாரினரும்
பராவருந் தாமரைத் தாடொழிற்
றேவர் பணி திவ்யசா
பராவருந் தாம லுயிரளிப்
பான் புல்லை பற்றினரிம்
பராவருந் தாம கிழுங்கோ
குலத்தும் படர்ந்துளிரே. 71

பராவு அருந்தாம! வைகுண்டத்து
இருப்பீர் இப்பாரினர்
உம்பராவர், உம் தாமரைத்தாள்
தொழின்! தேவர் பணி
திவ்ய சாபரா வருந்தாமல் உயிர்
அளிப்பான், புல்லை பற்றினீர்
இம்பர் ஆ வருந்தா மகிழும்
கோகுலத்தும் படர்ந்துளிரே.

விளக்கம்:

புல்லைப் பெருமானே நீர் புகழ்ந்து சொல்லுதற்கு உரிய அரிய ஒளிமயமான வைகுண்டத்தில் இருப்பீர். இம்மண்ணுல கத்திலும் கோகுலம் எனும் ஆயர் பாடியில் பசுக்கூட்டம் வருத்தம் அடையாமல் மகிழும்படி நீர் தங்கியிருந்து பார்த்துக் கொண்டீர். இந்தப் பாரில் உள்ளவர்களும் உமது தாமரை போன்ற திருவடிகளைத் தொழுது வணங்கினால் தேவர்களாக மாறுவர். எல்லா உயிர்களும் துன்பம் அடையாமல் காப்ப தற்காகவே திருப்புல்லாணித் தலத்தில் கோவில் கொண்டு அருள் செய்தீர்!

Koviloor Digital Library

படரவ வத்தனையா னன்னை
போலவந்த பாவியின் க
படரவ வத்தனை யாயுமுன்
னப்பால் பருகினன் செம்
படரவ வத்த முறாதேத்து
புல்லைப் பகவனகப்
படவ ரத்தழைப் பீர்கரி
போலன்பு பாய நின்றே! 72

பட அரவத்து அணையான்
அன்னை போல் வந்த பாவியின்
கபட வரவு அத்தனையும் ஆயும் உன்ன
பால் பருகினன்
செம்படவர் அவத்தம் உறா
ஏத்து புல்லைப் பகவன்
அகப்பட அரவத்து அழைப்பீர்
கரிபோல் அன்புபாய நின்றே!

விளக்கம்:

படங்களை உடைய பாம்புப் பாயலை உடையவனான திருமால் (கிருஷ்ணாவதாரத்தின் போது) தாய் போல வந்த பூதகியின் வஞ்சனையை ஆய்ர்பாடியில் உள்ள அனைவரும் நினைவில் கொள்ளுமாறு அவளின் தனப்பாலைப் பருகி அவளது உயிரையும் பருகினாள்! திருப்புல்லாணி கடற்பகுதி யைச் சார்ந்த மீனவர்கள் தங்களுக்கு துன்பம் நேராதபடி காப்பதற்காகவும் துதிக்கும் புல்லை பெருமான், ஆனால் அந்த எளிய மீனவரைப்போல் அப்பெருமான் உங்களுக்கு அருள் செய்ய வேண்டுமானால் கஜேந்திர ஆழ்வாரைப் போல அன்பு மிக்கவராய்ப் பேரொலி கிளப்பி அழையுங்கள்!

Koviloor Digital Library

பாய மகம்பரந் தூரப்
பதின்பர் சொல் பாட்டுகந்தோன்
பாய மகம்பரவற்கெனை
யாண்டவன் பத்தியின்று
பாய மகம்பர முய்க்குமென்
பார்க்கிலன் பைம்பொலக்கு
பாய மகம்ப ரணித்தேத்தும்
புல்லைப் பவித்திரனே. 73

பாயம் அகம் பரந்து ஊர
பதின்மர்சொல் பாட்டுஉகந்தோன்
பாயமகம் பரவற்கு எனை
ஆண்டவன் பத்தியின்றி
உபாயம் மகம் பாம் உய்க்கும்
என்பார்க்கு இலன் பைம்பொலக்
குப்பாயம் அகம்பர் அணிந்து
ஏத்தும் புல்லைப் பவித்திரனே!

விளக்கம்:

பகவானது புகழைப் பாடும் விருப்பம் தமது மனத்தின் ஊற்று போல ஊறும்படி பத்து ஆழ்வார்கள் பாடிய பாசுரங் களைக் கேட்டு மகிழ்ந்தவன்! நான் பாடும் இந்த யமகப் பாட்டினால் துதிக்கும் என்னை ஆட்கொண்டவன், (உள்ளத்தே) பக்தி யில்லாமல் தம்மை தாம் மேனிலைப் படுத்துவதற்கான உபாயம் தாங்கள் செய்யும் வேள்விகளே எனச் சொல்லுபவர்களை ஏற்காதவன் (யாரெனில்) பசுமை யான பொற்கவசத்தை கோவில் பணியாளர்கள் (மூலவர்க்கு) அணிவித்து துதிக்கும் திருப்புல்லாணி யில் உள்ள புனித மூர்த்தியே.

Koviloor Digital Library

பவள மலைக்குட் படர்கழிக்
 கானலிற் பான்மதியொப்
பவள மலைக்கு நிகருப்பி
 னார் புல்லை பாற்றிருவென்
பவள மலைக்கினிப் பாயமர்ந்
 தோனடி பாடினர்க்கின்
பவள மலைக்கப் படாதளிப்
 பான் செகம் பாலிப்பனே. 74

பவளம் அலைக்குட் படர் கழிக்கானலில்
பால் மதி யொப்ப
அளம் மலைக்கு நிகர் உப்பின்
ஆர் புல்லைப்பால்
திரு என்பவள் அமலைக்கு இனிப்பாய்
அமர்ந்தோன், அடி பாடினர்க்கு
இன்பவளம் அலைக்கப்படாது அளிப்பான்
செகம் பாலிப்பனே!

விளக்கம்:

பவளக் கொடிகள் கடல் அலைகளுக்குள்ளே படர்ந்து செழிக்கும் கடற்கரை சோலையில், பால் போன்ற சந்திர ஒளிக்கு ஒப்பாக, உப்பள வயல்கள் மலைகளைப் போல் உப்புக் குவியல்களை நிறைக்கும் புல்லாணியில், திருமகளா கிய மறுவற்ற தூயவளுக்கு இனிமை தர வீற்றிருந்தவன்! அவனது திருவடிகளைப் பாடித் துதிப்பவர்க்கு ஆனந்தத்தை அழிக்கப்படாமல் தருபவன் (அது மட்டும் அல்ல) அவன் இவ்வுலகையே காத்து ரட்சிப்பவன் (இத்தலத்து இறைவனுக்கு ஆதிசெகநாதன் என்பது திருநாமம்).

Koviloor Digital Library

பானலங் காரமென்றால் வாய்க்குரை
யென்பர் பண்ணவன் கோ
பானலங் காரண மென்பிர்க்
குமகுறை பார்மினென்பல்
பானலங் கார மலர்புல்லை
மாதவன் பாயருளுய்ப்
பானலங் காரம் புனையிர்
சொலீர் நினைப் பானிலிரே! 75

பால் நலம் காரம் என்றால்
வாய்க்குறை என்பர் பண்ணவன்
கோபானலங் காரணம் என்பீர்க்குஉம
குறை பார்மின் என்பல்
பானல் அங்குஆர மலர்புல்லை
மாதவன் பாய்அருள்
உய்ப்பான் அலங்கு ஆரம் புனையீர்!
சொலீர்! நினைப்பான் இலிரே!

பாலின் சுவையை கார்ப்பு என உரைத்தால் உரைப்பவர் தாம் வாய்க்குறை என உலகோர் சொல்வர்! அதுபோல இறைவனுடைய சீற்றம் தான் தங்களுடைய துயருக்குக் காரணம் எனச் சொல்கின்றவர்கட்கு உங்களது குற்றங்குறை களைப் பாருங்கள் என்று தான் நான் சொல்வேன்! ஏனெனில் நெய்தல் பூக்கள் நிறைந்து மலர்கின்ற புல்லாணி ஈசன் அவனது அருளை உங்கள்பால் செலுத்துவதற்கு நீங்கள் அவனுக்கு பக்தி செலுத்த மலர்மாலைகளைச் சூட்ட மாட்டீர்கள், உங்கள் வாயால் அவனது திருநாமங்களைச் சொல்ல மாட்டீர்கள்! அவனை நினைக்கக்கூட மாட்டீர்கள்! அப்படி ஆயின் அவன் உங்களுக்கு அருளாதது அவன் குற்றமா? இல்லை உங்கள் குற்றமே! பானல்-நெய்தல் பூ.

Koviloor Digital Library

பானத் தமரர் பருகற்
கமுது படைத்தவசோ
பானத் தமரக் சமயம்
பால கண் பகவமுத்தீன்
பானத் தமரங் பையினிடை
யூர் புல்லைப் பண்ணவ! நின்
பானத் தமர்பினி தோங்குஞ்
சேது பதிகளுக்கே! 76

பானத்து அமரர் பருகற்கு
அமுது படைத்தவனே
சோபானத்து அமரச் சமயம்
பலகாண் பகவ! முத்து ஈன்
பால் நத்தம் அரம்பையில் இடை
ஊர் புல்லைப் பண்ணவ!
நின்பால் நத்த மரபு இனிதோங்கும்
சேது பதிகளுக்கே!

தேவர்கள் பருகுவதற்கு அமிர்தத்தை உண்டாக்கி அளித்தவனே, தான் அமரும்படி படிகளாகத் தங்கும்படி பல சமயங்களை செய்த தெய்வமே! (சமரச மூர்த்தியே) முத்துக்களைப் பெற்றெடுக்கிற வெண்மை நிறம் உடைய சங்குகள் வாழை மரங்களிடையே ஊர்ந்து செல்லும் புல்லாணித் தெய்வமே! உன்பால் அன்பு வைத்துத் திருப்பணிகள் செய்யும் சேது மன்னர்களுடைய மரபு இனிதாய் வளர்ந்து நிலைக்கும்! (நெய்தல் நிலச் சங்கு மருத நில வாழையினிடை ஊர்வதால் இரண்டும் அண்மைத்தே.)

Koviloor Digital Library

கட்கா தலைக்கா திடர்ப்பொய்
விள்ளாது பெண்காமமொடு
கட்கா தலைப்புரி யாதளிப்
பாய்புல்லை காகுத்தது
கட்கா தலைத்தவிர்க் காயெனிற்
செல்வல்பைங் காய்தின்றம
கட்கா தலைச் செய்த
நன்னன் புகுநர கத்திடையே **77**

கட்காது அலைக்காது இடர்ப்பொய்
விள்ளாது பெண் காமமொடு
கள் காதலைப் புரியாது அளிப்பாய்!
புல்லைக் காகுத்த!
துகட்கு ஆதலை தவிர்க்காய் எனில்
செல்வம் பைங்காய் தின்ற
மகள் கொலை செய்த நன்னன்
புகு நரகத்திடையே.

விளக்கம்:

களவு செய்யாது, கொல்லாது ஏனையோர்க்கு துன்பம் தரும் பொய் வார்த்தைகளைக் கூறாது, மாதரின் உடலின் பத்தை விரும்பாது, மது அருந்தாது இருக்கும் படி புல்லாணியில் உள்ள காகுத்தனே என்னைக் காத்தருள்வாயாக! மேற்சொன்ன ஐவகைக் குற்றங்களையும் நான் செய்யாமல் நீ தடுக்காவிட்டால் பசிய தீங்காயினைத் தின்றமைக்காக ஓர் பெண்ணைக் கொலை செய்த நன்னன் என்பவன் புகுந்த நரகிற்கு நானும் செல்ல நேரிடும்! (நன்னன் எனும் மன்னன் அருமையாய் வளர்த்த செம்மரத்தின் காய் ஆற்றில் விழ அதை எடுத்து உண்ட குற்றத்துக்காக அதற்கு பரிகாரமாக 18 யானை களையும் அவளது எடைக்கு எடை பொன்னையும் தருவதாய் அவள் கூறியும் அதை ஏற்க மறுத்து அவளைக் கொலை செய்தான். குறுந்தொகைப் பாடல்.)

Koviloor Digital Library

கத்திய மாதங்க முன்வந்த
புல்லைக் கருணையனா
கத்திய மாதங்க மெய்தா
தொருபான் கவிஞர் புகல்
கத்திய மாதங்க மாப்போற்ற
வேற்றான் கழன்றிக்கார்
கத்திய மாதங்கமோர் புனை
நும்பவக் கார்கடற்கே! 78

கத்திய மாதங்கம் முன் வந்த
புல்லைக் கருணையன்
ஆகத்தியம் ஆதங்கம் எய்தாது
ஒருபான் கவிஞர் புகல்
கத்தியம் மாதங்கமாப் போற்ற
ஏற்றான், கழலன்றிக்
கார்கத்தியம் மாது அங்கமோ புணை
நும்பவக் கார்கடற்கே!

விளக்கம்:

கார்கத்தியம்-சார்ஹஸ்தியம் அதாவது கிரகஸ்த நிலை; தத்தியம் (பாடல் பாசுரம்) ஆகத்தியம் அகத்தியம். பேரொலி எழுப்பிக் கூவிய யானை முதலை வாயில் இருந்து மீட்பதற் காக வந்த புல்லாணிக் கருணாமூர்த்தி, அகத்தியர் எழுதிய தமிழ் இலக்கணம் தளர்வு எய்தாதபடி இருக்கும் பத்து ஆழ்வார்கள் அருளிச் செய்த பாசுரங்களை பொன்னைப் போல் உலகினர் போற்றும்படி அவற்றை ஏற்றுக் கொண் டான்! அவனது திருவடிகளல்லாது இல்லற வாழ்க்கையில் உள்ள (உம்) மனைவியின் அங்கங்களா உமது பிறவிக் கடலுக்கு தெப்பம் போல விளங்கும்? விளங்காது!

Koviloor Digital Library

கடப்பா ரமரும் புயவே
  டொழும்பூங் கழலினன்மக்
கடப்பா ரமரும் புலாணிப்பதிப்
  பகவந் பெருஞ்ச
கடப்பா ரமரும் புலப்பற
  ஹூர்ந்தென்ன காய்ந்தெளியர்க்
கடப்பா ரமரும் புரிவாரைத்
  தள்ளும் கடுநரகே! 79

கடம்பு ஆரம் அமரும் புயவேள்
  தொழும் பூங்கழலினன்,
மக்கள் தப்பார் அமரும் புலாணிப் பதிப்
  பகவன், பெரும்
சகடப்பாரம் அரும்பு உலப்பு உற
  ஊர்ந்தென்னக் காய்ந்து எளியர்
கடப்பார் அமரும் புரிவாரைத்
  தள்ளும் கடுநர்கே!

விளக்கம்:

கடம்ப மலர்களான மாலையினைத் தாங்கும் தோள்களை உடைய முருகப் பெருமான் வணங்கிப் போற்றும் பூங் கழல்கள் அணிந்த திருவடியன், உலக மக்கள் நெறிகள் தப்பாது வசிக்கும் புல்லாணிப் பதியின் கடவுள், பெரும் சகடத்தின் பாரங்கள் பூ அரும்புகள் சிதைவு படச் செல்லுதல் போல், எளியவர்கள்பால் இனம் காட்டி மிதித்து அந்த எளியவர் களுடன் போரும் செய்யும் கெடுமதியாளர்களை கடுமை யான நரகத்தில் உழலும்படி தள்ளுவர்.

Koviloor Digital Library

கடுக்கன லாயுதங் கொல்லாது
 பிள்ளையைக் காத்தனை யோர்
கடுக்கன லாலணியாய் வினைத்தேள்
 கொட்டக் கன்றிஎம்முள்
கடுக்கன லாயறி வாய்புல்லை
 யாயிது கண்டருள்ச
கடுக்கன லார்பஞ்சி போற்கெட
 நீட்டிய கான் மருந்தே! 80

கடு, கனல், ஆயுதம், கொல்லாது
 பிள்ளையைக் காத்தனை! ஓர்
கடுக்கன் அலால் அணியாய்! வினைத்தேள்
 கொட்டக் கன்றி எம்முள்
கடுக்கல் நல்லாய், அறிவாய்,
 புல்லையாய்! இது கண்டு அருள்
சகடு உக்கு அனலார் பஞ்சி போல்
 கெட நீட்டிய கால் மருந்தே!

விளக்கம்:

பிரகலாதனை கொடிய விஷம், எரிநெருப்பு ஆயுதங்கள் ஆகியன கொல்லாமல் காப்பாற்றினாய்! ஒற்றை குண்டலம் அல்லாது வேறு ஏதும் அணிந்து கொள்ளமாட்டாய்! நாங்கள் செய்த பாவ வினைகள் எம்மை தேள் போல் கொட்ட அதனால் ஏற்படும் கடுப்பு (கடுக்கல்) நிறைவதை நல்லவனா கிய நீ நிச்சயம் அறிவாய்! புல்லாணியில் உள்ளவனே! இந்த எம் வேதனையைப் பார்த்து சகடாசுரன் தீப்பட்டு பஞ்சு போல் அழிந்து போகக் காரணமான உன் திருவடி ஆகிய மருந்தை எங்கள் பாலும் நீட்டி யருள்வாயாக! (அந்த உனது திருவடி யாகிய அனல் எமது பாவங்களையும் சகடாசுரனை அழித்ததுபோல் அழிக்காதா?

Koviloor Digital Library

கானம் ருந்தின தூடணன்
 விடச் செய் காகுத்தனும்
கான மருந்தி னருந்தச்
 குழலிசைக் கண்ணனுமாய்க்
கான மருந்தின மேத்தப்
 பாவக்கரை கண்டுய்க்க மீ
கான மருந்தின் வாற்றெழும்
 புல்லைக் கடற்புலத்தே 81

கான் அமர் உந்தின தூடணன்
 வீடச் செய் காகுத்தனும்
கானம் மருந்தின் அருந்தக்
 குழல் இசை கண்ணனுமாய்க
கால் நமரும் தினம் ஏத்த
 பவக்கரை கண்டுய்க்க
மீகான் அமரும் தினவால்
 தொழும் புல்லைக் கமல்புலத்தே.

விளக்கம்:

காட்டினில் போர் செய்த தூடணன் எனும் அரக்கனை மடிந்து வீழச் செய்த ராமனுமாய், இசையை அமிர்தம் போல் பருகச் செய்ய புல்லாங்குழல் இசைத்த கண்ணனும் ஆகிய உனது திருவடிகள் நம்மவர்களுக்கும் தினம் வணங்கித் துதிக்குமாறு, பிறவிக் கடலை கடக்கச் செய்யும் மாலுமியாக விருப்பத் தோடும் உறையும் கடல்கரையில் உள்ள புல் லாணித் தலத்தில் உங்களது பிறவித் துயர் நீங்கும் வண்ணம் வணங்குவீராக. இராமனது செய்கை வன்மையையும் கண்ணனது செய்மை மென்மையையும் காட்டியதால் இறை வன் இரண்டும் கலந்த வடிவாய் இருப்பவன் என்று குறிப்பு.

Koviloor Digital Library

புலவா தவனிவ னென்று சொல்
வீர்க்கு புகல்வ லென்னைப
புலவா தவனி மணாளன்
பிதாவெனப் போய்த் தொழும்வி
புலவா தவனிடை மேவி
யெலாமும் புகுந்தொளித்தான்
புலவா தவநிறையாய் மேயும்
புல்லைப் பொலிந்தவனே. 82

புலம் வாது அவன் இவன் என்று
சொல்வீர்க்கு புகல்வன் என்னை
புலவாது அவனிமணாளன் பிதா எனப்
போய்த் தொழும்
விபுல ஆதவனிடை மேவி
எல்லாமும் புகுந்து ஒளித்தான்
புல ஆ தவ நிலையாய் மேயும்
புல்லை பொலிந் துளனே.

விளக்கம்:

அந்தக் கடவுள் இந்த உயிர் என்று உங்கள் (குறை) அறிவினால் தர்க்கவாதம் செய்பவர்களே! உங்களுக்குட் சொல்வேன்! என் கூற்றை வெறுத்து ஒதுக்காது, பூமி தேவியின் நாயகன் உலகுக்குத் தந்தை என்று புல்லாணி இறைவனைத் தேடி வந்து துதியுங்கள்! அவன் பரந்து விரிந்த சூரிய மண்டலத்துக்கு நடுவே அமர்ந்து எல்லா பொருள்களிலும் புகுந்து மறைந்து இருப்பான்! அவன் தான் வயல்களில் பசுக்கள் கூட்டமாய் நின்று மேயும் புல்லாணியில் ஒளி வெள்ளமாய் இருக்கிறான்! புலம்-வயல்; புலவல்-வெறுத்தல்; விபுல-பரந்து விரிந்து.

Koviloor Digital Library

துளவம் பலர்தொடுத்துச் சூட்டப்
பல்பதி தோற்றியுந்தந்
துளவம் பலம ரமெய்தச்
செய்வரோத் துளர்க்கிலன்வா
துளவம் பலர்தொழு வான்றொழுந்
தேவாய்த் துலங்கி விண்பொ
துளவம் பலர்பொழிற் புல்லைத்
துறைவாழ் சுகக்கடலே! 83

துளவம் பலர் தொடுத்துச் சூட்ட
பல்பதி தோற்றியும்
கந்துள் அவம் பலமரம் எய்தச்
செய்வார் ஒத்துளர்க்கு இலன்
வாதுளம் வம்பலர் தொழுவான்
தொழும் தேவாய்த் துலங்கி
விண்பொதுள வம்பு அலர் பொழி
புல்லைத் துறைவாழ் சுகக்கடலே!

விளக்கம்:

துளசி மாலையினை பலர் தொடுத்து அணிவிக்க பல திருப்பதிகளில் தோன்றியும் உள்ளவன், பயன் தரும் மரங்கள் கேடு அடையும்படி கரி ஆக்குபவர்களுக்கு இணங்க மாட்டான்! ‘வாதுளம்’ எனும் சிவாக முறைப்படி பலர் தொழும் கடவுளாகிய சிவபெருமானே வணங்கும் தெய்வ மாக விளங்குபவன் (சுய லாபத்துக்காக) பல மரங்களை எரித்து கரியாகச் செய்பவர் போல் உள்ளவர்களை அவன் ஏற்கமாட்டான்! ஆகாயமெலாம் நெருங்கி மணம் வீசும் மலர்ச் சோலையின் பொருந்திய புல்லாணியின் வாழும் சுகக்கடல் அவன்தான். கந்துள்-கரி; பொதுள-நெருக்க மாக; வாதுளம்-ஓர் சிவாகமம்.

Koviloor Digital Library

சுகந்தரு வர்க்குள் ளுவார்க்குள
மேய துழாயர்க்குவிஞ்
சுகந்தரு வர்க்குட் பதியாகும்
புல்லைச் சுலபர்க்கொரா
சுகந்தருவர்க் கமோ ரேழிற்குங்
கோத்ததுணை வர்க்குமெய்
சுகந்த குவர்க்கு தொழும்பா
கிலம்பவந் தோய்ந்தனமே! 84

சுகம் தருபவர்க்கு உள்ளுவார்க்கு
உளம்மேய துழயார்க்கு
விஞ்சு கந்தருவர்க்குட் பதியாகும்
புல்லை சுலபர்க்கு ஒரு
ஆசுகம் தரு வர்க்கம் ஒரு ஏழிற்கும்
கோத்த துணைவருக்கு
மெய்ச்சுகந்தர் உவர்க்கு தொழும்பு
ஆகிலம்! பவம் தோய்ந்தனமே!

விளக்கம்:

தன்னை உள்ளத்தில் வைத்து துதிப்பவர்க்கு இன்பத்தையே அளிக்கும் துளவமாலை அணிந்த பெருமானுக்கு, சித்ரநாதன் எனும் கந்தர்வமன்னன் வந்து தொழுவதற்கு எளியவராய்க் காட்சி தருபவருக்கு, சுக்கிரீவனுக்கு உதவும் பொருட்டு அவனது துணைவனாகி எழு மரங்களை ஒரே அம்பினால் துளைத்தவராகிய ராமனுக்கு, என்றும் தனது மேனியில் சுகந்த மணம் வீசும்படி திருமேனி கொண்ட புல்லாணித் தெய்வத் துக்கு, அடிமையாக நாங்கள் மாறவில்லை! அதன் காரணமாய் பிறவித் துயரிலே அமிழ்ந்தோம்.

Koviloor Digital Library

தனத்தா துரங்கலந் தீட்ட
முயன்ற தனாலிலர்சந்
தனத்தா துரங்கமழப் பூசியும்
மணந்தாங் கிலிர்
தனத்தாது ரங்க மணவாள
புல்லைத் தலத்த மன்ம
தனத்தா துரங்கமு மாவாயென்
னார் வெறிதாயினரே. 85

தனத்து ஆதுரம் கலந்து
ஈட்ட முயன்றதினால் இலர்
சந்தனத் தாது உரம் கமழப்
பூசியும் மணம் தாங்கிலிர்
ஈதல் நத்தாது ரங்க மணவாள
புல்லைத் தலத்த! மன்மதன்
அத்தா! துரங்கமும் ஆவாய்
என்னார் வெறிது ஆயினரே!

விளக்கம்:

செல்வத்தில் ஆசை வைத்து விரைந்து பொருள் ஈட்ட முயன்ற தால் இல்லாதவரானார் (வறுமை கொண்டவர்) சந்தனத்துப் பொடிகளை தமது மார்பில் மணம் ஏற்படுத்தும் வண்ணம் பூசினாலும் அவர்கட்கு அம்மணம் இல்லாது விளங்குவர் பிறர்க்கு ஈதலை விரும்பவும் மாட்டார்கள். அவர்கள் திருவரங்கத்தில் உள்ள ரங்க நாயகியின் கணவனே! என்றும் புல்லாணித் தலத்தில் உள்ள தெய்வமே என்றும் தமது வாயாலும் சொல்லாமலும் இருப்பவர்கள்! அப்படி உள்ளவர்கள் இருந்தும் இல்லாதவராய் வெறுமை அடைவர். குறிப்பு: ஈதலும் தெய்வத்திரு நாமங்களை ஏத்துதலும் உள்ளவர்க்கே ஈட்டிய செல்வம் பயன் தரும்.

Koviloor Digital Library

தாயாக வந்தனை பேயென்
றுயிருண் டனடைந்தார்
தாயாக வந்தனை சாரதி
யாக்கிவென் றானெணிச்ச
தாயாக வந்தனை செய்வார்க்கு
இனிப்பவன் நண்புல்லையேத்
தாயா கவந்தனைத் தீர்த்தா
னருளில் தவழ் நெஞ்சமே! 86

தாயாக வந்தனை பேய் என்று
உயிர் உண்டனன்! அடைந்தார்
தாய ஆகவம் தனை சாரதியாக்கி
வென்றான்! எண்ணிச்
சதா யாகவந்தனை செய்வார்க்கு
இனிப்பவன்! தண்புல்லை
ஏத்தாயா! கவந்தனை தீர்த்தான்!
அருளில் தவழ் நெஞ்சமே.

விளக்கம்:

கவந்தனின் சாபத்தைத் தீர்த்தவனாகிய பெருமானின் அருளில் தவழ்கின்ற என் நெஞ்சமே நீ தாய் போல் பாலூட்ட வந்த பூதகியைப் பேய் என அறிந்து அவனது உயிரைப் பருகியவனும், அவனே சரண் என அடைந்த பாண்டவர் களின் தாயப் போரினில் பார்த்தனுக்கு சாரதியாகி வென்றவனும், அவனையே எண்ணி எப்போதும் வேள்விகள் செய்து துதிப்பவர்களின் மனத்தே இனிமை தருபவனும், ஆன குளிர்ச்சி பொருந்திய புல்லாணி தலத்தில் கோவில் கொண்ட இறைவனை ஏத்தி துதிக்க மாட்டாயா?

Koviloor Digital Library

தவழகற் றான்வன் மருதிடை
யாய்ச்சி தனித்து நெய்பெய்
தவழக்கற் றாகப் பருகினன்னூர்
முற்றும் தன்னுடன் போ
தவழகற் றாங்கழற் கானடைந்தான்
புல்லை கண்டருளெய்
தவழக்கற் றாய்நெஞ்ச மேயினி
யார்துணை சாம்பொழுதே! 87

தவழக் கற்றான் வன்மருதிடை
ஆய்ச்சி தனித்துப் பெய்த
அழக்கு அற்றாக பருகினன்
ஊர்முற்றும் தன்னுடன்
போதஅழ கல்தாங்கு சுழற்கான்
கிடந்தான் புல்லைக்கண்டு அருள்செய்
தவழக்கற்றாய் நெஞ்சமே
இனியார் துணை சாம்பொழுதே.

விளக்கம்:

நெஞ்சமே நீ சாகும் தருணத்தில் உனக்கு யார் துணையாவார் வலிய மருத மரங்கள் அரக்கர்கள் எனத் தெரிந்து அவற்றின் இடையே தவழ்ந்து செல்ல அறிந்தவன் ஆயர்பாடியில் உள்ள பெண்ணொருத்தி நெய்க்களவினைத் தவிர்ப்பதற்கு வேண்டி ஆழாக்கு நெய்யினை அப்படியே முழுவதும் அந்தப் பெண் வைத்த ஆழாக்கு அவள் வைத்த இடத்திலேயே இருக்கும்படி குடித்தவன், ஊர் மக்களெல் லாம் தன்னுடனே வந்து தாங்களும் கானகம் மறைத்து வைத்தார். வருவோம் என்று அழ கல்கள் நிறைந்த கானகத்தை அடைந்தவன், ஆகிய புல்லாணிப் பெருமானைத் தெரிசித்து அவன் அருளை எய்துதற்கு உனக்கு வழக்கம் ஏற்பட வில்லையே! அழக்கு-ஆழாக்கு.

Koviloor Digital Library

சாந்தருணத்திற் கார் துணை
புல்லைமன் தண்புயத்திற்
சாந்தருணத்திலங்கக் காப்பிட
நினைந்தா யிலைபொச்
சாந்தரு ணத்திலை நன்னெறி
செல்கிலை தம்முளுப
சாந்த ருணர்த்தியும் கேட்கிலை
நெஞ்சே தருக்குவையே! 88

சாம் தருணத்து நிற்கு ஆர் துணை
புல்லைமன் தண் புயத்தில்
சாந்து அருணித்து இலங்கக்
காப்பிட நினைந்தாய் இலை,
பொச்சாந்து அருள் நத்திலை
நன்னெறி செல்கிலை தம் உள்
உபசாந்தர் உணர்த்தியும் கேட்கிலை
நெஞ்சே தருக்குவையே!

விளக்கம்:

நெஞ்சமே நீ புல்லை மன்னவன் குளிர்ச்சி பொருந்திய தோள்களின் சந்தனத்தை செந்நிறமாய் விளங்கும்படி திருக் காப்பிடவில்லை மறந்துபோய்க்கூட அவனது அருளை விரும்பவில்லை. நல்ல நெறிகளில் செல்லவும் இல்லை உபசாந்தர்கள் இதை உனக்கு உணர்த்தி உபதேசம் செய்தும் அதைக் கேட்க வில்லை. ஆதலால் நீ சாகும்போது உனக்கு யார் துணையாவார்? உபசாந்தர்-மனத்தின்கண் அமைதி பெற்ற சான்றோர்; அருணத்து இலங்க-செந்நிறமாய் விளங்க.

Koviloor Digital Library

குவையா வருத்தம் வளர்த்தென்
னெஞ்சேபிறர்க் கோவித்துப்புக்
குவையா வருத்தம் விளைப்பா
யலைப்பைபல் குற்றத்தின்மி
குவையா வருத்தம் ரேன்பா
யிவற்றாற் கொடிதிருட்கே
குவையா வருத்த மகிழ் புல்லை
மலருட் கோவிலையே. 89

குவையா அருத்தம் வளர்த்து என்
நெஞ்சே! பிறர்க் கோவித்துப்
புக்கு வையா வருத்தம் விளைப்பாய்
அலைப்பை பல் குற்றத்தின்
மிகுவை! யாவர் உத்தமர் என்பாய்!
இவற்றால் கொடிது இருட்கு
ஏகுவை! ஆ அருத மகிழ்
மால் அருள் கோஇல்லையே.

விளக்கம்:

என் நெஞ்சே! நீ குவியலாக செல்வத்தைப் பெருக்கி என்ன பலனைக் காண்பாய்? பிறரை உன் சினத்தால் வைது துன்பம் விளைவிப்பாய்! பல குற்றங்களைப் புரிவாய். அவற்றினை நியாயப்படுத்துவதற்காக மற்றவர்களில் யார் ஒழுக்கமாய் உள்ளவர் எனச் சொல்வாய்! இந்தப் பிழைகளால் கொடிய இருள்மிகு நரகத்துக்குச் செல்வாய்! அதனால் பசுக்களுக்கு உணவு ஊட்டுதலில் பெருமகிழ்வு கொண்ட புல்லாணித் தெய்வத்தின் அருளுக்கும் பாத்திரமாக மாட்டாய். (எனவே இந்தத் தவறுகளைச் செய்யாதே) என்பது குறிப்பு.

Koviloor Digital Library

கோவாலை யத்தியென் றாலது
வாமென்று கூறியு நற்
கோவாலை யத்திற் றல்விளை
யாட்டெனக் கூடியும் வெங்
கோவாலை யத்தி னெரிந்துங்
குறிர்காற் குளிர்ந்துங் கெடு
கோவாலை யத்திருவாழ் புல்லை
மால் புகழ் கோ வியந்தே! 90

கோ ஆலை அத்தி என்றால்
அதுவாம் என்று கூறியும்
நற்கோவலா அத்தி பற்றல்
விளையாட்டு எனக் கூடியும்
வெங்கோவ ஆலையத்தின் எரிந்தும்
குளிர்கால் குளிர்ந்தும்
கெடுகோ? வாலை அத்திருவாழ்
புல்லைமால் புகழ்கோ வியந்தே!

விளக்கம்:

அரசன் ஆலமரத்தை அத்திரம் என்று பிழையாகச் சொன்னால் ஆமாம் அது அத்திமரம்தான் என கூற்றுக்கு மாறு சொல்லாமல் சொல்லியும், அவ்வரசன் நல்ல பசுவின் வாலை யானை பிடித்தால் நல்ல விளையாட்டு என உரைத்ததை ஏற்றும் அவ்வரசன் சினம் கொண்டபோது (அவனது சினத்தின் காரணமாய்) வெதும்பியும், அவன் மனம் குளிர்ந்த சமயம் தானும் குளிர்ந்தும் கெட்டு அழிவேனோ? இளமை பொருந்திய திருமகள் வாழ்கின்ற புல்லைநாதனை வியந்து நற்கதி பெறுவேனோ அறிகிலேன்!

Koviloor Digital Library

வியப்பாவை யாநின் னருளேத்தி
லேனென் விதிப்பை யெற்கோ
வியப்பாவை யாய்பெண்டி ரைப்போற்றி
னேன்கா புயனென்றுகா
வியப்பாவை யார்மிசை யும்புகழ்
வேனெரி விண்வளிபு
வியப்பாவை யாமப் பறை சூழ்
புல்லாணி விமானத்தனே! 91

வியப்பா ஐயா நின் அருள் ஏத்திலேன்
என் விதிப்பை எற்கு?
ஓவியப்பாவையாய் பெண்டிரைப்
போற்றினேன், காபுயனென்று
காவியப்பாவை யார் மிசையும்
புகழ்வேன்! எரிவிண்வளி
புவி அப்பு ஆவை! யாமப்பறை சூழ்
புல்லாணி விமானத்தனே!

விளக்கம்:

யாமந்தோறும் பறைகள் முழங்கும் புல்லாணிப்பதியில் உள்ள ஸ்வஸ்திக விமானத்தில் இருக்கும் ஐயனே! உன்னுடைய அருளை வியந்து துதித்தல் செய்திலேன், எனக்கு என்ன விதிப்பயனைத் தருவையோ (அறிகிலேன்) பெண்களை சித்திரப்பாவையராய் போற்றிக்கொள்வேன்! தகுதியில்லாதவரை பொருள்பெற வேண்டி கற்ப மரம் போல் வாரி வழங்கும் வள்ளலே என்று கவிதைகள் பாடிப் புகழ்வேன். நெருப்பு, ஆகாயம், காற்று, புவி, நிலம், நீர் ஆகிய ஐந்தும் ஆய் இருப்பவனே!

Koviloor Digital Library

மானத்தனைவா யரவணை
மாயன் சுவத்திகவி
மானத் தனைவவும் போற்றவண்
புல்லைய மர்ந்தவன்ச
மானத் தனையென்று மில்லாத்
திருமண வாளனருள்
மானத் தனைத்தா னளிக்குங்
கொலோ உடல் மன்னுயிரே! 92

மால் நந்தன் ஐவாய் அரவு
அணை மாயன் சுவத்திக
விமானத்து அனைவரும் போற்ற
வண் புல்லை அமர்ந்தவன்
சமானத்தனை என்று மில்லாத்
திருமணவாளன் அருள்
மான தனைத்தான் அளிக்கும் கொலோ?
உடல் மன்னுயிரே!

விளக்கம்:

திருமால் (ஆகியவன்) சங்கினை ஏந்தியவன் ஐந்து வாய் களை உடைய பாம்பினை அணையாகப் பெற்ற மாயவன், சுவத்திக எனும் விமானத்தில் உலக உயிர்கள் அனைத்தும் போற்றும் வண்ணம் வண்மையுடைய புல்லாணியில் அமர்ந்தவன் தன்னை ஒப்பானை என்றும் காணாத இலக்குமி மணாளன்! இவனது அருளைப் போல் காக்கும் வண்ணம் உங்கள் உயிர் இருக்குமோ உடலில் உயிர் வாழ்தற்கும் அவனது அருள்தான் வேண்டும் அது இல்லையெனில் உடல் தன்னில் உள்ள உயிரைத்தானே காத்துக் கொள்ளுமோ?

Koviloor Digital Library

மன்றானியங்கா திசைமாந்த
வேய்ங்குழல் வாய்வைப்பன்பொன்
மன்றா னியங்காத்தடி யெடுத்
தாட மகிழ்பரந்தா
மன்றா னியங்கா டெலாம்விளை
புல்லை வரனருட்க
மன்றா னியங்காணுவர்பெரு
வீட்டினில் வாழ்பவரே! 93

மன்று ஆன் இயங்காது இசை
மாந்த வேய்ங்குழல் வாய் வைப்பன்
பொன் மன்றான் இயங்காத்து அடி
எடுத்துஆட மகிழ் பரந்தாமன்,
தானியம் காடெலாம் விளை
புல்லைவரன்! அருட்கு
அமன்று ஆனியம் காணுவர்
பெரு வீட்டினில் வாழ்பவரே!

ஆனியம்-நித்யகர்மம் (பூசை); அமலல்-நெருங்குதல்.

விளக்கம்:

பசுக்கூட்டங்கள் தத்தமது கட்டுமிடங்கு செல்லாமல் இசையினைப் பருகும் வண்ணம் புல்லாங்குழலை வாயில் வைத்து இசைத்தவன்! பொன்னம்பலம் ஆகிய தில்லையில் இசைக் கருவிகளின் தாளத்துக்கு ஏற்ப நடனம் செய்யும் நடராஜனது நடனத்தினைக் கண்டு மகிழ்ச்சி எய்தும் பரம்பொருள், தான்யங்கள் விளை நிலங்களில் எல்லாம் விளையும் புல்லாணியில் உள்ள தலைவன், அவனது திருவருளுக்கு ஆட்பட்டு, தினம் தோறும் பூசை செய்வதை காண்பவர்கள் சுவர்க்கத்தில் வாழ்பவர்.

Koviloor Digital Library

பவராக மாய விடாது
பிணிக்கப்புன் பாழிருள்சேர்
பவரா மாய விருப்பீர்
பரவுமின் பாருறுவப்
பவராக மாயவர் புல்லைப்
பிரானார் பராற்பரவை
பவராக மாயம னால்பிரிப்பார்
பார்திருப் பாதங்களே! 94

பவராகம் ஆய விடாது பிணிக்கப்
புன் பாழ் இருள்
சேர்பவராக மாய இருப்பீர்!
பரவுமின்! பார் உள் உவப்ப
வராகம் ஆயவர்! புல்லைப்
பிரானார்! பராத்பர
வைபவர் ஆகம் மா யமனால்
பிரிப்போர், திருப்பாதங்களே!

விளக்கம்:

பிறவிக்கு காரணமாகிய ஆசை உம்மை விடாது பற்றுவதால் புன்மையான பாழ்த்த இருள்சூழ்ந்த நரகத்துக்கு போவீகள்! உங்கள் உடலில் இருந்து உயிரை யமன் பிரிப்பதற்கு ஆளாவீர! இத்துயரம் நீங்க வேண்டுமானால் நீங்கள் இந்தப் பூமிதேவி உள்ளம் களிக்குமாறு வராக அவதாரம் எடுத்த வரும் பராத்பரரும் ஆன புல்லாணிப் பெருமானின் திருவடிகளைத் துதியுங்கள்! பராத்பரர்- உயர்ந்தவற்றுள் எல்லாம் உயர்ந்தவர்.

Koviloor Digital Library

தங்கத் தனைய சுடர்மேனி
மாயனைத் தண் புல்லையிற்
றங்கத் தனைவைத்து வீடும்
புரக்கும் சகபதியைத்
தங்கத் தனைப்பர வார்காம
தீபந் தனில் விழும்ப
தங்கத் தனைசுட மாய்வரந்
தோபல சன்மங்களே! 95

தங்கத்து அனைய சுடர் மேனி
மாயனைத் தண்புல்லையின்
தங்கத்தனை வைத்து வீடும்
புரக்கும் சகபதியை,
தம் கத்தனைப் பரவார்,
காம தீபம்தனில் விழும்
பதங்கத்து அனைசுட மாய்வர்
அந்தோ பல சன்மங்களே!

விளக்கம்:

தங்கத்தைப் போல சுடர் விடும் திருமேனி கொண்ட மாயவனை குளிர்ச்சி மிகும் புல்லாணியிலே நிலையாகத் தன்னை வைத்து மண்ணையும் விண்ணையும் காத்த அருளும் ஜெகன்னாதனை, தங்களுக்கு உரிய தலைவனை, தெய்வத்தை பணிந்து வணங்காதவர்கள் காமம் எனும் தீபத்தில் விழும் விட்டிலைப் போல (ஊழ்வினையாகிய) நெருப்பு சுடுவதால் இறந்து விடுவார்கள்! ஐயோ பல பிறவிகள் எடுத்தாலும் அப்படியே இறந்து ஒழிவார்கள்! பதங்கம்-விட்டில்.

Koviloor Digital Library

மங்கள வாச்சிய வோசையறா
புல்லை மால் பிறர்நா
மங்கள வாச்சிய மென்றிருப்
பார்சொலு மாயவன்கா
மங்கள வாய்ச்சியர் பாற்செய்த
வண்பனை வாழ்த்திற் சுடர்
மங்கள வாச்சியம் பெய்திரி
போலொளி மல்குவிரே! 96

மங்கள வாச்சிய ஓசை அறாப்
புல்லைமால் பிறர்
நாமங்கள் அவாச்சியம் என்றிருப்பர்
சொலும் மாயவன்
காமம் களவு ஆய்ச்சியர் பால்செய்த
அன்பனை வாழ்த்தில்
சுடர்மங்கு அளவு ஆச்சியம்
யெய்திரி போல் ஒளி மல்குவீரே!

விளக்கம்:

மங்கள வாத்தியங்களின் ஒலி என்றும் நீங்காமல் ஒலிக்கக் கூடிய புல்லாணியில் உள்ள பெரியோன், பிறருடைய பெயர்கள் சொல்லத்தக்கன இல்லை என்ற கருத்துடையவர் செபிக்கும் மாயவர்! ஆயர்பாடிப் பெண்களிடம் களவியல் இன்பம் கண்டவர்! அவரை வாயார வாழ்த்தி துதித்தால் சுடர்விட்டு எரியும் தீபத்தில் அச்சுடர் மங்கி வரும் சமயம் நெய்யினை ஊற்றினால் அச்சுடரில் இட்ட திரியில் ஒளி பெருகமே அப்படி ஒளி பெருக வாழ்வார்! அவாச்சியம்- சொல்லத்தக்கன; ஆச்சியம்- நெய்.

Koviloor Digital Library

குவித்த கரம்பர வும்வாய்
கருதுளங் கூர்ந்தியல்வெ
குவித்த கரம்பதி கங்கண்
பெயத் தொழும் கோனல் லொழுக்
குவித்த கரம்பழுக் கும்புல்லை
யான்றளி கொண்டுதிறக்
குவித்த கரம்ப னகராளி
எங்கள் குலதெய்வமே! 97

குவித்த கரம் பரவும்வாய்
குருதுஉளம் கூர்ந்து இயல்
வெகுவித்தகர் அம்பு அதிகம் கண்பெய
தொழும்கோன், நல்
ஒழுக்குவித்து அகரம் பழுக்கும்
புல்லையான்! தளிக்கொண்டு
திறக்குவித்த கரம்பன் நகர் ஆளி
எங்கள் குலதெய்வமே!

விளக்கம்:

புல்லைப் பெருமானை வணங்குவதற்காக குவிந்த கரங்கள் அவன் புகழ் பாடும் வாய் அவனைப் பற்றியே சிந்திக்கும் உள்ளம் கொண்ட திறம் மிக்கவர்கள் கண்களில் நீர் வெள்ள மாய் வடிய அவனைத் தொழும்படி அமைந்த தலைவன் நல்லொழுக்கம் எனும் விதை பழுக்கும்படி அந்தணர்கள் நிறைந்த புல்லாணி தேவன் திருக்கரம்பனூர் எனும் தலத்து ஆலயத்தில் உறைந்து ஆல வாயில்கள் எப்போதும் திறந்து இருக்கும்படி அவ்வூரை ஆள்பவன் அவன்தான் எங்கள் குலதெய்வம்!

Koviloor Digital Library

குலவாய ரான்கன் றெனப்புகு
வாய்கோ குலனின்முன்னா
குலவாய ராவலைத் தீராது
கானே குவைபெண்களால்
குலவாய யராகம் தலைக்கேறி
வீணாள் குலைய வெந்த
குலவா யரவிற் கெடுவேனைக்
கா புல்லைக் குட்பரனே. 98

குல ஆயர் ஆன் கன்று எனப்
புகுவாய், கோகுலன் இல்முன்னில்
ஆகுல ஆயர் ஆவலைத் தீராது
கான் ஏகுவை பெண்கள்
அல்குல் அவாய் அராகம் தலைக்கேறி
வீணாள் குலையவெம்
நகுலவாய் அராவிற் கெடுவேனை
கா புல்லைக்கு குட்பரனே!

விளக்கம்:

கோ குலத்தினில் ஆயர் குலத்தவருடைய கன்றுகளாகவும் பசுக்களாகவும் உரு எடுத்து அவரது இல்லங்களில் புகுவாய், முன்பு உன்னைப் பிரியும் துக்கப்பட்ட ஆயர்குலத் தாய்மார் களுடைய ஆசையைத் தணிக்காமல் கானகத்திற்கு ஏகுவாய்! பெண்களுடைய நிதம்பத்தை விரும்பி அந்த ஆசை மிகுந்ததால் வாழ்நாள் வீணாகக் கழியக் கொடிய கீரியின் வாய்ப்பட்ட பாம்பைப் போல் அழியும் என்னைச் சுமப்பாய்! புல்லாணிக்குள் விளங்கும் பரம்பொருளே! அராகம்-அவா; நகுலம் கீரி.

Koviloor Digital Library

குட்ட வியாதி பல தீரர
சாகுவன் முன்னம்பொ
குட்ட வியாதியினை வேந்துணா
துண்குவன் றண்புல்லைக்
குட்ட வியாதி லகும் பரன்கொப்
பூழ்க்குள் விழிமொக்
குட்ட வியாதிருந் துண்டாமண்
ணோடு ககோளமுமே. 99

குட்ட வியாதி பல தீர்
அரசு ஆகுவன் முன்னம்
பொகுட்டு அவியாதி யினை
வேந்துணாது உண்குவன், தண்புல்லை
தவியாது இலகும் பரன் கொப்பூழ் அவிழும்
மொக்குட்டு அவியாது இருந்து
உண்டாம் மண்ணோடு கோளமுமே.

விளக்கம்:

குட்டம் முதலிய பல நோய்களையும் தீர்க்கின்ற அரசு ஆவான் முன்னர் (வேள்விகளால் வந்த அவிர்ப்பாகங்க ளாகிய) தேவர்களது உணவை எல்லாம் தேவர்களின் அரசனான இந்திரன் உண்ணாமல்தானே உண்பான், புல் லாணிப் பகுதியில் வெப்பம் தராத ஒளிச்சுடராய் விளங்கும் பரமன், அவனது கொப்பூழ்க்குள் தான் மண்ணுலகும் வான மண்டலங்களும் அடங்கும். ககோளம்-வானமண்டலம். புல்லாணித் தலத்தில் தெய்வம் திருவரசு ஆகி விளங்கும் அதனைத் தெரிவிப்பர்க்கு நோய்கள் அணுகாது.

Koviloor Digital Library

கோளத்தனையு நிலைகுலை
யாதொளி கூர்ந்திவர்க
கோளத் தனைபெரு வீடுடை
யானை குறைவனு மீக்
கோளத் தனைவிட ணற்கெளி
யானைக் குணந்துதியுங்
கோளத் தனைச்சொல மிக்கானை
வந்த குளிர் புல்லையே! 100

கோள் அத்தனையும் நிலைகுலையாது
ஒளிகூர்ந்து
இவர் ககோளத்தனை பெருவீடு
உடையானை குறைவறும்
மீக்கோள் அத்தனை வீடணர்க்கு
எளியானை குணம்
துதியுங்கள் அத்தனைச் சொல்
மிக்கானை வந்து குளிர்புல்லையே!

விளக்கம்:

வான்கோள்கள் அத்தனையும் தத்தம் நிலையினின்று மாறாது செய்து சுடர் மிகுந்தவனாய் (வாகனமாய்) ஏறிச் செல்கின்ற வான வாட்டம் உடையானை பெருவீடு எனும் சுவர்க்கத்தினை தனதாகக் கொண்டவனை எக்குறையும் இல்லாத சகலலோகத் தந்தையை விபீஷனனுக்கு (அடைக்கலம்தர) மிகவும் எளிமை யானவாய் இருந்தவனை, எல்லோரினும் மிகுந்தவனை உடல் மனம் ஆகியவற்றில் ஏற்படும் வெப்பம் தீர திருப்புல்லாணியில் வந்து துதித்து வணங்குங்கள்...

Koviloor Digital Library

திருவேங்கடவன் பன்மணி மாலை

கவிஞர் மு.நா.நாராயணன்
காரைக்குடி

காப்பு

வெள்ளி அலைகடலுள் மேவி அரவணையில்
பள்ளி கொளும் வேங்கடவன் பரதமே-தெள்ளுதமிழ்
பாக்கள் பலமணியாய்ப் பல்கிவர என்னுளத்தே
நீக்கமற நிற்கும் நிலைத்து

கட்டளைக் கலித்துறை

1. பூம்புனலி லிடைநாகம் பொறிகலங்க நடமாடி
தேம்பலம் தீர்த்தருள் வரத திருவேங்கடத்தானே!
வேம்பென வென்சொல் நினைந்தோவேதனையில் எனைவிட்டாய்
சாம்புமெளி யேனுனையே சரணடைந்தேன் காப்பாயே!

2. வெல்லும் திறல்மிகு விற்கையன் வாழ்வட வேங்கடத்தில்
அல்லும் பகலும் அவன்புகழ் ஏத்தின் றற்புதமாய்
கல்லும் கரைந்திடக் கவிசொலியே யந்தக்கார்வணனை
புல்லிப் பணிவீருஉல கீருமக்கீது புண்ணியமே!

அறுசீர் ஆசிரிய விருத்தம்

3. எம்பெருமான் திருவுந்தித் தாமரைமீ[து]
இருப்பான் முன் ஈன்றளித்த
அம்புவியில் வாழ்உயிர்கள் அனைத்துக்கும்
அரணாகி அருளைத் தூவும்

Koviloor Digital Library

கம்புசுடர் திதிரியினான் வேங்டத்தில்
நின்றதிருக் காட்சி நல்கும்
செம்பவளத் திருவாயான் ஸ்ரீனிவாசன்
தாளை சிந்திப் போமே

(கம்பு-சங்கு)

4. துய்யருக்குத் துணையாகித் துலங்குநெறி
தனை வளர்த்துத் தூய்மை மின்ன
கையறவு தனையகற்றி கருணையொடு
கனிவு ளத்தில் கசியநின்று
ஐயமிலாத் தெளிவோடிவ் வகிலத்தின்
முழுமூலம் அவனே யென்று
செய்யமலர்க் கண்ணமலன் வேங்கடத்தான்
திருவடிகள் செபிப்போம் வாரீர்.

(கையறவு-துன்பம்)

எண்சீர் வண்ண விருத்தம்

5. வம்புபேசிப் பல கோபியர் ஆடை
மறைத்து வைத்துவிளை யாடினை! அவையில்
தெம்பி ழந்துயிரு செங்கரம் தூக்கி
தேவ நின்னபயம் என்னலும் தானை
பம்பு வெள்ளமெனத் தந்தவ! உறியைப்
பற்றி வெண்ணைதயிர் உண்டவ! உன்னை
நம்பும் ஏழையெனக் குன்னைய லாதோர்
நாதியேது புகல் வேங்கட நாதா!

6. துங்க மாதவரும் போற்றிடு நின்றன்
துய்ய தாளிணைகள் பற்றிய நாயேன்
கங்கு லானதுயர்க் கடலிடை மூழ்கி
கதறு மோசைசெவி கேட்கிலை யோ?முன்

Koviloor Digital Library

சிங்க மாகியடல் கனகனின் ஆவி
சிந்து வித்து அவன் சேய்மகிழ்வுறவே
துங்க மாமுடிகள் சூட்டினை! எளியன்
துயர் உனக்கு ஒரு தூசிய தாமோ?

தூது

7. பலமுறை தூதென அளிகுயில் மேகம்வீ தத்தையென
செலவிடுத் தும்அந்த வேங்கடம்மேவிய தேவனெனை
அலமரலே செய வாடிநொந்தே தொடர்ந்தாசையில்என்
உளமதையே விடஅதுபோய் அவனடி ஒதுங்கியதே

பதினான்குசீர் வண்ண விருத்தம்

8. கன்றி வெம்பகடி வர்ந்[து] அதிர்ந்துவரு
காலனார் கொடிய கோபமாய்
கயிறு வீசியென தாவியும் கவர
கருதுபோதி லருள்செய் தாள்வதார்?
ஒன்றி நின்றுஉற வாடு சுற்றமொடு
உற்றநண் பருங்கை விட்டிட
உதவியின்றி மிக மதிமயங் கியென
துணர் வழிந்துவிழி சொருகவே
சென்ற நாளில்பல செய்த தீவினைகள்
சேர்ந்து வந்துபழி கொள்ளவே
செய்வ தொன்றுமறி யாது காக்கஎன்
தெய்வமே என வணங்கினேன்
மன்றில் நின்றுகுல மங்கை கூவியழ
வந்துநின் றருள்செய் மாதவா!
மங்கலம் பொலிய இந்திரன் சபைவ
ளந்துலங்கு மெழில் வேங்கடா!

Koviloor Digital Library

அம்மானை

9. சீதளம்சேர் ஏழுமலைத் தெய்வமெனும் வேங்கடவன்
போதுறைவாள் தன்னைநெஞ்சில் பொருத்தினான் அம்மானை
போதுறைவாள் தன்னைநெஞ்சில் பொருத்தினான் ஆமாகில்
பூதலத்து மாதைவிட்டுப் போனானோ அம்மானை
மாதவளை மெல்லத்தன் வாயிலிட்டான் அம்மானை!

எண்சீர்க் கட்டு தாழிசை

10. கவலைக்கடல் சுவறப்பொரு கண்ணா! மணிவண்ணா!
கன்றால்விள வெறிந்தாய்! அளை கள்வா!திரம் உள்ளாய்
தவவேள்வியர் பவவேர்கொலும் தனியா! அனை அனையாய்
தருமாதியர் துணையாய் நலம் தந்தாய்! வரம் தந்தாய்!
திவம்ஊடிருள் வரவேசுடர் திருவாழியி லொளித்தாய்
தினம்நாரணத் திருமந்திரம் செபிப்போர்க் கொளிதந்தாய்
அவமாயையில் உழலாவணம் அடியோர்க் கருள் செய்வாய்!
அமராதியார் தொழுவேங் கடத்தமலா எமையாள்வாய்!

(திவம்-பகல்)

கட்டளைக்கலிப்பா (மடக்கு)

11. வேங்கடத்தில் நின்றவ ரோதயா!
வேதஞான தவத்திய ரோதயா
ஓங்குநின் பதத்தினை யுற்றவா
உகந்தவர்க் கருள்பொன்னினை யுற்றவா
வீங்க லைக்கடல் வற்றிடச் சுட்டவா
விமல நன்னெறிகற்றிடச் சுட்டவா
தாங்கு திண்புவி யளந்திடு மையனே
தமியனேர்க்கருள் வேங்கடமையனே!

Koviloor Digital Library

பொருள்விளக்கம்: வேங்கடத்தில் நின்ற வரோதயா! திருவேங்கட மலையில் நின்று வரம் அருள் பவனே! வேதஞான + தவத்தியர் + ஓது + ஐயா = வேதங்கள் கற்ற, தவம்புரிந்தவர்கள் துதிக்கும் ஐயனே. ஓங்கு + நின் + பதத்தினை + உற்று + அவா + உகந்தவர்க்கு + அருள் + பொன்னை + உற்றவா = உயர்ந்த உனதுதிருவடிகள் மீது ஆசை கொண்டு போற்றுவர்களுக்கு அருள் செய்யும் திருமகளை அடைந்தவரே. வீங்கு + அலைக்கடல் + வற்றிடச் + சுட்டவா = பெருகிவரும் அலைகளைக் கொண்டகடல் வற்றுமாறு சுட்டெரிக்கும் பாணம் தொடுத்தவனே. விமல + நன்னெறி + கற்றிட + சுட்ட + வா=குற்றமற்றவனே! நல்லநெறிகளை நான் கற்குமாறு சுட்டிக் காட்டுவதற்கு வருவாயாக! தாங்கு + திண்புவி + அளந்திடும் ஐயனே = அகண்ட இப்பூமியை ஓரடியால் அளந்த ஐயனே தமியனேர்க்கு + அருள் + வேங்கட + மையனே! எளியவனான எனக்கு அருள் செய்யும் வேங்கடமலையில் உள்ள மைவண்ணப் பெருமானே!

தலைவி இரங்கல் (தாழிசை மடக்கு)

12. அப்புமேலர வணையினா னெனை
    அப்பு மால்கெட வணைகிலான்!
அளிகவர் துள வணியினா னென[து]
    அளிகம் மீதுள மகிழ்விலான்!
செப்ப நாள்மல ருத்தியான் தினம்
    செப்பு மார்வமது சிந்தியான்
செம்பருந் தெனும் ஊர்தியான் சுடர்
    செம்பொ ருள்ளனை தேர்கிலான்
கைப்பரும் படை ஐந்தினா னனம்
    கைப்படைந் உந்தினான்
காம ராசனைப் படைத்துளான் எனக்
    காம ராகம தடைக்கிலான்!

Koviloor Digital Library

மைப்பளை தயிர் வாயினான் விழி
மைப்புனல் தரப் போயினான்
மாதவர் புகழ் வேங்கடத் திலுள
மாதவன் மிகவும் வஞ்சனே!

பொருள் விளக்கம்: அப்பு + மேல் + அரவு+அணையினான் பாற்கடலின் மீது பாம்பணையில் உள்ள வேங்கடநாதன் எனை + அப்பும் + மால் + கெட + அணைகிலான் என்னை வாட்டும் காதல் மயக்கம் தீரும்படி என்னை அணைத்து கொள்ள மாட்டான் அளி + கவர் + துளவ + அணியினான் = வண்டுகள் மொய்க்கின்ற துளசிமாலை அணிந்தவன்! எனது + அளிகம் + மீது + உளம் + மகிழ்விலான் என்னுடைய கட்டழகில் (அளிகம் = கட்டழகு) மீது மனமகிழ்வு எய்தமாட்டான்! செப்ப + நாள்மலர் + உந்தியான் செவ்விய தாமரை மலராலான தொப்புள் கொடியுடையான், தினம் + செப்பும் + ஆர்வம் + அது + சிந்தியான் = அவனை நினைத்து தினம்தோறும் நான் கூறும் ஆர்வம் மிக்க மொழிகளை எண்ண மாட்டான். செம்பருந்து + எனும் + ஊர்தியான் = செம்மை. நிறமுடைய கருடனை வாகனமாய் கொண்டவன் சுடர் + செம்பொருள் + எனை + தேர்கிலான் ஒளிமிக்க கடவுளான அவன் என்னை தனது காதலியாக தேர்வு செய்யமாட்டான்! கை + பரும் + படை + ஐந்தினான் ? கையில் ஆயுதங்கள் ஐந்தினை உடையவன்! அனம் + கைப்பு + அடைந்திட + உந்தினான்- நான் உண்ணும் அன்னம் கசந்து போகும்படி என்னை வருத்தினான்! காமராசனை + படைத்துளான் = காமராசனான மன்மதனை படைத்தவன், எனக்கு + ஆம் + அராகம் + அது + அடைக்கிலான் - அவன் மீது கொண்ட அடங்காத காதலைத் தீர்க்க மாட்டான்! மைப்பு + அளை + தயிர் + வாயினான் மத்தால் கடையப்பட்ட வெண்ணை தயிரை உண்ட வாயை உடையவன்! விழி + மை + புனல் + தரப் + போயினான் = அவனது பராமுகத்தால் எனது விழிகளில் இட்ட மை கரையும் படிகண்ணீர விடச் செய்து போய்விட்டான்! மாதவர் புகழ் வேங்கடத் தில்உள மாதவன்

Koviloor Digital Library

மிகவும் வஞ்சனே-எனக்கு இவ்வளவு துன்பம் நேர்வதற்கு காரணமானவனும், பெரும்தவம் செய்தவர்கள் போற்றும் வேங்கட மலையில் உள்ள திருவேங்கடவன் எனக்கு மிகவும் வஞ்சனை செய்துளான்.

13. கண்ணுளே நின்றான் கருத்துளே நின்றான்
காலையும் மாலையும் இரவும்
பண்ணிய செயலாய், பாடிய இசையாய்,
பசிக்குனும் உணவுமாய் என்னுள்
புண்ணியப் பயனாய் பொருந்திய தலைவன்
பொசுக்கென ஓர்கணத் தெனையே
மண்ணென நினைத்து மறைந்த வேங்கடத்து
மாதவன் செயலது நன்றோ?

(திருவேங்கடநாதனை மருவியிருந்த மங்கை அவன் திடீரென பிரிந்து மறைந்த ஏக்கம் பாடலாய் மலர்கிறது)

நற்றாய் இரங்கல்

14. செம்புள் மிசை பெருமான் வர
சிறியேன் மகள் கண்டாள்
சிற்றாடையும் விட்டாள் வளை
விட்டாள் மயல் தொட்டாள்
அம்பாகிய விழியில் புனல்
ஆறாய் வர விட்டாள்
அன்னந்தனைக் கொன்னஞ்சென
அயிலாள் இளம் மயிலாள்
வம்பேசொலும் மடவார் அலர்
வசை பேசிட நின்றாள்
மருவே திகழ் குழல் மீதணி
மலரும் வெறுத் தொன்றாள்!
தெம்போ டவள் உயிர் வாழ்ந்திட
திருவேங்கடத் துறையும்

Koviloor Digital Library

திருமால் வருவானோ எவர்
தெரிவார் எனக்கு உரையீர்

கொன்னஞ்செசன = கொல் + நஞ்சு + என, அயிலாள் = உண்ணமாட்டாள்

(பொது)

15. மாயை யினால் துயருழந்து மனங்கலங்கி
உடல்துவள வாடும் என்மேல்
நேயவழி தனைக்காட்ட யாவருளர்
நினையன்றி நெடுமாலே நான்
தீயநெறி சேராமால் சிந்தனைசொல்
செயல் மூன்றைச் செம்மையாக்கி
தாயெனவே எனைக்காப்பாய் வேங்கடத்தாய்
எளியவன்பால் தயை செய்வாயே!

16. இலங்குசினை நாவல்நின்ற தால்சம்புத்
தீவெனப்பேர் இயைப் பெற்றே
விளங்கிடுபா ரதம்நடுவே வேங்கடத்தின்
நிற்குமொரு விசுங்கத்தாலே
நலங்கிளரும் தெக்கணத்தில் நஞ்சையொடு
புஞ்சையெலாம் நனையப்பெற்றே
வளங்கொழிக்கும் உயிர்தழைக்க
வருவரதன் தாளிணைகள் வணங்குவோமே!

(விசுங்கம் = மேகம்)

17. ஆழங்கால் பட்டதமிழ் ஆர்வத்தால்
வேங்கடத்து ஐயன்தாளில்
வீழுங்கால் பலவாறாய்க் கவியூற்று
என்னெஞ்சில் விளையஅன்பால்
வேழங்கால் பற்றுகரா விரைந்தழித்த
அவன்கீர்த்தி விளங்கும்பாடல்

Koviloor Digital Library

நாளும்நான் உரைத்திடுவேன் நாராயணா
வென்னும் நாமம்சொல்லி

18. வெற்றுப் புகழ்சொல் கவியபாடி
யீயாத வீணரைப்போய்
சுற்றி நிற்பீர் நல் குரவென்றும்
வந்தும்மைச் சூழ்ந்நிடவே
கற்றும் தெளியாப் புலவீர்
வேங்கடச் கமலாட்சனைப்
பற்றிப் பணிந்தந்தப் பரமனின்
மெய்ப்புகழ் பாடுங்களே!

19. ஓங்கியுல களந்தவுன்றன் வடிவால் அஞ்சி
உருந்திரனோ விடமுண்டான்! உலகம் யாவும்
தாங்கிவளர் சக்தி உடல் பாதியானாள்!
சண்முகனோ உலகைவெறுத் தாண்டியானான்!
வீங்குதரக் கணபதியால் நிழல்கீழு ற்றான்!
விண்ணவர்கோன் கரந்துருவம் வேயாய்ஆனான்!
பாங்கருள்செய் வேங்கடநான் பயமே யின்றி
பரம உன திருகழல்கள் பற்றி னேனே!

வீங்குதர = வீங்கு + உதர (உதரம் = வயிறு)

(இது ஒரு நகைச்சுவை பாடல் இயற்கையாகவே சிவன் விடம் உண்டதையும் சக்தி சிவன் உடலில் பாதியானதையும் முருகன் பழம் விரும்பி ஆண்டிக் கோலம் கொண்டதையும் விநாயகன் ஆலமரத்திடியில் அமர்ந்ததையும் இந்திரன் சூரபத்மனுக்கு அஞ்சி மூங்கில் வடிவம் பெற்றதையும் பெருமானின் விஸ்வரூபத்தை கண்டு அஞ்சியதால்தான் எனக் கற்பனை செய்து பாடப்பட்ட பாடல்)

Koviloor Digital Library

பதினான்கு சீர்த்தாழிசை மடக்கு

20. *பாற்கடல் அமுது அளித்த வானவனே!*
பகையறக் களித்த வானவனே!
பங்கயப் பொகுட்டா தனத்திரு வினனே!
பசுக்கள் வந் தனத்திரு வினனே!
ஆர்க்குபே ரொலியாய் சங்க மார்த்தவனே!
ஆய்ச்சியர் சங்க மார்த்தவனே!
ஆனையைப் புரக்க விரைந்த மாதிரனே!
அரணென விரைந்த மாதிரனே!
பார்க்குளோர் வணங்கு மந்திரத் தவனே!
பவங்கொ லெண் மந்திரத்தவனே!
பரிமளத் துளவம் தரித்த வம்மானே!
பழனியா தரித்த வம்மானே!
சீர்க்கடல் கரந்து மீண்டமீனவனே!
திசைமுகன் தனையுமீனவனே!
திருமதி உதித்த வீரை நாரணனே!
திருமலை வாழு நாரணனே!

பொருள் விளக்கம்: பாற்கடல் அமுது அளித்த வானவனே = பாற்கடலைக் கடைந்து அமிர்தம் கொடுத்த பெருமை உடையவனே.

பகை + ஆற + களித்த + வானவனே = அவதாரம் தோறும் அசுரர் குலத்தை அழித்து மகிழ்ச்சி பெருமிதம் கொண்டவனே.

பங்கய + பொகுட்டு + ஆதனத் + திருவினனே = தாமரைமலரின் நடுப்பாகத்தை ஆசனமாய் கொண்ட திருமகளை உடையவனே.

பசுக்கள் + வந்தன + திருவினனே = கோவர்த்தன கிரியால பசுக் கூட்டத்தைக் காத்ததால் அவை செய்த வந்தனங்ளால் மேன்மை பெற்றவனே.

Koviloor Digital Library

ஆர்க்கு + பேரொலியாய் சங்கம் + ஆர்த்தவனே=பகைவர் அஞ்சும்படி பாஞ்ச சன்னியமெனும் சங்கில் பேரொலி முழக்கியவனே.

ஆய்ச்சியர் + சங்கம் + ஆர்த்தவனே = ஆயர் மகளிர் கூட்டத்திதை கட்டித் தழுவியவனே!

ஆனையைப் + புரக்க + விரைந்த + மா + திரனே = கசேந்திர ஆழ்வாரை முதலைவாயில் இருந்து காப்பதற்கு விரைந்து வந்த பெருமைக்குறிய தலைவனே!

அரண் + என + இரைந்த மாது + இரனே = துரியோதனது சபையில் கண்ணாஅபாயம் எனக் கூவியழைத்த திரௌபதியின் வேண்டுகோளினை ஏற்றவனே.

பார்க்கு + உளோர் + வணங்கும் அம் + திரத்தவனே = பாரில் உள்ளவர்கள் வணங்கும் அழகும் நிலைபேறும் உடையவனே. (திரம் = நிலைபேறு)

பவம் + கொல் + எண் மந்திரத்தவனே = பவவினைகளை அழிக்கும் எட்டெழுத்தது மந்திரத்துக்கு உரியவனே.

பரிமள + துளவம் + தரித்த + அம்மானே = வாசனைமிக்க துளசி மாலையினை அணிந்த பெருமை படைத்தவனே.

பழனி + ஆதரித்த + அம்மானே = பழனி(முருகன்) அன்புகாட்டும் மாமனே.

சீர்க்கடல் + கரந்து + மீண்ட மீனவனே = கடலின் அடியில் ஒளித்து வைத்த வேதங்களைக் கடலுக்குள் புகுந்து மீட்டுக் கொணர்ந்த மச்ச அவதாரனே.

திசைமுகன் + தனையும் + ஈன் அவனே = நான்முகனாகிய பிரம்மனை ஈன்றவனே!

திரு + மதி + உதித்த + வீரை நார் + அண் + அனே = திருமகளான இலக்குமியும் சந்திரனும் தோன்றிய பார்க்

Koviloor Digital Library

கடலிடத்து விருப்பம் பொருந்திய தாய் போன்றவனே! வீரை = கடல்.

திருமலை + வாழும் + நாரணனே = திருமலையில் வாழும் ஸ்ரீமன் நாராயணனே!

ஒவ்வொரு அரை அடியிலும் வந்த சொற்களே மீண்டும் வந்து இருவேறு பொருள் தரும் மடக்கணி அமைந்தபாடல்

21. கலியில் கலிதீர்க்கும் கடவுளாம் வேங்கடத்து
மலைவாழ்வே! எந்தன் மனவாழ்வே! விலைமதியாத்
தமிழாலே பன்மணிகொள் தார்சூட்டினேன் எனக்குன்
அமிழ்தாம் அருளை அளி.

22. வீரங்கைவர். எனக்குளே நின்று
விளைத்திடும் பூசல்களான
கோரவெஞ்சூது பொய்மை பொல்லாங்கு
கொடுமைசெய் வஞ்சகம் யாவும்
காரரங்காநின் கண்ணொளி யாலே
கருக்குவாய் ஆற்றிடைமுன்னம்
போரரங்காக பணிமிசை நடனம்
புரிந்தவேங் கடத்துறை புனிதா!

நிந்தாஸ்துதி

உண்ணுமுண வோவெறும் மண்ணாகும் நீ படுத்[து]
உறங்குவது பாம்பின் மேலே
ஒருதாரம் அசைகிலாள் ஒருதார மலரினாள்
ஒருமகன் தீயில் வெந்தான்
இன்னுமொரு மகன்தலை இழந்துஒரு சிறுவனால்
இருஞ்சிறையி லேயிருந் தான்
எயினனொடு குரங்கினை அசுரனை நீ மகிழ்ந்
தேற்றுடன் பிறப்பாக்கினாய்

Koviloor Digital Library

பெண்ணும் கடத்தினாய் கட்டுப்பட் டாய்உடன்
பிறந்தவொரு தங்கை நீலிப்
பெண்! அவள் கணவனோ மண்சுமந் தடிவாங்கி
பித்தனாய் பிச்சை யேற்றான்
மன்னுலகில் நின்பெருமை எண்ணஅரி தே !உந்தன்
மகிமையும் சொலஅரி யதே!
மலையேழு தன்னிலிவ் வுலகேழும் ஆண்டருளும்
வள்ளலே! வெங்கடேசா!

(விளக்கம்: ஒருதாரமாகிய நிலமகள் அசைவு இல்லாதவள் இன்னொரு தாரமாகிய இலக்குமி (அலர் = பூ) பூவில் இருப்பவள் (அலறினாள் = கதறினாள்) ஒருமகனான மன்மதன் எரிக்கப்பட்டான் இன்னொரு மகனான நான்முக னானவன் சிவனால் தலை கொய்யப்பட்டு முருகனால் சிறைவைக்கப் பட்டான். குகன் சுக்ரீவன், விபீஷணன் ஆகியோரைம் தம்பின்னால் ஏற்றார், ருக்மணியைக் கடத்திச் சென்றார், உரலில் கட்டப்பட்டவர் அவரது தங்கையான பார்வதி நீல நிறத்தவர் அவளது கணவனான சிவன் பிட்டுக்கு மண் சுமந்து அடிபட்டு. பித்தனாக பிச்சை ஏற்றவர்)

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 35881

Koviloor Digital Library

Koviloor Digital Library